# நாட்டுப்புறப் பாடல்களில் வரலாற்றுச் செய்திகள்

ச. முருகானந்தம்



உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

# நாட்டுப்புறப் பாடல்களில் வரலாற்றுச் செய்திகள்

**ச. முருகானந்தம்**
முதுநிலை விரிவுரையாளர்
தமிழ்த்துறை
காமராசர் கல்லூரி
தூத்துக்குடி - 628 003

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
டி. டி. டி. ஐ. (அஞ்சல்), தரமணி, சென்னை - 600 113.

கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனார்
அறக்கட்டளைச் சொற்பொழிவு—3
(19, 20-11-1991)
Kappalōṭṭiya Tamiḻar Va. U. Citamparaṉār
Endowment Lecture No—3
Endowment Lectures—Publication No. 26

## BIBLIOGRAPHICAL DATA

| | | |
|---|---|---|
| Title | : | Nāṭṭuppuṟap Pāṭalkaḷil Varalāṟṟuc Ceytikaḷ |
| Author | : | S. Muruganantham, Senior Lecturer, Dept. of Tamil, Kamarajar College, Tuticorin-628 003. |
| Publisher & Copy right | : | International Institute of Tamil Studies T.T.T.I. (Post), Taramani, Madras-600 113. |
| Publication No. | : | 159 |
| Language | : | Tamil |
| Date of Publication | : | December, 1991 |
| Edition | : | First |
| Paper used | : | MANDYA 60 Gsm |
| Size | : | 21 × 14 cms |
| Printing types | : | 10 pt. |
| Number of copies | : | 1200 |
| Number of pages | : | X + 115 |
| Price | : | Rs. 18/- |
| Printers | : | Kavinkalai Achagam, Kandhasamy Nagar, Palavakkam, Madras-600 041 Phone : 41 71 41 |
| Binding | : | Board Binding |
| Artist | : | Nadan |
| Subject | : | Historical Events in Folk songs. |

* அறக்கட்டளைச் சொற்பொழிவாளர் கருத்துகளுக்கு நிறுவனம் பொறுப்பல்ல.

# பதிப்புரை

தமிழர் பெருமையைத் தரணிக்குணர்த்திய தகைசால் தலைவர், கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனார் பெயரில் அமைந்துள்ள அறக்கட்டளையின் மூன்றாவது சொற்பொழிவின் நூல்வடிவம் இது. முன்னிரு சொற்பொழிவுகளும் வ. உ. சியின் வாழ்க்கையையும் படைப்பையும் முறையே 'செக்கிழுத்த செம்மல் சிதம்பரனார்', 'தமிழ் தந்த வ. உ. சி.' ஆகிய தலைப்புகளில் அமைந்தன.

நாட்டுப்புறப் பாடல்களில் காணப்படும் வரலாற்றுச் செய்திகளில் சிலவற்றை இந்நூல் ஆய்வு செய்கிறது. எனவே வரலாற்றுத் தலைவருக்குச் செய்யும் அஞ்சலியாகவும் அமைந்துள்ளது. இந்திய விடுதலைப் போராட்டச் செய்திகளும் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. 'வரலாற்றை அறிய முடியாத நிலையில் எந்த மூலங்களும் இல்லாத மக்களின் வரலாற்றை அறிய நாட்டுப்புறப் பாடல் உதவும் என்பதற்குப் போலினீசியத் தீவில் நியூசிலாந்துப் பகுதியில் வாழும் மோவாக் குடியினர் பாடும் நாட்டுப்புறப் பாடல் சான்றாக உள்ளது. இவர்கள் ஹவாய்த் தீவிலிருந்து வந்து சேர்ந்தவர்கள் என்பதை அவர்கள் பாடும் பாடல் காட்டுகிறது (ப. 22) எனும் ஆசிரியர் காட்டும் மேற்கோள், இத்தகு ஆய்வின் தேவையை வலியுறுத்துகிறது.

எதிர்கால ஆய்விற்கு ஒரு முன் வரைவாக இந்நூலை ஆக்கித் தந்துள்ள, தூத்துக்குடி, காமராசர் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. ச. முருகானந்தம் அவர்கட்கு நிறுவனம் நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறது.

நிறுவனத்தில் இவ்வறக்கட்டளையை நிறுவிய அன்பர்கட்கும் நிறுவனம் நன்றி செலுத்துகிறது. இவ்வறக்கட்டளைச் சொற்பொழிவு நிகழத் துணை நின்ற, நிறுவன முன்னாள் இயக்குநர் முனைவர் சிலம்பொலி, சு. செல்லப்பன் அவர்கட்கும், நூலாக்கத்திற்குத் துணை நின்ற இயக்குநர் (பொறுப்பு) முனைவர் அன்னி தாமசு அவர்கட்கும் நன்றி. சொல்லகராதி தயாரித்தளித்த மாணாக்கர் திரு. அ. லோ. பழனிசாமிக்கும், அழகுற அச்சிட்டுத் தந்துள்ள கவின்கலை அச்சகத்தாருக்கும் நிறுவனத்தின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை
20-12-'91

அன்புடன்
**ச. சிவகாமி**
அறக்கட்டளைப் பொறுப்பாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்



# ஆசிரியர் அறிமுகம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | **ச. முருகானந்தம்** |
| பிறப்பு | : | 15-8-1955 |
| ஊர் | : | செங்கற்பட்டு மாவட்டம், அரியப்பாக்கம் |
| பணி | : | முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை, காமராசர் கல்லூரி, தூத்துக்குடி. |
| கல்வித்தகுதி | : | எம். ஏ., எம். எட்., டிப். (காந்தியம்) |

நாட்டுப்புற விலக்கியத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். நாட்டுப்புறவியல் தொடர்பாக, நாட்டுப்புறவியல் சிந்தனைகள் (1987), களப்பணிக் குறிப்புகள் (1991) முதலான சில ஆய்வுகளும், பல பதிப்புகளும் (அழகுத்தேவர் கதைப்பாடல், ஆரவல்லி சூரவல்லி மரகதவல்லி கதைப் பாடல்...) வெளியிட்டவர். 'பொழுது புலர்ந்தது' (1990) நூல்வழித் தம்மைப் படைப்பாள ராகவும் அறிமுகப்படுத்திக் கொண்டவர். தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் குறுங்கால ஆய்வுத்திட்டத்தின் வழி 'கடற்கரைப் பரதவர் கலைச் சொல்லகராதி' எனும் (1990) நூலையும் தந்துள்ளார். பிறவிலக்கியங்களிலும் பயிற்சியுடையவர் என்பதை இலக்கியநயம் (1991), இலக்கிய ஆய்வு (1991) போன்ற நூல்களால் உணர்த்தியுள்ளார்.

முனைவர் பட்டத்திற்காக மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திற்கு 'இராமநாதபுரம், திருநெல்வேலி மாவட்டக் கடற்கரைப் பரதவர் நாட்டுப் பாடல்' எனும் தலைப்பில் ஆய்வுரை (1991) அளித்துள்ளார்.

# முன்னுரை

வ. உ. சிதம்பரனார் அறக்கட்டளை சார்பில், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 1990 நவம்பர் 19, 20ஆம் தேதிகளில் நிகழ்த்திய சொற்பொழிவு 'நாட்டுப்புறப் பாடல்களில் வரலாற்றுச் செய்திகள்' எனும் பெயரிய நூலாக வெளிவருகிறது.

இந்திய வரலாற்று ஆதாரங்களில் இலக்கியமும் ஒன்று என்பர் வின்செண்ட் ஸ்மித். இலக்கியத்தின் பிரிவாகிய பாமரர் இலக்கியம் - நாட்டுப்புற இலக்கியம் வரலாற்றுச் செய்திகளையும் உள்ளடக்க மாகக் கொண்டிருப்பதைக் கற்றோர் அறிவர். வரலாற்றாளர் வரலாற்றைப் பல பிரிவுகளாகப் பிரிப்பர். அரசியல் வரலாறு அறிவுத்துறை வரலாறு, இயற்கை வரலாறு, சமய வரலாறு, சமுதாய வரலாறு, பொருளாதார வரலாறு, போர் வரலாறு எனப் பாகுபடுத்துவர் ந. சுப்பிரமணியன். நாட்டுப்புற இலக்கியத்தின் ஓர் உட்பிரிவாகிய நாட்டுப்புறப் பாடல்களில் பொதிந்திருக்கும் வரலாற்றுச் செய்திகளை மேற்காட்டிய வரலாற்றுப் பிரிவுகளின் படி இந்நூல் விளக்கிக் காட்டுகிறது.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட ஏற்றுமதி, இறக்குமதி வணிகம் முதல் அண்மைக் காலத்தில் விண்ணிலிருந்து வீழ்ந்த விண்ணாய்வுக்கூடம் வரையிலான வரலாற்றுச் செய்திகளைக் காட்டுகிற சான்றாதாரங்களாக நாட்டுப்புறப் பாடல்கள் திகழும் விதம் இந்நூலில் காட்டப்பட்டுள்ளது.

கி. மு. 3ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 2ஆம் நூற்றாண்டு (சங்க காலம்) வரையிலான காலக்கட்டத்தில் நடந்த ஏற்றுமதி, இறக்குமதி வாணிகம், கி. பி. 7ஆம் நூற்றாண்டில் திருஞான சம்பந்தர் மதுரைக்கு வந்து மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் வேண்டுகோளுக்கிணங்க மன்னன் கூன் பாண்டியனைச் சமண சமயத்தினின்றும் சைவ சமயத்துக்கு மாற்றியமை, சமணர்களோடு வாதம் புரிந்து அவர்களைத் தோற்கடித்தமை, கி. பி. 17, 18ஆம் நூற்றாண்டுகளில் ஆங்கிலேயர்க்கும் பிரஞ்சுக்காரர்க்கும் அவர்தம் அரசியல் கூட்டணியினர்க்கும் இடையே நிகழ்ந்த போர்கள், 1877இல் பெருஞ்சேதத்தை உண்டுபண்ணிய தாது வருடப் பஞ்சம், 1914இல் தொடங்கிய முதல் உலகப்போரில் ஜெர்மனி கடற்படைக் கப்பல் சென்னையில் குண்டுகள் வீசி நடத்திய தாக்குதல்,

இந்நூற்றாண்டின் முன்பாதியில், அரசியல் சுதந்திரம் பெறுவதற்காக நடத்தப்பட்ட போராட்டங்களின் காலக்கட்டத்தில் நம்மவர் வெள்ளையர் மீது கொண்டிருந்த எதிர்ப்புணர்வு, இதற்குக் காரணமாய் அமைந்திருந்த வெள்ளையரின் அடக்குமுறை, சுரண்டல், 1957இல் நடந்த அரியலூர் இரயில் விபத்து, இரண்டாவது பொதுத் தேர்தல், 1964இல் நிகழ்ந்த தனுஷ்கோடிப் புயல், மதுரை சரசுவதி பள்ளிக்கூடம் இடிந்த விபத்து, 1980இல் பெருகிய வைகை வெள்ளம், 1981இல் விண்ணாய்வுக் கூடம் (Skylab) பூமியில் வந்து விழுந்தமை ஆகிய வரலாற்று நிகழ்ச்சிகள் நாட்டுப்புறப் பாடல்களில் பதிவாகி உள்ளன. இவற்றை விளக்கிக் காட்டும் முறையில் இந்நூல் அமைந்துள்ளது.

நாட்டுப்புறப் பாடல்கள், கதைகள், கதைப்பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள், பழைய நினைவுகள், பழைய கதைகள் ஆகிய மொழிப் பயன்பாடுடைய நாட்டுப்புற வழக்காறுகள், மொழிப்பயன்பாடில்லாத பிற வழக்காறுகளைக் காட்டிலும் அதிகமாக வரலாற்றை உணர்த்தவும் கூறவும் வல்லன. நாட்டுப்புறக் கதைப் பாடல்கள் பலவற்றைப் பதிப்பித்த நா. வானமாமலை, அந்நூல்களுக்கு எழுதிய ஆராய்ச்சி முன்னுரைகளில், அவை வரலாற்றைச் சிறந்த முறையில் விளக்கிச் சொல்லும் பாங்கினைப் புலப்படுத்தி உள்ளார். மேற்காட்டிய ஒவ்வொரு வழக்காற்று வடிவங்களும் அவற்றைச் சேர்ந்த வழக்காறுகளும் சிறந்த முறையில் நம் பழைய வரலாற்றை நேரடியாகவோ, மறைமுகமாகவோ கூறுகின்றன. இவற்றுள் நாட்டுப்புறப் பாடல்கள் எவ்விதம் வரலாற்று ஆவணங்களாக விளங்குகின்றன என இந்நூலில் காட்டப்பட்டுள்ளது. ‘நாட்டுப்புறக் கதைகளில் வரலாற்றுச் செய்திகள்’, ‘பழமொழிகள் காட்டும் வரலாறு’ என்றெல்லாம் தனித்தனியாக ஆய்வு நூல்கள் எழுதவியலும்; எழுத வேண்டும்.

சொற்பொழிவுக்கான நேர அளவு, இப்பொழிவு நூலாக்கம் ஆகிறபோது இருக்கவேண்டிய பக்க அளவு ஆகிய காரணங்களாலும், ஒரு குறிப்பிட்ட வடிவம் சேர்ந்த வழக்காறுகளை மட்டும் எடுத்துக் கொண்டுள்ளேன். அவை எவ்விதம் வரலாற்றைப் படம் பிடித்துக் காட்டுகின்றன எனக் கூறுகிறபோது ஏற்படும் ஒரு பொருள் குறித்த தெளிவு, துல்லியம் ஆகிய நோக்கங்களாலும் நாட்டுப்புறப் பாடல்கள் மட்டும் இந்நூலில் பயன்கொள்ளப் பட்டுள்ளன.

நாட்டுப்புறக் கதைப்பாடல்களை இதிகாச, புராணங்கள் சார்ந்த கதைப்பாடல்கள், சமூகக் கதைப்பாடல்கள், வரலாற்றுக் கதைப்பாடல்கள் எனப் பலவகையாகப் பாகுபாடு செய்வர். கட்டபொம்மு, கான்சாகிபு பற்றிய கதைப் பாடல்கள் வரலாற்றுக் கதைப் பாடல்களுக்குத் தக்க சான்றுகளாகும். இவை வரலாற்றை விரிவாகக் கூறுவன. கற்பனைப் புனைவுகளும் உயர்வு நவிற்சியும் இவற்றில் காணப்படுகின்றன எனினும் வரலாறும் துலக்கமாகவே புலப்படுகிறது. ஒரு நாட்டுப்புறப் பாடலில் வரலாற்றுச் செய்தி கூறப்பட்டுள்ளமைக்கும் நாட்டுப்புற வரலாற்றுக் கதைப்பாடலில் வரலாற்றுச் செய்தி கூறப்பட்டுள்ள மைக்கும் வேறுபாடு உண்டு. இது தனிப்பாடலுக்கும் காப்பியத் துக்கும் உள்ள வேறுபாடு போன்றது; புனைகதைகளில் (Fiction) ஒன்றான சிறுகதைக்கும் (Short story) புதினத்திற்கும் (Novel) உள்ள வேறுபாடு போன்றது. அளவும் நோக்கமும் இவ்வேறு பாட்டை உண்டாக்குகின்றன. வெவ்வேறான உணர்வு நிலைகளில் உருவான நாட்டுப்புறப் பாடல்களில் பொதிந்துள்ள வரலாற்றுச் செய்திகள், வரலாற்றுச் செய்திகளைப் புலப்படுத்த வேண்டும் எனும் நோக்கத்தில் கூறப்பட்டன என்பதைக் காட்டிலும் அவற்றைத் துணைவிளைவாகவே கொள்ளுதல் தகும். கல்லாடனார், பரணர், மாமூலனார் ஆகிய சங்கச் சான்றோர் தம் அகத்திணைப் பாடல்களில் புறச் செய்திகளாகிய வரலாற்றுச் செய்திகளை உவமைகளாகக் கூறியுள்ளனர். இவை வலிந்த முயற்சிகள் என்பதும் அகத்திணை நுவல் பொருள் புலப்பாட்டிற்கு ஊறு விளைவிப்பன, எண்ணவோட்டத்தைத் தடை செய்வன, இயல்புக்கு மாறான செயற்கைத் தன்மை உடையன என்பதும் ஒரு புறம் இருக்க, இவ்வகத்திணைப் பாடல்களின் முதன்மை நோக்கம் வரலாற்றைத் தெரிவிப்பன அன்று என்பது வெளிப்படை. நாட்டுப்புறப் பாடல்களில்—குறிப்பாகக் காதல் அல்லாத பாடுபொருட்களைக் கொண்ட பாடல்களில் இடம் பெறும் வரலாற்றுச் செய்திகள் பதிற்றுப்பத்து, புறநானூறு முதலான சங்கச் செய்யுள்களிலும் உலா, பரணி முதலான சிற்றிலக்கியங் களிலும் காணலாகும் அளவுக்கு இடம் பெற்றுள்ளன என்பது கருதுதற்குரியது. காதலைப் பாடுபொருளாகக் கொண்ட நாட்டுப்புறப் பாடல்களில் இடம்பெற்றுள்ள புறச்செய்திகளும் ஓரளவுக்கு வரலாற்றைக் காட்ட வல்லன.

இந்நூலில் இடம் பெற்றுள்ள வரலாற்றுச் செய்திகளை மையப்படுத்திய வரலாற்றுக் கதைப்பாடல்கள் ஏதும் இல்லை.

வரலாற்றுக் கதைப்பாடல் உருவாக்கத்திற்குக் கதையமைப்பு தேவை. இவற்றில் அப்படிப்பட்ட கதையமைப்பு இல்லை. கே. ஏ. குணசேகரன் தமது 'நகர் சார் நாட்டுப்புறக் கதைப் பாடல்கள்' எனும் நூலில் தந்திருக்கிற பாடல்களைக் கதைப் பாடல்கள் என்று கூற முடியாது. நிகழ்ச்சிகள் வேறு. கதைகள் வேறு. அரியலூர் இரயில் விபத்தும் தனுஷ்கோடிப் புயலும் சரசுவதி பள்ளிக்கூடம் இடிந்தமையும் விண்ணாய்வுக் கூடம் விழுந்தமையும் கதைகளாகுமா? ஆகாது. இவை நிகழ்ச்சிகள். மதுரை வீரன் கதை, கட்டபொம்மு கும்மி, கோவலன் கதை, நல்லதங்காள் கதை, அல்லியரசாணி மாலை ஆகிய கதைப் பாடல் களையும் அவற்றில் இடம்பெற்றுள்ள கதையமைப்புகளையும் மேற்குறித்த நிகழ்ச்சிகளைக் கூறுகிற சிறு அளவிலான பாடற் கண்ணிகளையும் ஒப்பிட்டு நோக்குவார்க்கு உண்மை விளங்கும்.

மணிக்குறவன் வெட்டுப்பட்ட நிகழ்ச்சியைக் கூறும் பாடலுக்கும் கட்டபொம்மு தூக்கிலிடப்பட்ட நிகழ்ச்சிக் கோவை களைக் கூறும் கதைப் பாடலுக்கும் வேற்றுமை உள்ளது. இவை யிரண்டையும் 'கதைப்பாடல்கள்' எனும் ஒரே தலைப்பின் கீழ் அடக்கும் முயற்சி சரியானதன்று. இரண்டு, மூன்று பாத்திரங் களும் ஒரு சிறு நிகழ்ச்சியும் இடம்பெறும் சிறுகதைக்கும் பல பாத்திரங்களும் பல்வேறு நிகழ்ச்சிகளும் இடம்பெறும் புதினத் திற்கும் உள்ள வேறுபாடு போன்றது அது. அரியலூர் இரயில் விபத்துப் பாடலுக்கும் இராமப்பய்யன் அம்மானை எனும் கதைப் பாடலுக்கும் வேறுபாடு உண்டு. தொடர்புடைய நிகழ்ச்சிகள் பலவற்றின் சேர்க்கையும் இவற்றுக்கிடையிலான கதைப்பின்னலும் ஒரு கதைப்பாடலுக்கு அடித்தளமாகின்றன. தனியொரு நிகழ்ச்சியைக் கூறும் பல பாடல் தொகுதிகளை ஒரு கதைப்பாடல் எனக் கொள்ளுதற்கில்லை.

ஒவ்வொரு முக்கியமான நிகழ்ச்சியும் மக்களால் நாட்டுப்புறப் பாடலாக உருவெடுக்கிறது. சான்றாக, உலகத்திலேயே அதிக ஓட்டங்கள் (Runs) எடுத்த சுனில் கவாஸ்கர் எனும் கிரிக்கெட் விளையாட்டு வீரர் 'சிக்ஸர்' (ஒரேயடியில் ஆறு ஓட்டங்கள் எடுப்பது) அடிப்பது குறித்து சிறுவர் நாட்டுப்புறப்பாடல் ஒன்று எழுந்துள்ளது.

"அல்லாஹு அக்பர்
அஞ்சுபைசா ரப்பர்
அடிச் சக்கை சிக்ஸர்
அடிச்சார் கவாஸ்கர்"

எனும் இப்பாடல், எண்பதுகளில் கிரிக்கெட் விளையாட்டில் சாதனை புரிந்த சுனில் கவாஸ்கர் எனும் தனிமனிதர் வரலாறு கூறும். இப்படிப்பட்ட தனிமனித வரலாறு மட்டுமன்று, சமுதாய வரலாறும் இப்பாடல்களில் புலனாகிறது என்பதற்குச் சான்றாக,

''சுப்பிரமணி பப்ரவாயா
எப்படா கல்யாணம்?
ஆடி போயி ஆவணி மாசம்
வந்ததும் கல்யாணம்''

எனும் இன்னொரு சிறுவர் நாட்டுப்புறப் பாடலைக் காட்டலாம். ஆடி மாதத்தில் திருமணம் நடத்தக்கூடாது என்பதும் ஆடி மாதம் கழிந்து ஆவணி பிறந்ததும் திருமணம் நடத்தலாம் என்பதும் இதனால் புலனாகின்றன. மக்களின் நம்பிக்கையைக் கூறும் இச்சமுதாய வரலாறு போல, நாட்டுப்புறப் பாடல்கள் காட்டும் பல்வேறு வரலாற்றுச் செய்திகளை எல்லாம் தனித்தனியாகப் பிரித்து எழுதுவோமாயின் நமது கடந்தகால, நிகழ்கால வரலாறு மேலும் தெளிவுபடும்.

இப்படிப்பட்ட ஒரு முயற்சியாகவே இந்நூல் அமைந்துள்ளது. இந்நூலால் நாட்டுப்புறப் பாடல்கள் வரலாற்றை நிறுவ உதவும் பல்வேறு சான்றாதாரங்களுள் ஒன்றாகக் கொள்ளப்படவேண்டும் என்னும் கருத்து உறுதிப்படுகிறது.

இந்நூல் உருவாகக் காரணமாக அமைந்த நல்லோர்க்கு நன்றி தெரிவித்தல் கடனாகும். வ. உ. சிதம்பரனார் அறக்கட்டளையை நிறுவிய அன்பர்க்கும், அதன் சார்பில் சொற்பொழிவு நிகழ்த்த வாய்ப்பளித்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவன இயக்குநர், அறிஞர், சிலம்பொலி சு. செல்லப்பன் அவர்களுக்கும், இடைநின்று ஊடாடி ஏற்பாடு செய்துதவிய அறிஞர் ச. சிவகாமிஅவர்களுக்கும் என் மனப்பூர்வமான நன்றி என்றும் உரியது. இந்நூலை அச்சுக்குத் தரத்தக்க வகையில் திருத்தமுறப் படியெடுத்துக் கொடுத்த என் மாணாக்கி, சகோதரி ஜேம்ஸ் மரியஆரோக்கியம், மூலத்தையும் நகலையும் ஒப்பு நோக்கிய மாணாக்கர் திரு. எம். எஸ். முருகன் ஆகிய இருவர்க்கும் நன்றி தெரிவிக்கிறேன்.

தமிழ் உலகம் வழக்கம்போல் என் நூலை ஏற்றுப் பயன் கொண்டு என்னை ஊக்குவிக்கும் என நம்புகிறேன்.

**ச. முருகானந்தம்**

'குறிஞ்சி'
17, இரண்டாவது தெரு,
பல்லவன் நகர்,
காமராசர் நகர் அஞ்சல்,
ஆவடி, சென்னை - 600 071.

# உள்ளுறை


பக்கம்

நாட்டுப்புறப் பாடல்களில் வரலாற்றுச் செய்திகள் 1-83

1. வணிகப் பெருமை - முத்து ஏற்றுமதி 26, குதிரை இறக்குமதி 37, 2. கூன்பாண்டியன், மங்கையர்க்கரசி, திருநாவுக்கரசர் வரலாறு 41, 3. பரங்கிப்பேட்டைப் போர் 44, 4. ஆற்காட்டுப் போர் 46, 5. கட்ட பொம்மு வரலாறு 48, 6. தாது வருஷப் பஞ்சம் 51, 7. முதல் உலகப் போரில் எம்டன் 54, 8. சுதந்திரப் போராட்டம் - வெள்ளையர் எதிர்ப்பு 58, 9. அரிய லூர் இரயில் விபத்து 61, 10. இரண்டாவது பொதுத் தேர்தல் 63, 11. தனுஷ்கோடிப் புயல் 64, 12. சரஸ்வதி பள்ளிக் கூடம் இடிந்தமை 72, 13. வைகையில் பெருக்கெடுத்த வெள்ளம் 77, 14. ஸ்கைலேப் அச்சம் 80, ஆய்வு முடிவு 82

பின்னிணைப்பு 84-115

தாதுவருடப் பஞ்சம் (பாடல்கள் தொகுப்பு) 84

துணை நூற்பட்டியல் 107

சிறப்புச் சொல்லகராதி 115

# நாட்டுப்புறப் பாடல்களில் வரலாற்றுச் செய்திகள்

ச, முருகானந்தம்

# நாட்டுப்புறப் பாடல்களில் வரலாற்றுச் செய்திகள்

### நாட்டுப்புறத்தார் யார்?

மக்கள், வர்க்க அடிப்படையில் இரு வகைப்படுவர். இவர்களை நேரடியாக உடல் உழைப்பில் ஈடுபடுவோர், உடல் உழைப்பில் ஈடுபடாதவர் எனப் பிரிக்கலாம். இவர்கள் முறையே கீழ்வர்க்கத் தார் மேல்வர்க்கத்தார் என அழைக்கப்படுகின்றனர். உழைக்கும் அடித்தட்டு மக்களே பெரும்பான்மையினர் ஆவர். மற்றவர் சிறுபான்மையினர். நால்வருணப் பாகுபாட்டிற்குள் அடங்கும் சூத்திரரும் வருண அமைப்புக்கு வெளியே உள்ளவராகிய பஞ்சமரும் நிலம் முதலாகிய உற்பத்திக் கருவிகளில் உரிமை இல்லாதவர் ஆவர். உழுதுண்போர் கீழோர் எனவும் உழுவித் துண்போர் மேலோர் எனவும் சமூக மதிப்பீடு அமைந்தது. பிராமணர், வேளாளர் முதலாகிய மேல் சாதிகளுக்குப் புறம்பாக உள்ள சாதியினர் புறச்சாதியார் என அழைக்கப்பட்டனர். இந்தியச் சமூக அமைப்பில் இப்புறச் சாதியார், ஊர் நகரங்களுக்குப் புறத்தே வாழ்ந்து தொழில் புரிந்து வந்தனர். ஊர்களிலும் பள்ளர், பறையர் முதலானோர் ஊருக்குக் கீழ்ப்புறத்தில் கிழக்குத் திசையில் தனிச் சேரிகளில் வாழ்ந்தனர். வண்ணார், நாவிதர் முதலானோர் ஊரின் ஓர் ஓரத்தில் வசித்தனர். கொல்லர் முதலான இடங்கையர், வேளாளர் முதலான வலங்கையரோடு மோதினர். எனினும், வலங்கையர் கையே மேலோங்கியிருந்ததை வரலாறு காட்டுகிறது.

நிலத்துடன் தொடர்பில்லாத, உழைக்கும் மக்களாகிய கொல்லர் முதலான இடங்கையரும், நிலத்துடன் உழைப்பு மூலமாகத் தொடர்புள்ள பள்ளர் முதலான வலங்கையரும் உழைப்பவர் எனும் பொதுப்பிரிவில் அடங்குவர். உழைப்பின் உறுபயனாகக் கிடைத்த உபரிலாபம் சொத்துடைமையாகிச் சொத்துடையவர், சொத்தில்லாதவர் எனும் பிரிவினைக்கு வழி

வகுத்தது. உற்பத்திக் கருவிகள் உடையோர் உபரிலாபம் அடைந்து மேட்டுக் குடியினராக ஆயினர். இவர்கள் மேல்சாதியாரும் மேல் வருணத்தாரும் ஆவர். உற்பத்திக் கருவியில்லாதவர், உழைப்பை மட்டுமே உடையவர், உடலுழைப்பில் ஈடுபட்டு அதன்மூலமே வாழ வேண்டிய நிலையிலிருந்தவர் கீழ்ச்சாதியாராக, நான்காம் வருணத்தாராக நால்வருணப்பாகுபாட்டிற்குள் அடங்காத பஞ்சமராக ஆயினர். சொத்துடைமை உருவாகாத காலக்கட்டத்தில் உழைப்புக்கு இருந்த உயர் மதிப்பு, சொத்துடைமைஉண்டான பிறகு குறைந்தது. தனியுடைமை, உழைப்பின் உன்னதமான மதிப்பைக் குறைத்தது. உழைப்பவர் சிறுமையுற்றனர். இவர்கள் ஊர், நகர், நாடு ஆகியனவற்றின் புறப்பகுதிகளுக்குத் தள்ளப் பட்டனர். சாதிப்பிரிவுகளின்படிப் புறச்சாதியாராகிய இவர்கள் இருப்பிடம், வாழுமிடங்கள் எனும் வசிப்பிட நோக்கில் புறப்பகுதி களுக்கு ஒதுக்கப்பட்டனர். இன்றும் மாறாத அமைப்புடைய கிராமங்களில் இவர்கள் ஓர் ஓரத்தே வசித்து வருதலைக் காணலாம். இந்தியச் சமூக அமைப்பில் இப்பெருவாரியான உழைக்கும் மக்களே நாட்டுப்புறத்தார் ஆவர்.

சமூக, பொருளாதார அடிப்படைகளில் பெருவாரியான பொது மக்களின் நிலைமை மிகவும் பின்தங்கியிருந்தது. இவர்கள் மேல் சாதியினர்க்கு உரிய உரிமைகள் இல்லாதவர். கல்வி கற்கும் உரிமை இவர்களுக்கு மறுக்கப்பட்டது. இதனால் கல்வியடிப்படையில் பெறக்கூடிய அறிவும் அறிவின் அடிப்படையில் பெறக்கூடிய உயர் பதவிகளும் இவர்களைப் பொறுத்தமட்டில் என்றும் எட்டிப்பிடிக்க முடியாதனவாக அமைந்தன. கீழ்நிலையிலேயே வாழும்படி நிர்ப்பந்திக்கப்பட்ட இவர்கள் தீண்டத்தகாதாராகக் குறிக்கப் பட்டனர். சமுதாய இயக்கத்துக்கு அச்சாணியாக, சமூக விருட்சத்தின் ஆணிவேராக இவர்கள் உழைப்பு இருந்த போதிலும் திட்ட மிட்ட வஞ்சகத்தின் விளைவாக, இவர்கள் கல்விபெறும் உரிமை மறுக்கப்பட்டனர். ஆகவே கல்வி, பொருளாதாரம், சமூக மதிப்பு எனப் பல நிலைகளிலும் மிகவும் பின்தங்கிவிட்ட இவர்கள் ஓர் ஒதுக்குப்புறத்தே வாழவேண்டிய நிலைமைக்கு ஆளானார்கள். பழங்காலப் பட்டியலின்படி, பள்ளு பறை முதலான பதினெட்டுச் சாதிகளில் அடங்கியவர்களும் இக்காலப்பட்டியலின்படி பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் பிரிவுச்சாதிகளில் அடங்கியவர்களும் நாட்டுப்புறத்தார் ஆவர்.

மாறிவரும் சமூக அமைப்பில், இன்றைய காலக்கட்டத்தில் இவர்தம் நிலைமை சற்று முன்னேற்றம் கண்டுள்ளது; கல்வி பெற்று மேம்பாடு அடைந்து வருகின்றனர். பிற்பட்டோர் அடைந்துள்ள முன்னேற்றம் இன்னும் முற்பட்ட மக்களை நோக்க மிகவும் குறைவாகவே உள்ளது. இப்பிற்பட்டோர் அடைந்துள்ள முன்னேற்றம் கூடத் தாழ்த்தப்பட்டோர் பெறவில்லை. கல்வி யறிவின்மூலம் அரசு பதவிகளைப்பெற இன்னும் கடுமையாகப் போராட வேண்டிய நிலையிலேயே இவர்கள் உள்ளனர். மண்டல் ஆய்வறிக்கை பிற்பட்டோர் சமூக நிலைமையைத் தகுந்த புள்ளி விவரங்களோடு தெளிவாகக் காட்டுகிறது. தாழ்த்தப்பட்டோர் அடைந்துள்ள முன்னேற்றம் பற்றிய அரசு அறிக்கைகளும் இவர்கள் எதிர்பார்த்த அளவுக்கு முன்னேற்றக் குறியீட்டை எய்தவில்லை எனக் காட்டுகின்றன. இத்தகைய சமூக நிலைமைகளில் வாழ்ந்து வரும் பெருவாரியான பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களே நாட்டுப்புறத்தார் எனலாம்.

மேல் தட்டு மக்களாகிய பிராமணர் முதலானோரை நாட்டுப்புற மக்கள் எனக் கருதவியலாது. பழங்காலத்தில் இருவேறு வர்க்கங்களுக்கு ஏற்ற கலைவடிவங்களாக வேத்தியல், பொதுவியல் இருந்தமை கருதத்தக்கது. உடலுழைப்புடன் நேரடித்தொடர் பில்லாத மக்களிடம் நாட்டுப்புற இலக்கியங்களை மிகுதியும் காண முடியாது. ஏற்றப்பாடல், அம்பாப்பாடல், வண்டியோட்டிப்பாடல், தெம்மாங்குப்பாடல், களையெடுப்போர், கதிர் அறுப்போர், சூடடிப்போர் பாடல்கள், பாரம் இழுப்போர் பாடல்கள், நெல் குற்றுவோர், சுண்ணம் இடிப்போர் பாடல்கள், தோட்டத் தொழிலாளர், ஆலைத்தொழிலாளர், உப்பளத்தொழிலாளர் போன்றோர் பாடும் பாடல்கள் ஆகியன எல்லாம் நேரடி உழைப்பில் ஈடுபடுகிற பாட்டாளி மக்களின் வாய்மொழி இலக்கியங் களாக உள்ளன. வேலையின் வேகத்திற்கும் தன்மைக்கும் ஏற்ப, சந்தங்களும் தாளங்களும் அமையப் பெற்ற பாடல்கள் பிறக் கின்றன. பாடலின் வடிவத்தையும் லயத்தையும் செய்யும் தொழில் தீர்மானிக்கிறது. தொழிலுக்கு ஒத்திசைவான, உடலின் தசை நார்களின் இயக்கத்திற்கு ஏற்பதான வடிவங்கள் உருவெடுக் கின்றன. ஆகவே நேரடி உடலுழைப்பில் ஈடுபடாத மேட்டுக்குடி மக்களிடம் இவை பிறப்பதில்லை.

இன்று பிராமணர் முதலானோர் தாலாட்டு முதலான நாட்டுப்புறப் பாடல்களைப் பாடினாலும் அவை பண்பாட்டுக்

கலப்பு, பண்பாட்டுத்தாக்கம், பண்பாட்டுப் பரிமாற்றம் காரணமாக அவர்க்குக்கிட்டின எனலாம். பொதுவாகப் பிராமணர் பாடும் தாலாட்டுகள் நாலாயிரதிவ்யப் பிரபந்தத்தில் உள்ள பெரியாழ்வாரின் பாசுரங்களாகவோ அல்லது அவற்றின் தாக்கம் பெற்றனவாகவோ உள்ளன.[1] இவற்றில் மண்ணின் மணம் இல்லை. இன்னொரு முக்கியமான செய்தி, பிற்பட்ட தாழ்த்தப் பட்ட மக்களிடம் காணக்கூடிய கேட்கக்கூடிய மிகையான அளவுக்கு நாட்டுப்புறப் பாடல்கள், நாட்டுப்புறக் கதைகள், நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் ஆகியன பிராமணரிடம் கேட்க முடியாது. இதுவரை தொகுக்கப்பட்டு வெளியாகியுள்ள நாட்டுப் புறப் பாடல்கள், பிறவழக்காறுகள் தொகுதிகளில் பிராமணர் அல்லாதாரிடையிலிருந்துதான் பெருமளவு வழக்காறுகள் கிட்டி யுள்ளன என்பதும் அறியத்தக்கதாக உள்ளது. பிராமணர் தம் குழந்தைகளுக்கு நாட்டுப்புறக் கதைகள் கூறுவதில்லை. அவர்கள் தம் குழந்தைகளுக்கு இதிகாச, புராண, பாகவதக் கதைகளைச் சொல்லுகின்றனர்.

ஆனால் பாமரர் தம் குழந்தைகளுக்கு மண்ணின் மணங்கமழும் நாட்டுப்புற வழக்காறுகளை எடுத்துக் கூறுவதைக் காணலாம். சில சமயங்களில் இதிகாசப் பாத்திரங்களை வைத்துக் கொண்டு அவற்றின் மேல் புனையப்படும் கிராமியத் தன்மை மிகுந்த கற்பனைக் கதைகளையும் கூறக் கேட்கலாம். இராமர் அணை கட்டிய போது அணில் செய்த உதவி, இராமனும் அனுமனும் ஒரே வாழையிலையில் அமுதம் உண்டமை போன்ற கதைகள் இதிகாசக் கதைகள் அல்ல; இதிகாசக் கதை சார்ந்த மக்கள் கதைகள். இதிகாசங்களுக்கும் இதிகாசப் பாத்திரங்களை வைத்துக் கொண்டு அவற்றின் மேல் புனையப்பட்ட இதிகாசம் சார்ந்த கதைகளுக்கும் வேறுபாடு உண்டு. பொதுவாக முன்னேறிய மக்களிடம் நாட்டுப்புற வழக்காறுகளை அதிகம் காண இயலாது. பின்தங்கிய மக்களிடமே இவை நிறைந்திருக்கின்றன.

நாடுகள் நிலையில் கூட முன்னேறிய நாடுகளான இங்கிலாந்து பிரான்ஸ் ஆகிய நாடுகளில் நாட்டுப்புற வழக்காறுகள் அதிக ஆர்வத்துடன் போற்றப்படவில்லை. பின்தங்கிய, அடக்கப்பட்ட நாடுகளான ஜெர்மனி, பின்லாந்து, ஆஸ்திரியா, ஸ்விட்சர்லாந்து.

1. இந்நூலாசிரியர் தூத்துக்குடி திருமதி. முத்துக் கிருஷ்ணையர் அவர்களிடம் சேகரித்த தாலாட்டுப் பாடல் கள் இத்தன்மையினவாய் உள்ளன.

இந்தியா ஆகிய நாடுகளில் நாட்டுப்புற வழக்காறுகள் அதிக அளவில் உள்ளன. இதற்கான காரணத்தை ஆய்வாளர் விளக்குவர்.

"எந்த நாட்டினர் கடந்த காலத்தில் அல்லது இக்காலத்தில் கலாச்சாரத்தாழ்வுணர்ச்சி கொண்டவர்களாக இருக்கிறார்களோ அவர்களது நாடு, நாட்டார் வழக்காறுகள் செழித்தோங்கும் இடம் என்பது என் கொள்கை. காரணம் என்னவென்றால், தம் நாட்டு வழக்காறுகளைச் சேகரித்து வெளிப்படுத்துவதன் மூலம், அவற்றைக் கொண்டாடுவதன் மூலம் தங்களை இனம் கண்டு கொள்கிறார்கள். இன உணர்வைத் தம் வழக்காறுகளில் கண்டு கொள்கின்றனர். நாட்டார் வழக்காறுகளை முதன்முதலில் சேகரித்து வெளிப்படுத்திய நாடுகளுள் ஜெர்மனியும் ஒன்று. இது தற்செயலாக நிகழ்ந்த ஒன்று அல்ல. கிரிம் சகோதரர்கள் (Grimm Brothers) 1812 இல் குழந்தைகளுக்குக் கூறப்பட்ட கதைகளைத் தொகுத்து வெளியிட்ட போது ஜெர்மனி ஒன்று பட்ட ஒரு நாடாக இருக்கவில்லை. இந்தியாவைப் போலப் பல சமஸ்தானங்களைக் கொண்டதாக இருந்தது. கிரிம் சகோதரர்கள் வாழ்ந்த பகுதி பிரெஞ்சுக்காரர்களின் ஆளுகைக்கு உட்பட்டதாக இருந்தது. ஆளும் வர்க்கத்தினர் பிரஞ்சு மொழிதான் பேசினார்கள். மக்கள் ஜெர்மன் மொழியில் பேச அனுமதிக்கப்படவில்லை. இந்தச் சூழ்நிலை கிரிம் சகோதரர்களைத் தம் கலாச்சாரத்தைப் பற்றிக் கவலை கொள்ள வைத்தது. இதுபோன்றுதான் பின்லாந்திலும். அந்த நாடு ரஷியாவாலும் ஸ்வீடனாலும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. இந்தியா நீண்ட காலமாக நாட்டுப்பற்று அமுக்கப்பட்ட நிலையில் இருந்தது. எங்கெல்லாம் மக்கள் ஒடுக்கப்படுகிறார்களோ அங்கெல்லாம் பண்பாட்டைப் பேணிக்காப்பது தீவிரமாகிறது. சீனாவிலும் இதே நிலைமைதான். இங்கிலாந்திலும் பிரான்சிலும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் நாட்டார் வழக்காறுகளை அறிவதில் அதிக ஆர்வம் காட்டவில்லை. காரணம் அவர்கள் தாழ்வு மனப்பான்மை கொண்டவர்கள் அல்ல. மாறாக உயர்வு மனப்பான்மை கொண்டவர்கள். நாட்டார் வழக்காறுகளை அறிவதில் ஆர்வம் காட்டவில்லை. ஏனெனில் நாட்டார் வழக்காறுகள் மூலம் அவர்கள் தங்களுக்கு நிரூபித்துக் காட்ட வேண்டியது ஒன்றுமில்லை. எனவே இங்கிலாந்திலும்

பிரான்சிலும் நாட்டார் வழக்காற்றில் குறைந்த அளவிலேயே ஆய்வு நடைபெற்றுள்ளது.''[1]

என்பார் ஆலன்டண்டிஸ். அவர்தம் கொள்கைவழி முற்கூறிய பிற்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்களிடையேயுள்ள மிக அதிகமான நாட்டார் வழக்காறுகளுக்கான காரணம் புலப்படுகிறது. இவர்கள் தம் சாதியின் உயர்வைக் கூறுவதற்காகப் புனைந்த பல கதைகள் தெய்வீகத் தொடர்புடையனவாக இருப்பதற்குக் காரணமும் புலப்படுகிறது. பழங்குடியினர் வழங்கும் கதைகளில் அவர்களுக்கும் தெய்வங்களுக்கும் உள்ள உறவுகள், தெய்வம் அவர்களுக்குச் செய்த உதவிகள் பற்றிய தகவல்கள் உள்ளன. கலாச்சார தாழ்வுணர்ச்சி மிகுந்தவர்களிடமே இதுபோன்ற வழக்காறுகளும் பிறவகையிலான நாட்டுப்புற வழக்காறுகளும் அதிகம் இருக்க முடியும். பண்பாட்டு ரீதியாகத் தாழ்ந்த நிலையில் இருப்பவரே நாட்டுப் புறத்தார் என்பதும் இவர்களிடம் உள்ள நாட்டுப்புற வழக்காறுகளே உண்மையான, நம்பகத்தன்மை வாய்ந்த, அதிகம் கலப்பில்லாத நாட்டுப்புற வழக்காறுகள் என்பதும் தெரியவருகின்றன.

**நாட்டார், நாட்டுப்புறத்தார்—பெயர் ஆராய்ச்சி**

நாட்டுப்புற வழக்காறுகளில் மொழி தொடர்பானவை, மொழி தொடர்பற்றவை என இருபகுதிகளாகப் பிரிக்கலாம். மொழிதொடர்பானவை நாட்டுப்புற இலக்கியங்கள் எனப்படுகின்றன. நாட்டுப்புற இலக்கியங்களை மீண்டும் இருபிரிவாகப் பிரித்து ஒன்றைப் பேரிலக்கியம் (Major Literature) எனவும் பிறிதொன்றைச் சிற்றிலக்கியம் (Minor Literature) எனவும் வகைப் படுத்தலாம். நாட்டுப்புறப்பாடல்கள், நாட்டுப்புறக் கதைப் பாடல்கள், நாட்டுப்புறக்கதைகள் ஆகியன நாட்டுப்புறப் பேரிலக்கியங்கள் எனவும், பழமொழி, விடுகதை ஆகியன நாட்டுப்புறச் சிற்றிலக்கியங்கள் எனவும் பாகுபடுத்தப் படுகின்றன.[2] இப்பெயர்களில் அடைமொழியாக வரும் 'நாட்டுப்புறம்' என்பதற்கு

---

1. பா. ரா. சுப்பிரமணியன், பெர்க்கலியில் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழக மானிடவியல் மற்றும் நாட்டுப்புற வழக்காற்றியல் பேராசிரியர் ஆலன் டண்டிஸ் அவர்களுடன் சென்னையில் 14-6-1990 அன்று நடத்திய பேட்டியின் சுருக்கம்: **நாட்டார் வழக்காறு-ஓர் உரையாடல்'** தினமணி, மதுரை, 11-7-1990, ப. 6.
2. ச. அகத்தியலிங்கம், '**நாட்டுப்புற வழக்குகள்**', நாட்டுப்புறவியல். இந்தியத் தமிழ் நாட்டுப்புறவியல் கழகக் காலாண்டிதழ் (தொகுதி 1), சனவரி-ஜூன் 1984, ப. 69.

மாற்றாக வ.சுப. மாணிக்கம் வழிவந்தோர் 'ஊரகம்' எனவும் தே. லூர்து வழிவந்தோர் 'நாட்டார்' எனவும் பயன்படுத்து கின்றனர். ஆகவே, நாட்டுப்புற இலக்கியம், ஊரக இலக்கியம்' நாட்டார் இலக்கியம் எனும் மூன்று பெயர்கள் கிட்டுகின்றன.

இவ்விலக்கியங்களில் ஒரு பிரிவான நாட்டுப்புறப்பாடல்கள் நர்ட்டுப்பாடல்கள் எனவும் அழைக்கப்படுகின்றன. எழுத்தில் வந்தவை ஏட்டிலக்கியம் எனவும் எழுத்தில் வராதவை நாட்டிலக்கியம் எனவும் பெயர் சூட்டப்பட்டுள்ளன. அறிஞரின் எண்ணங்களுக்கேற்பப் பல பெயர்கள் வழக்கில் உள்ளன. ஒவ்வொருவரும் தம் மதம் நிறுவ தகுந்த தடைவிடைகளைக் கூறியுள்ளனர். நாட்டுப்புற இலக்கியம் என்னும் சொல்தொடர் பொருந்தாது என்போர் நகர்ப்புறத்தில் வாழ்வோரின் வாய்மொழி இலக்கியம் அதில் அடங்கவில்லை என்பர். நாட்டார் இலக்கியம் எனும் சொற்றொடர் பொருந்தாது என்போர் 'அப்பெயர் குழப்பத்தை விளைவிக்கிறது என்பர். தஞ்சாவூர் மாவட்டத்தில் ஒரு குறிப்பிட்ட சாதியினர் 'நாட்டார்' என அழைக்கப்படுவதால் நாட்டார் எனில் அச்சாதியினரா அல்லது நாட்டுமக்களா எனும் குழப்பம் உண்டாகும் என்பர். தென் தமிழ் நாட்டு நாட்டார் சாதியினர் வடதமிழ் நாட்டில், செங்கல்பட்டு, சென்னை மாவட்டங்களிலுள்ள பொதுமக்களால் 'நாட்டார்' என அழைக்கப் படுவதும் கவனித்தற்குரியது. மளிகைக்கடை வைத்து வாணிகத் தில் ஈடுபட்டு இருக்கும் நாடாரை 'நாட்டான்' எனவும் அவர்தம் கடைகளை 'நாட்டான்கடை' எனவும் இம்மாவட்ட மக்கள் கூறுகின்றனர். மேலும் 'நாட்டார்' என்ற சொல் நாட்டிலுள்ள எல்லோரையும் குறிக்கும் சொல்லாக இருப்பதால் குறிப்பிட்ட சில மக்கள் தொகுதிகளைக் குறிப்பதாகக் கொள்வதும் இயலாததாக உள்ளது.

செங்கல்பட்டு, வடார்க்காடு மாவட்டங்களில் நகரங்களி லிருந்து தொலைவில் உள்ள, முன்னேற்றம் காணாத, பழைய கிராமியப் பாணியிலே அமைந்திருக்கிற ஊர்களை 'ஊர் நாடு' எனவும் அப்பகுதிகளில் வசிக்கிற, நாகரிகம் அடையாத பாமரனை 'ஊர் நாட்டான்' எனவும் அழைக்கின்றனர். ஆகவே நாட்டார், எனும் சொல் தஞ்சாவூர் மாவட்ட நாட்டாரா, திருநெல்வேலி முதலான தென் மாவட்டங்களைப் பூர்வீக இடமாகக் கொண்ட நாடாரா, நகர்ப்பகுதிகளிலிருந்து மிகவும் ஒதுங்கியிருக்கிற, முன் னேற்றம் காணாத ஊரினரா என ஐயம் தோன்றுதல் இயல்பு.

மேலும் இச்சொல் நாட்டுப்புறவியல் ஆராய்ச்சியாளராகிய கல்வித் துறை வல்லுநர்களின் (Academicians) கலைச்சொல்லாக அறிமுகப்படுத்தப்பட்டது என்பதும் பெருவாரியான பொது மக்களுக்கும் ஓரளவுக்கு எழுதப்படிக்கத் தெரிந்த மக்களுக்கும் பொருள் விளங்காது என்பதும் நினைத்தற்குரியன. 'ஊரக இலக்கியம்' எனும் தொடர்கூட முழுமையான பொருத்தப்பாடு உடையதாகத் தோன்றவில்லை. கலாச்சாரத் தாழ்வுணர்ச்சி மிகுந்த, உழைப்புடன் நேரடித் தொடர்புடைய, நால்வருணப்பாகு பாட்டிற்குப் புறத்தே ஒதுக்கப்பட்ட பெருவாரியான பொதுமக்கள் ஊரின் அகப் பகுதிகளில் வாழ்ந்ததாக வரலாறு காட்டவில்லை. ஊர்ப்புறங்களில் வசித்த இப்பாமரமக்களின் நாட்டுப்புற இலக்கியங்களை வழக்காறுகளை ஊர்ப்புற இலக்கியம், ஊர்ப்புற வழக்காறு என்று கூறினால்கூட ஓரளவுக்குப் பொருந்தும். ஆக, மேற்காட்டிய காரணங்களால் 'ஊரக இலக்கியம், என்பதும் பொருந்தாப் பெயராகும்.

### புறம்

ஆகவே ஓரளவுக்கு எழுதப்படிக்கத் தெரிந்த மக்களுக்கும் எளிதில் பொருள் விளங்குகிற நாட்டுப்புறப்பாடல், நாட்டுப்புறக் கதை என்பனவற்றை ஏற்றுக் கொள்ளலாம். பாமரத்தன்மை மிகுந்த ஒருவனை மக்கள் 'நாட்டுப்புறத்தான்' என வழங்கிவருவ தால் இச்சொற்றொடரின் பொருள் அவர்களுக்கு நன்றாக விளங்கு வதாகும். கீழ்புறம், மேல்புறம், ஒதுக்குப்புறம் என மக்கள் வழங்கும் பல சொற்களைக் காணும்போது அவர்களுக்குப் 'புறம்' எனும் சொற்பொருள் நன்றாகப் புரிதல் காணலாம். இவ்வாறே புறச்சாதி, புறச்சாதியான், புறச்சாதிப்பயல் எனும் சொற்றொடர் களையும் மக்கள் வழங்கிவருதல் நினைத்தற்குரியது. இவற்றில் இச்சொல்லாகிய 'புறம்' என்பது 'வெளியே' எனப்பொருள் படுகிறது. பழையகால நகர் அமைப்பில் அரசன் இருப்பிடம் மையத்திலும் அதனைச்சுற்றி அரசு உயர் அதிகாரிகளும் அதற்கும் வெளியே மேட்டுக்குடிமக்களும் அதன்பின் வணிகர் முதலானோரும் அதற்கும் அப்பால் தொழிலுடன் தொடர்புடைய இடங்கைப் பிரிவினரும் அதற்கும் அப்பால் இன்னும் கீழ்ப்பட்ட சாதியினரும் வசித்து வந்தனர். கடைசியாக நிலம் முதலாகிய உற்பத்திக்கருவி களில் உழைக்கும் பள்ளர் முதலானோர் வசித்தனர். நாட்டுக்குப் புறத்தே வசித்தவர் நாட்டுப்புறத்தார் ஆயினர். இவ்வகையிலான நகர்ப்புற, நாட்டுப்புற அமைப்புகளை ஆற்றுப்படை இலக்கியங்

களும் சிலப்பதிகாரம் முதலிய செவ்வியல் நாடக இலக்கியங்களும் காட்டுகின்றன. இடையர் குலமகள் மாதரி வசித்த புறஞ்சேரியை, சேரிப்புறத்தை இளங்கோ காட்டுவார். மதுரையின் மையப்பகுதியிலிருந்து சற்று ஒதுங்கிய, புறத்தே அமைந்திருந்த சேரிப்பகுதி 'புறஞ்சேரி' எனப்படுவதாயிற்று. ஆகவே நாட்டுப்புறம் எனும் தொடரின் பொருள் பொருத்தப்பாடுடையதாக உள்ளது.

**புரம்**

ஊர்ப்பெயர்களை ஆயுங்கால் 'புரம்' எனும் பின்னொட்டு போலப் பல ஒட்டுச் சொற்கள் காணப்படுகின்றன. ஆறு (அடையாறு, பழையாறு), ஊத்து (தாழையூத்து, பன்னீர் ஊத்து), ஊர் (திருவாரூர், உறையூர்), ஏரி (பொன்னேரி, சீவலப்பேரி), கரை (ஆத்தங்கரை, இடிந்தகரை); கல் (கருங்கல், திண்டுக்கல்,) காடு (திருவாலங்காடு, மாங்காடு), குடி (தூத்துக்குடி மன்னார்குடி), குண்டு (ஆரியங்குண்டு, வத்தலக் குண்டு), குளம் (அழகன்குளம், விளாத்திகுளம்), கோட்டை (ஊத்துக் கோட்டை, வெள்ளாத்துக் கோட்டை), சந்தை (திங்கள் சந்தை), தலை (ஆலந்தலை, குளித் தலை), தானம் (தீர்த்தாண்டதானம்), துறை (தோணித்துறை, தோப்புத்துறை), நத்தம் (உச்சிநத்தம், பழங்காநத்தம்), பட்டினம் (காயல்பட்டினம், காவிரிப்பூம் பட்டினம்), பட்டி (கோவில் பட்டி, விருதுப்பட்டி), பாளையம் (பெரிய பாளையம், ராஜபாளையம்), பேட்டை (உடுமலைப் பேட்டை, சந்தைப்பேட்டை), மடம் அக்காள் மடம், தங்கச்சிமடம்), மலை (கழுகுமலை, கொல்லி மலை), வலசை (அழகாத்தா வலசை, தோப்பு வலசை), விளை (களியக்கா விளை, திசையன்விளை), வேலி (திருநெல்வேலி, நெய்வேலி) எனும் பின்னொட்டுகளைப் போலப் புரம், புரி ஆகிய சொற்களும் ஊர்ப் பெயர்ப் பின்னொட்டுகளாக உள்ளன. கபாடபுரம் பழந்தமிழ் இலக்கிய வரலாறு அறிந்தோர் அறிந்த ஊர்ப்பெயராகும். அந்தோனியார் புரம், அவனியாபுரம், இராம கிருஷ்ணபுரம், இராமநாதபுரம், உத்தமதானபுரம், எட்டயபுரம், எல்லாபுரம், கமலாபுரம், கிருஷ்ணாபுரம், குமந்தாபுரம், குமரெட்டியாபுரம், குமாரபுரம், சமயபுரம், சாமிநாதபுரம், சொக்கலிங்கபுரம், திரிசிரபுரம், நடராஜபுரம், பக்கிலிபுரம், பன்னீர் புரம், புன்னையாபுரம், போல்டன்புரம், மம்சாபுரம், மருதப்புரம், மீனாட்சிபுரம், வேதபுரம், வேலாயுதபுரம், ஜம்புலிங்கபுரம், எனும் பல ஊர்ப் பெயர்கள் 'புரம்' என முடிகின்றன. இரத்தினபுரி, நாகபுரி, வேதபுரி, ஆகியன 'புரி' எனும் பின்னொட்டுடையன.

புரிசை என்றும் ஓர் ஊர் உண்டு. புரம் என்பது மக்கள் வாழும் இருப்பிடத்தைக் குறிப்பிடுவதாக உள்ளது. நகர்ப்புரம், நாட்டுப் புரம் எனக் குறிக்குங்கால் அவை அந்நகர், நாடு ஆகியனவற்றின் உட்பகுதியையே குறிக்கும். நகர்ப்புறம் நாட்டுப்புறம் என ரகரத்திற்குப் பதிலாக றகரத்தைப் பயன்படுத்தும்போது அவை நகர், நாடு ஆகியனவற்றின் புறப்பகுதியை, வெளிப்பகுதியை, ஓரப்பகுதியை, சுற்றுப் பகுதியைக் குறிப்பனவாக அமைகின்றன. நாட்டுப்புரப்பாடல்கள், நகர்ப்புரப்பாடல்கள் என்று எழுதினாலும் பொருட்குற்றம் விளைவதில்லை. இவை உழைப்புடன் தொடர் புடைய, நகரின் சுற்றுவட்டத்தில் குடியிருக்கிற மக்கள் பாடும் பாடல்கள் எனும் பொருள் தருவதும் எண்ணிப்பார்க்கத்தக்கதாக உள்ளது.

**இன்றைய நிலை**

மாறிவரும் சமூகச் சூழலில் இடப்பெயர்ச்சி (Migration) நடந்துவருகிறது. ஊர்ப்பகுதியைச் சேர்ந்தோர் நகர்ப்பகுதி களுக்குக் குடியேறுதல் அதிகரித்து வருகிறது. அவர்தம் இருப் பிடத்தை அடிப்படையாகக்கொண்டு வரையறை செய்வதும் இன்று பொருத்தப்பாடுடையதாக அமையாது. நேற்று ஊர்ப்பகுதியில் வசித்தோர் நாளை நகர்ப்பகுதிக்கும் நேற்று நகர்ப்பகுதியில் வசித்தோர் நாளை ஊர்ப்பகுதிக்கும் குடியேறலாம். இன்றைய காலக் கட்டத்தில் ஆலை, தொழிற்சாலை போன்றவற்றில் பணி புரியும் தொழிலாளர் வர்க்கம் கிராமப் பகுதியிலிருந்து நகர்ப் பகுதிக்குக் குடியேறிய மக்களாவர். இதனால் நாட்டுப்புற வழக் காறும் நகர்ப்புற வழக்காறும் கலப்பெய்தியுள்ளன. இன்று இவற்றைப் பிரித்துப்பார்ப்பதும் சிரமம். மக்கள் வழக்காறுகள் குறிப்பிட்ட ஒரு காலக்கட்டத்தில்தான் தோன்றும் எனக் கூற வியலாது. நவீன கால நாட்டுப்புற வழக்காறுகளில் பழையனவும் இருக்கும்; புதியனவும் இருக்கும். பழைய வழக்காறுகள் புதுப்பிக்கப் பட்டு புத்துரு அடைந்தும் இருக்கும். சமுதாய நிலைமைகளுக் கேற்பவும் அதன் தாக்கங்களுக் கேற்பவும் புதிய புதிய வழக்காறுகள் உருவெடுக்கும். பழைய சமூக அமைப்பு உடைகிறபோது, மாறுகிற போது, அது புதிய புதிய முகங்களோடு உருவாகியபோது அவற்றுக்குத்தக வழக்காறுகளும் வடிவங்கொள்ளும். சாதிய, வருண அமைப்புகள் ஓரளவுக்கு நெகிழ்ந்து கொடுக்கிற தற்காலச் சூழலும் தொழில் தேடி மக்கள் பல விடங்களுக்கும் இடம் பெயர்ந்து சென்று வசிக்க முனைதலும் பல புதிய உள்ளடக்கங்கள்

உருவாகக் காரணமாகி உள்ளன. இருப்பிடம், சாதி எனும் பழைய அடிப்படைகள் மாறி வருகின்றன. தேசிய, சர்வ தேசியப் பார்வைகளும் பூகோள எல்லையைக் கடந்து வரும் சித்தாந்தங் களும் அரசியல் நிகழ்ச்சிகளும் பழைய வரையறைகளை உடைத்து நொறுக்குகின்றன. படிக்காதவர், பாமரர், நாட்டுப்புறத்தில் இருப்பவர், கிராமவாசிகளிடையே உள்ள வழக்காறுதான் நாட்டுப் புற வழக்காறு எனும் பத்தொன்பதாம் நூற்றாண்டுக்கொள்கை அடிபட்டுவிட்டது. நகரவாசிகளிடமும் நாட்டுப்புற வாசிகளிடம் இருப்பதுபோலப் பழக்கவழக்கங்களும், மூடநம்பிக்கைகளும், சடங்கு சம்பிரதாயங்களும் உண்டு. இதனால் இருப்பிடத்தை, அளவு கோலாகக் கருதாமல், நாட்டுப்புறத்தார், நாட்டார் எனில் 'பொதுவான பழக்க வழக்கங்களைப் பகிர்ந்து கொள்ளும் குழுவினர்' எனும் பொருள் கொள்ளுதலே சரியானது எனக் கூறும் ஆய்வாளர்[1] சிந்தனையும் சிந்திக்கத் தக்கதாகவே உள்ளது.

### தனித்துறை

நாட்டுப்புறவியல் தமிழ் நாட்டுப் பல்கலைக் கழகங்களிலும் உயர் ஆராய்ச்சி நிறுவனங்களிலும் மொழி, இலக்கியங்களுடன் தொடர்புடையதாகக் கருதப்பட்டு வருகிறது; தமிழியல் துறையின் ஓர் அங்கமாகச் செயல்பட்டு வருகிறது. ஆறாவது விரலைப் போலத் தொங்கிக் கொண்டிருக்கும் இக்காட்சி ஏற்புடையதன்று. இது அவ்வுறுப்பைப்போல முக்கியத்துவம் குறைந்ததன்று. எல்லாப் புலன் உணர்வையும் புலன் அறிவையும் இயக்கங்களையும் கட்டுப் படுத்துகிற முக்கியக் கேந்திரமாகிய மூளையைப் போன்றதொரு மிக முக்கியமான பாகம். இதனுடைய முக்கியத்துவம் இன்னும் நம்மவர்களால் சரியாக உணரப்படவில்லை. இது ஒரு தனித்துறை. நாட்டுப்புற வழக்காறுகளுக்கென்று தனி ஆய்வு மையங்கள், ஆராய்ச்சி நிறுவனங்கள் உண்டாக்கப்படல் வேண்டும். ஈரோப்பிய நாடுகள் இதன் முக்கியத்துவத்தையும் உள்ளடக்கத்தையும் கண்டு கொண்டன; தனி ஆராய்ச்சி நிறுவனங்கள் உருவாக்கியுள்ளன. அமெரிக்க நாட்டில் இத்துறை மானிடவியலுடன் தொடர்பு படுத்தப்பட்டு அதனுடன் இயங்கிவந்தாலும் அது தனித்துறை என்பதும் மானிடவியலைப் போன்று பல துறைகளுடன் தொடர் புடையது என்பதும் உணரப்பட்டு விட்டன. ஆகவே நாட்டுப்புற வியல் இலக்கியத்தின் பிரிவன்று; மானிடவியலின் கிளையுமன்று.

1. பா.ரா. சுப்பிரமணியன், ஆலன் டண்டிஸ் அவர்களுடன் நடத்திய பேட்டி, முற்காட்டிய கட்டுரை.

இது அகில உலக ஆய்வுத்துறை. சமூகவியல், மானிடவியல், வரலாற்றியல், உளவியல், இலக்கியவியல் எனப்பல துறைகளுடனும் தொடர்புடையது இது. இது பல துறைகளின் கண்ணோட்டத்துடன் அணுக வேண்டிய ஆய்வுத்துறை. ஆனால் இது தனக்கெனத் தனியான ஆய்வு நெறிகள் உடையது எனும் ஆய்வாளர்[1] கருத்து ஆழ்ந்து உணரப்படுதல் அவசியமாகும்.

**நாட்டுப்புறவியலின் பிரிவுகள்**

நாட்டுப்புறவியலில் பல உட்பிரிவுகள் உள்ளன.

1. நாட்டுப்புறப்பாடல்கள் (Folk songs)
2. நாட்டுப்புறக் கதைகள் (Folk tales)
3. நாட்டுப்புறக் கதைப்பாடல்கள் (Folk ballads)
4. பழமொழிகள் (Proverbs)
5. விடுகதைகள் (Riddles)
6. நாட்டுப்புற நினைவுகள் (Folk memories)
7. நாட்டுப்புற மரபுகள் (Folk Traditions)
8. நாட்டுப்புற நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் (Folk believes and customs)
9. நாட்டுப்புற மந்திரச் சடங்குகள்
10. நாட்டுப்புற மருத்துவம் (Folk medicines)
11. நாட்டுப்புற விளையாட்டுகள் (Folk games)
12. நாட்டுப்புறக் கலைகள் : தெருக்கூத்து, பொம்மலாட்டம் கரகாட்டம் இன்னபிற (Folk arts)
13. நாட்டுப்புறத் தொழில் முறைகள்; (தொன்றுதொட்டுவரும் பூவேலைப்பாடு கோலம் போடுதல், மரவேலை, சிற்பச் செதுக்கல், தொழில் பழக்க வழக்கங்கள், இன்னபிற மரபுகள்)
14. நாட்டுப்புறத் தொன்மங்கள், பழங்கதைகள் (Mythology and Legend).

மேற்காட்டிய உட்பிரிவுகள் அனைத்துமே தொன்றுதொட்டுவரும் மானிடசமூகத்தின் வரலாற்றை விளக்கவல்லன வாகும். ஆயினும் மொழி தொடர்புடைய முதலைந்து பிரிவுகள் மற்றவற்றைக்

---

1. பா.ரா. சுப்பிரமணியன், ஆலன் டண்டிஸ் அவர்களுடன் நடத்திய பேட்டி, முற்காட்டிய கட்டுரை.

காட்டிலும் மக்கள் வரலாற்றை அம் மக்களின் மொழி எனும் புலப் பாட்டுத் திறம் காரணமாக அதிகம் கூறவல்லன என்பது அறிதற் குரியது.

**வரலாறு**

நாட்டுப்புற வழக்காறுகள் வரலாற்றைக் காட்டுகின்றன என்பதை விளக்கிக் கொள்வதற்கு முன்பாக வரலாறு என்றால் என்ன என வரையறுத்தல் வேண்டும். மனித சமுதாயத்தின் வளர்ச்சியை அளக்கும் கருவியே வரலாறாகும். இது கடந்த கால நடப்புகளைத் தொகுத்துரைக்கும். நெப்போலியனின் கருத்துப்படி இதுவே உண்மையான தத்துவமும் உண்மையான உளவியலும் ஆகும். வரலாறு எனும் சொல் விசாரணை, ஆராய்ச்சி, அகழ்வு, தகவல் எனும் பொருள்களில் கிரேக்கரால் பயன் கொள்ளப்பட்டது. சான்றுகள் வழியாகத் தத்துவத்தைக் கற்பித்தலே வரலாறு என டையோனிசஸ் (Dionysius) கூறுவர். உண்மைகளின் முரண் பாட்டை ஆய்வதும் விளக்கங்களைத் தருக்க முறையில் கூறுவதும் வரலாறு என்பர் அரிஸ்டாடில் (Aristotle), தனித்த, முக்கியமான. குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகள் வரலாற்றை உருவாக்குவதாக பாலிபியஸ் (Polibius), தூசிடைடஸ் (Thucydides) கருதுவர். மனிதனைப் பேரறிவாளனாக்குவது வரலாறு என்பர் சர் பிரான்சிஸ் பேகன் (Sir Francis Bacon). பல பொய்களுக்கிடையில் உண்மை போலத் தோன்றும் ஒன்றைத் தெரிந்தெடுக்கும் கலையே வரலாறு என்பது ரூசோ (Rousseau) கொள்கை, கடந்த காலத்தில் எப்போதும் நடந்த, எல்லா நிகழ்ச்சிகளுமே வரலாறுதான் என்பர் ஹென்றி ஜான்சன் (Henry Johnson). கடந்த கால நிகழ்ச்சிகளில் காணப்படும் குழப்பத்தை ஓரளவுக்குக் குறைப்பது சரியான நோக்கில் முடிவுக்கு வர முயல்வதும் வரலாறு என்பர் பேராசிரியர் பின்ட்லே (Professor, Findlay). பேராசிரியர் மெய்ட்லாண்டு (Professor Maitland) மனிதர்கள் நினைத்ததைக் காட்டிலும் அவர்கள் செய்த செயல்களே வரலாறு என விளக்குவர். சமுதாய வாழ்வு, குழுநடத்தை, கூட்டு ஆக்கம் இன்ன பிறவே வரலாறு என்பது ரேனியர் (Renier) கருத்து. லேகி (Lecky) என்பார் நீதி மதிப்புகளின் ஆவணமும் விளக்கமும் வரலாறு ஆகும் என்பர். பெரிய மனிதர்களின் வாழ்க்கைச் சரித்திரமே வரலாறாகும் என்பர் கார்லைல் (Carlyle). கடந்தகால, நிகழ்கால அரசியலே வருங்கால வரலாறு என்பது சீலே (Seeley) கருத்து. மனித சுதந்திர விரிவாக்கத்தையே வரலாறு என ஆக்டன் பிரபு (Lord Acton)

கூறுவர். நிலவியல், சுற்றுப்புறச் சூழல் ஆகியவற்றுக்குத் தக அமையும் மனித சமுதாய வாழ்வின் ஆவணம் வரலாறு எனப்படும் என்பது ஏ.எல். ரௌசே (A L. Rowse) கருத்து. மறைந்திருக்கும் வரலாற்று அறிவில் காரணம் காணும் அறிவியல், வரலாறு எனப்படும் என்பர் சைன்பாஸ் (Seignbos). உண்மை வரலாற்றின் தோற்றம், ஒருமுகத்தன்மை ஆகியனவற்றை ஆய்வது வரலாறு என்பது துர்காட் (Turgot), காண்டொரெக்ட் (Condorect) ஆகியோர் கருத்து.[1] வரலாறு என்பது கடந்தகாலம், நிகழ்காலம் ஆகிய இரண்டையும் பேசுவது என்றும் இதற்கு முடிவேயில்லை என்றும் ஜான் சி.பி. வெப்ஸ்டர் (John C.B. Webster) கூறுவர்.[2]

### வரலாற்றியலுடன் தொடர்புடையன

வரலாறு, அரசியல், அறிவியல், பொருளியல், புள்ளியியல், நிலவியல், மண்ணியல், உயிரியல், இனவியல், இலக்கியம், சமூகவியல், சமயம், தொன்மம், உளவியல், நீதி, தத்துவம் ஆகியவற்றுடன் தொடர்புடையதாகும். இதன் துணைமை உதவிப் பாடங்களாக மொழியியல், அகழ்வாய்வியல், இயற்பியல், பொறியியல், மானுடவியல், இனவியல், மருந்தியல் ஆகியன அமைகின்றன.[3]

### வரலாற்றியலின் பிரிவுகள்

வரலாறு, பலவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அரசியல் வரலாறு, அரசியல் சாசன வரலாறு, சட்டவியல் வரலாறு, பொருளாதார வரலாறு, சமுதாய வரலாறு, உலக வரலாறு, அறிவுத்துறை வரலாறு என ஒன்பது வகைகளாக அறிஞர் பிரிப்பர்.[4]

### வரலாற்று மூலங்கள்

பழங்காலவரலாற்றை அறிவதற்குப் பல வரலாற்று மூலங்கள் ஆதாரங்கள் பயன் கொள்ளப்படுகின்றன.

---

1. B. Sheik Ali, History, Its Theory and method, Mac Millan; IInd ed, 1984, pp. 1-6.
2. John C.B. Webster, An Indroduction to History, Macmillan Company, New Delhi, 1977, pp. 17-28.
3. N. Subramanian, Historlography, Koodal Publishers, Madurai, IInd ed. 1978, pp 47-61.
4. Ibid, pp. 38-46.

1. இறந்தோர் நினைவுச் சின்னங்கள்.

அ. முதுமக்கள் தாழிகளைச் சுற்றிலும் எழுப்பப்பட்ட, ஒழுங்கமைதியுள்ள கருங்கற் குவியல் சின்னங்கள்.

ஆ போரில் வீரங்காட்டி உயிர்விட்டோர்க்கு அவ்விடத்தில் எடுக்கப்பட்ட நடுகற்கள்.

இ. கணவனோடு உடன்கட்டை ஏறிய பெண்ணின் நினைவாக எடுக்கப்பட்ட மாசதிக்கல்.

ஈ. தன்னைப் பலியிட்டுக்கொள்ளும் வீரனின் நினைவாக அமைக்கப்பட்ட சாவான்கல், சாவரக்கல், சாவரப் பலிக் கற்கள்.

2. கல்வெட்டுகள்

அ. அரசர் முதலான ஆட்சியாளர் மக்களுக்குத் தெரிவிக்க விரும்பும் அரசு ஆணைகளைக் கல்லில் வெட்டி வைத்த கல்வெட்டுகள்.

ஆ. கோயில், பள்ளி முதலானவைகளுக்குக் கொடுக்கப்பட்ட தானம், நிவந்தம் ஆகியனவற்றைக் குறிக்கும் கல் வெட்டுகள்.

இ. தேர்தல் முதலானவை எவ்விதம் நடத்தப்பட வேண்டும் என்பது போன்றன குறிக்கும் கல்வெட்டுகள் (உத்திர மேரூர்கல்வெட்டு)

ஈ. மக்கள் கைக்கொண்டு எழுத வேண்டிய ஒழுகலாறுகளைத் தெரிவிக்கும் கல்வெட்டுகள் (அசோகர் வெட்டுவித்தவை)

3. செப்பேடுகள்

4. தொல்பொருட்கள்

அ. விண்ணிலிருந்து விழுந்த விண்கற்கள்

ஆ. கல்லாகிய மரங்கள்

இ. நிலத்தடி, கடலடிகளிலிருந்து எடுக்கப்படும் மிகத் தொன்மைவாய்ந்த பழம்பொருட்கள்

ஈ. தொன்மை மிகுந்த குகை ஓவியங்கள், பிறபொருட்கள்

5. அகழ்வாராய்ச்சியில் கிடைத்தவை

பழங்கால நாணயங்கள், சிலைகள், சிற்பங்கள், பொம்மைகள், உடையாத, உடைந்த தாழிகள், பானைகள், மதுக்குடுவைகள்

பீங்கான் பாத்திரங்கள், கோப்பைகள், ஆபரணங்கள், கைவினைப் பொருட்கள், மகளிர் அழகு சாதனப் பொருட்கள், போர்க்கருவிகள், தொழிற்கருவிகள், விளையாட்டுப் பொருட்கள், மனிதர், விலங்குகள் எலும்புக் கூடுகள் இன்னபிற.

6. எழுத்துப்பதிக்கப்பட்ட சுட்ட, சுடாத களிமண் பலகைகள், செங்கற்கள் (எகிப்திய, சுமேரியக் களிமண் பலகைகள், வடஇந்தியாவில் கண்டெடுக்கப்பட்ட செங்கற்கள்)

7. உள்நாட்டார், வெளிநாட்டார் எழுதி வைத்த நிகழ்ச்சிக் குறிப்புகள், பயணக் குறிப்புகள், வரலாற்றுக் குறிப்புகள், நாட்குறிப்புகள் (ஆனந்தரங்கம்பிள்ளை நாட்குறிப்புகள் போன்றன)

8. தனியார் பத்திரங்கள், அரசாங்கத் தஸ்தாவேஜிகள் இன்னபிற.

9. எழுதப்பட்ட இலக்கியங்கள், இலக்கணங்கள், இலக்கிய, இலக்கண உரையாசிரியர் உரைகள்

10, எழுதப்படாத நாட்டுப்புற வழக்காறுகள்; வாய்மொழி மரபில் பரவிவரும் (Oral transmission) நாட்டுப்புற இலக்கியங்கள்; சேகரிக்கப்பட்டு, தொகுக்கப்பட்டு, அச்சிடப்பெற்ற நாட்டுப் புற இலக்கியங்கள் இன்னபிற.

ஆகியன வரலாற்றை நிரூபிக்க உதவக்கூடிய சான்றாதாரங்களாகக் கொள்ளப்படுகின்றன.

### மொழியைப் பயன்கொண்டுள்ள வரலாற்று மூலங்கள்

மேற்காட்டிய வரலாற்றுச் சான்றாதார மூலங்களுள் மொழியைப் பயன் கொள்வனவற்றையும் மொழியை மூலமாக உடையனவற்றையும் தனியாகப் பிரித்துப்பார்க்கலாம், நடுகல், சாவான்கல், மாசதிக்கல், நாணயங்கள், பானை ஓடுகள், உலோகப் பொருட்கள், களிமண் பலகைகள், செங்கற்கள் ஆகியனவற்றில் பொறிக்கப்பட்டிருக்கும் பெயர்கள், வாசகங்கள் முதலானவை; கல்வெட்டுகள், செப்பேடுகள் முதலானவை, பயணக்குறிப்புகள், நாட்குறிப்புகள், வரலாற்றுக் குறிப்புகள், பத்திரங்கள் போன்றவை எழுதப்படாத, எழுதப்பட்ட இலக்கியங்கள் போன்றவை ஆகிய அனைத்தும் மொழியைப் பயன் கொண்டுள்ளன.

### இலக்கியங்கள் வரலாற்று மூலங்களாகுமா?

மேற்காட்டியவற்றுள் கடைசியாகக் கூறப்பட்ட இலக்கியமானது முற்கூறப்பட்டனவற்றிலிருந்து வேறுபட்டதாகும். இலக்கியமானது அது எழுதப்பட்டதாயிருப்பினும், எழுதப்படாததாயிருப்பினும் கற்பனைப் புனைவுகளை உடையதாக இருக்கும். உண்மை வரலாற்றிலிருந்து கற்பனைப் புனைவுகளைக் கவனமாகப் பிரித்தெடுக்க வேண்டியது வரலாற்றாசிரியனின் கடமையாக அமைகிறது. இது எளிதான வேலையுமன்று; கடுமையான பணி. ஓர் இலக்கியத்தை முற்று முதலாகக் கற்பனைப் புனைவு என ஒதுக்கித்தள்ளவும் இயலாது; அதில் கண்டுள்ள எல்லாத் தகவல்களையும் உறுதியான, உண்மையான முதன்மை ஆதாரங்களாகக் கருதி ஏற்கவும் இயலாது. கட்டப்பொம்மு, பூலித்தேவன், போன்றவர்களைக் குறித்து வழங்கி வருகின்ற (நாட்டுப்புறக்) கதைப்பாடல்கள் தமிழகத்தின் சில நிலப்பகுதிகளின் வரலாற்றை அறிதற்குத் துணைபுரிய வல்லனவாயினும் இக்கதைப் பாடல்களிலிருந்து சரித உண்மைகளைப் பகுத்துக் காண்பதில் கவனம் தேவை என்பர் ஆய்வாளர்.[1] உழைப்பில் தேர்ந்த ஆய்வாளர் கற்பனைப் புனைவுகளையும் உண்மை வரலாறுகளையும் பிரித்தறிவதில் வெற்றி பெறுவர்.

### வரலாறும் இலக்கியமும்

ஒரு நாட்டின் வரலாற்றோடு அந்நாட்டின் இலக்கியமும் தொடர்புடையதாகக் காணப்படும். சமூக மாற்றங்கள், அரசியல் மாற்றங்கள், பொருளாதார அமைப்புகள், சமய நிலை, மக்களின் கல்வி நிலை, பிறநாட்டவர் தொடர்பு, பிறமொழி இலக்கியச் செல்வாக்குப் போன்றவற்றிற்கு ஏற்ப இலக்கியங்கள் உருவாகும். எனவே இலக்கியத்தை அறிய வரலாறு உதவும். வரலாற்றை அறிய இலக்கியம் உதவும் என்பர்.[2] வரலாறும் இலக்கியமும் தொடர்புடையன. நீண்டகாலமாக வரலாறு இலக்கியத்தின் ஒரு பிரிவாகக் கொள்ளப்பட்டது. பத்தொன்பதாம் நூற்றாண்டி

1. பா. ராஜகோபால் சுப்பிரமணியன், தமிழக நாட்டுப் பாடல்கள், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, மு.ப. 1975, ப. 22.
2. வெ. கிருஷ்ணசாமி, **இலக்கிய ஆய்வில் வரலாற்று ஆய்வு முறையின் பங்கு.** ஆய்வுக் கோவை (தொகுதி 1) இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர், 1984, ப. 187.

லிருந்து வரலாறு தனி அறிவியலாகக் கருதப்பட்டு வருகிறது. வாழ்க்கையின் ஆவணமாக வரலாறும், பிரதிபலிப்பாக இலக்கியமும் இருக்கின்றன. பொருளும், பொருளின் நிழலும் என இவற்றைக் கொள்ளலாம். சில நேரங்களில் பொருளின் நிழல் பொருளைக் காட்டிலும் கவர்ச்சியாகத் தோன்றும். சித்திரம், ஒளிப்படம் (Photo) ஆகியன ஒருவனின் உண்மைத் தோற்றத்தைக் காட்டிலும் கவர்ச்சியுடையனவாகத் தோன்றலாம். அதுபோல வரலாற்றைக் காட்டிலும் இலக்கியம் சிறப்பானதாகத் தோன்றும். வரலாறு கடந்த காலத்தையும் இலக்கியம் நிகழ்காலத்தையும் வருங்காலத்தையும் பேசுகின்றன. கடந்த காலத்தைப் பேசுவது இலக்கியத்தின் முதற்பணியன்று. அது ஒரு விளை பொருள். வலிவு மிக்கது. கற்பனையை இவ்விரண்டும் பயன்படுத்துகின்றன எனினும் வரலாற்றில் கற்பனை மிகவும் குறைவே என்பதை அறிதல் வேண்டும்.[1] இந்திய வரலாற்றிக்குரிய மூலங்களுள் இலக்கியத்தையும் ஒன்றெனக் குறித்தல் வேண்டும் என்பர் ஆய்வாளர்.[2]

1. "History and literature are closely associated. For a long time history was considered a branch of literature, and it is only from the nineteenth century that history came to be regarded as a science. However, if history is the record of life, literature is the reflection of life—the substance and the shadow always go together. Sometimes the shadow has amused man much more than the substance, just as a painting or photograph of a person appears to be more glamorous than the person himself. The main theme of both history and Literature is man in society. Where as history deals with the past, literature deals with the present and the future, although biography, one of the branches of literature, deals with the past as well. Both these disciplines use imagination as their powerful weapon, although its use is not so liberal history".

—B. Sheik Ali, Op, Cit., pp. 80-81.

2. "The sources of, or original authorities for, the early history of India may be arranged in four classes. The first of these is tradition, chiefly as recorded in native literature; the second consists of those writings of foreign travellers and historians which contain observations on Indian subjects; the third is the evidence of archaeology, which may be sub-divided into the monumental, the epigraphic, and the numismatic; and the fourth comprises the few

### வரலாறும் நாட்டுப்புற இலக்கியமும்

முற்குறிப்பிட்ட ஏட்டிலக்கியங்களும் நாட்டுப்புற இலக்கியங்களும் வரலாற்றை அறிவதற்கு உதவி செய்ய வல்லன. இவற்றில் வரலாற்றுச் செய்திகள் புதை பொருளாக இடம் பெற்றிருக்கின்றன. பொதுவாக இலக்கியம் கற்பனைப் புனைவுகளைப் பயன் கொள்வதால் ஆய்வாளர் இவற்றிலிருந்து வரலாற்றைப் பிரித்தறிவதில் கவனமாக இருத்தல் வேண்டும்.

''பல்வேறு மக்கட் பகுதியினரிடையே வழங்கிய புராணக் கதைகள், கிராமியக் கதைகள், கற்பனைக் கதைகள் ஆகியனவற்றிலிருந்து கற்பனையினையும் பொய்யையும் நீக்கி வடித்தெடுப்போமானால் காலத்தை மறைத்து நிற்கும் திரை ஊடே வரலாற்று நிகழ்ச்சிகளைக் காணமுடியும்,''.[1] என அலெக்சாந்தர் துபியான்ஸ்கி கூறுகிறார். நாட்டுப்புறக் கதைகள் வரலாற்றுக்கு முந்திய காலத்தை ஊகித்தறியப் பயன்படுகின்றன எனவும் அவை சமுதாயத்தால் திரித்து மறைத்து வைக்கப்பட்டிருக்கும் உண்மைகள் எனவும் அலெக்சாந்தர் கொந்தரட்டனாவ் கூறுவர். இவர், மேலும் இப்பழைய வரலாற்றை ஊகித்தறிய, இவை பயனாகும் விதத்தைப்பல எடுத்துக்காட்டுகளுடன் விளக்கியுள்ளார்.[2] கல்வெட்டுகள் போன்ற மரபு வழிப்பட்ட வரலாற்று ஆதாரங்கள் வட்டார வீரர்களைப் பற்றி மிகக் குறைவான தகவல்களைக் கொண்டிருக்கிறபோது நாட்டுப்புற வழக்காறுகளே ஆய்வுக்குரிய வழியாக அமைகின்றன என்பர் ஆய்வாளர்.[3] ஒரு சமுதாயத்தின் நாகரிகம், பண்பாடு, வரலாறு ஆகியனவற்றுக்குக் கல்வெட்டுகளும் புதைபொருட்களும் எவ்வாறு உதவுகின்றனவோ அவ்வாறே

---

works of native contemporary, or nearly contemporary, literature which deal expressly with historical subjects''

—Vincent A. Smith, The Early History of India, Oxford, IV, 1967, p. 9.

1. மேற்கோளாட்சி, ஆ. சிவசுப்பிரமணியன், பூச்சியம்மன் வில்லுப்பாட்டு, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ்; சென்னை, மு. ப. 1989, ப. 1.
2. தே. லூர்து. நாட்டார் வழக்காற்றியல் ஓர் அறிமுகம், ஆசிரியர், திருநெல்வேலி, மு.ப., 1976, ப. (iv).
3. Quoted by P. R. Subramanian. An Introduction to the study of Indian Folklore, P.R.S. Publication Tuticorin, led, 1972, p. (i).

நாட்டுப்புறப் பாடல்களும் உதவுகின்றன என்பர் ஆய்வாளர்.[1] சரித்திர காலத்துக்கு முற்பட்ட வரலாறுகளைத் தெரிந்துகொள்ளப் புராண, இதிகாசங்களும் நாடோடிப் பாடல்களும் பயன்படுகின்றன எனப் பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அனைத்திந்தியக் கீழைத்தேய ஆய்வியலாளரின் மாநாட்டில் (நாகபுரி 1946) திராவிடவியற் பிரிவுக்குத் தலைமை தாங்கி ஆற்றிய உரையின்போது குறிப்பிட்டமை அறியத்தக்கது[2].

"நாட்டுப்புறவியல் மனித குலத்தின் கடந்தகால, நிகழ்கால அரசியல், சமுதாய வாழ்க்கையின் பிரதிபலிப்பாக உள்ளது. எனவே, நாட்டுப்புறவியலும் வரலாறும் நெருங்கிய தொடர்புடையதாகிறது. வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தின் வரலாற்றினை உணர்ந்து கொள்ளவும் கடந்தகால வரலாற்றினை மறுபரிசீலனை செய்யவும் நாட்டுப்புறவியல் துணை நிற்கிறது. அரசியல் வரலாறாயினும் சமுதாய வரலாறாயினும் இலக்கிய வரலாறாயினும் நாட்டுப்புறவியல் துணையில்லாமல் முழுமை பெறாது என்பதை உலக அறிஞர்கள் உணரத் தலைப்பட்டுள்ளனர்"[3] என்பர் ஆய்வாளர். நமது வரலாறு, மொழி, இலக்கியம், சமயம், சமூகவியல் என்பனவற்றைக் கற்கும்போது, வாய்மொழிப் பாடல்கள் எத்துணை முக்கியமானவை என்பதை உணர முடிகிறது எனவும் சுருங்கக் கூறின், ஒரு கட்ட மக்களின் பண்பாட்டுக் கருவூலமாக வாய்மொழி இலக்கியம் திகழ்கிறது எனவும் கூறும் க. கைலாசபதி[4] நாட்டுப்புறப் பாடல்கள் உண்மையான தேசிய வரலாற்றைப் பிழம்புருவமாகக் காட்டவல்லன எனும் ஜாக்லின்சே கூற்றை மேற்கோள் காட்டுவர்.[5] வரலாறு முதலிய பலதுறைகளைச் சார்ந்தவர்களும் தவிர்க்கவியலாதபடி நாட்டார் பண்பாட்டியற் கூறுகளை இனங்கண்டு

1. கோ. மா. கோதண்டம், தமிழ் நாட்டில் வழங்கும் தெலுங்கு நாடோடிப் பாடல்கள், தாமரை, சென்னை, ஜூலை 1989, ப. 71.
2. கா. சிவத்தம்பி, தமிழில் இலக்கியவரலாறு, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மு. ப., 1988, பக். 116-117.
3. அறு. இராமநாதன், நாட்டுப்புறவியல் ஆய்வுகள், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், மு.ப. 1986, ப. 163.
4. க. கைலாசபதி, முன்னுரை, மலைநாட்டு மக்கள் பாடல்கள், (ப. ஆ) ஸி. வி. வேலுப்பிள்ளை, அமைதி அகம் வெளியீடு, மதுரை, மு. ப., 1986, ப. 8.
5. மேலது ப. 10.

ஏற்பிசைவு தெரிவிக்க வேண்டியவர்களாயினர் என இவர் மேலும் கூறுவார்.[1] ஏட்டில் எழுதப்படாத நாட்டுப்புறப்பாடல் வரிகளில் வரலாற்றுச் செய்தியும் குறிப்பாக உணர்த்தப்படுவதை அறியலாம் என்பர் ஆய்வாளர்.[2]

"பொது மக்களின் எதிர்பார்ப்புகள், விருப்பு வெறுப்புகள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள், வாழ்க்கை அனுபவங்கள் ஆகியனவற்றின் வெளிப்பாடாகவே நாட்டார் பாடல்கள் தோன்றுகின்றன என்பது நாம் அறிந்ததே. வாய்மொழியாக வழங்கிவரும் இந்நாட்டார் பாடல்கள் எழுத்துச் சான்றுகளாக மாறிய பின்னர் அவற்றைப் புரிந்து கொள்ளவும் ஆய்வு செய்யவும் பயன்படுத்தும் ஆய்வுக் கோட்பாடுகளில் ஒன்றாக வரலாறு அமைகிறது. மக்களின் வாழ்க்கை முறையின் வளர்ச்சியினையும் அவர்களின் வாழ்க்கையில் மாறுதல்கள் அல்லது பாதிப்புகள் ஏற்படுத்திய நிகழ்ச்சிகளையும் காலவரிசைப்படி ஆராய்வதே வரலாறாகும். எனவே மக்களின் வாழ்க்கையைப் புலப்படுத்தி நிற்கும் நாட்டார் பாடல்களை வரலாற்றின் துணையுடன் ஆராய்வது முற்றிலும் பொருத்தமானதாகும். நாட்டார் பாடல்களின் உள்ளடக்கத்தையும் ஆய்வு செய்யும் ஒருவன் அதில் இடம் பெற்றுள்ள நிகழ்ச்சிகள், செய்திகள், பழக்க வழக்கங்கள் ஆகியனவற்றைப் புரிந்து கொள்ள அதனுடன் தொடர்புடைய வரலாற்றாவணங்களின் துணையுடன் ஆய்வு செய்யும் போது அவன் புதிய விளக்கங்களைப் பெறுகிறான்."[3] என்பர் ஆய்வாளர்.

மனித நாகரிக வரலாற்றோடு தொடர்புடைய அனைத்தும் இலக்கியத்தின் எல்லைக்குட் பட்டவையே எனும் எட்வின் கிரீன்லா (Edwin Greenlaw) கூற்று மனங்கொளத் தக்கது[4]. இலக்கியக் கல்வியானது நாகரிக வரலாற்றோடு நெருங்கிய தொடர்புடையது

---

1. க. கைலாசபதி (வாழ்த்துரை) வன்னி வளநாட்டுப் பாடல்கள், (ப. ஆ) செல்லையா மெற்றாஸ் மயில், முல்லை இலக்கிய வட்டம், மிதிலை, ஒட்டுசுட்டான் மு. ப., 1980, ப. (xv).
2. கே. ஏ. குணசேகரன், **ஆட்டக் கலைகளும் அனுபவச் செய்திகளும்** செம்மலர், மதுரை, நவம்பர் 1985, ப. 33.
3. ஆ. சிவ. சுப்பிரமணியன், நாட்டார் பாடல்களும் வரலாறும், தாமரை, சென்னை, டிசம்பர் 1986, ப. 33.
4. ரெனிவெல்லாக் மற்றும் ஆஸ்டின் வாரன், இலக்கியக் கொள்கை, (மொ. ஆ) எல். குளோறியா சுந்தரமதி, பாரிநிலையம், சென்னை, மு. ப. 1966, ப. 10.

மட்டுமன்று; அதனோடு ஒன்றி அமைந்ததுமாகும். நாட்டுப்புறப் பாடல்களையும் வரலாற்றினை அறியப் பயன்படும் ஏனைய மூலங்களோடு சேர்த்துக் கொண்டாலன்றி எழுத நினைக்கும் ஒரு நாட்டினுடைய வரலாறு முழுமையாக அமையாது என்பர் ஆய்வாளர்.[1] நாட்டுப்புறப்பாடல்களை வரலாற்றுக்கு உதவும் ஒரு பெருந் துணைக் கருவியாகக் (Historical Source) கொள்வதுதான் அப் பாடல்களுக்குக்கிடைத்த உண்மையான மதிப்பீடாக அமையும் என்பர்.[2] வரலாற்றை அறிய முடியாத நிலையில் எந்த மூலங்களும் இல்லாத மக்களின் வரலாற்றை அறிய நாட்டுப்புறப்பாடல் உதவும் என்பதற்குப் போலினீசியத் தீவில் நியூசிலாந்துப் பகுதியில் வாழும் மோவிக் குடியினர் பாடும் நாட்டுப்புறப்பாடல் சான்றாக உள்ளது. இவர்கள் ஹாவாய்த் தீவிலிருந்து வந்து சேர்ந்தவர்கள் என்பதை அவர்கள் பாடும் பாடல் காட்டுகிறது.[3] ஒரு வரலாற்றை எழுதுவதற்கு மரபுவழிப்பட்ட மேலோர் இலக்கியங்களாகிய செவ்விலக்கியங்களும் ஏட்டிலக்கியங்களும் கைகொடுத்து உதவ முடியாத இடங்களில் எல்லாம் நாட்டுப்புறப்பாடல்கள் தாராளமாகக் கைகொடுத்து உதவுகின்றன என்றும் ஆய்வாளர் கூறுவர்.[4] மக்கள் வாழ்க்கையில் நிகழ்ந்துவிட்ட என்றும் மறக்க முடியாத துன்ப நிகழ்ச்சியை —பெரியதொரு பஞ்சத்தை—துன்ப இருளில் நாட்டை மூழ்கச் செய்த பெரிய போரை—வரலாற்றை மாற்றியமைத்த மாவீரர்களின் வாழ்க்கையை நாட்டுப்பாடல்கள் வண்ண ஓவியந் தீட்டி விளக்குகின்றன.[5] ஒரு நாட்டு மக்களின் நாகரிகத்தை, பண்பாட்டை, பழக்க வழக்கங்களை, வரலாற்றை, நாட்டுநடப்பை உண்மையான முறையில் படம் பிடித்துக் காட்டுவன நாட்டுப்புறப் பாடல்களேயாகும்[6]. ஒரு நாட்டின் வரலாற்றை அறிய நாட்டுப் புறப் பாடல்கள் மிகச்சிறந்த துணைபுரிவன.[7]

---

1. அறு. அழகப்பன், நாட்டுப்புறப்பாடல்கள் திறனாய்வு, கழகம், சென்னை, இ.ப., 1980, ப. 153.
2. மேலது, ப. 230.
3. மேலது, பக். 154-155.
4. மேலது, ப. 230.
5. மு. வை. அரவிந்தன், தமிழக நாட்டுப்பாடல்கள், லட்சுமி பதிப்பகம், சென்னை, மு. ப., 1977, பக். 12-13.
6. சு. சக்திவேல், நாட்டுப்புறவியல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், மு.ப. 1983, ப. 18.
7. ஆ. திருநாகலிங்கம், தமிழக நாட்டுப்புறப்பாடல்கள், தினமணி, சென்னை, ஏப். 12. 1989, ப. 6.

"நாட்டுப்புறப்பாடல் ஓர் இலக்கிய ஊற்று, இன்னும் ஆழமாகச் சிந்தனை செய்தால் அது ஓர் ஊற்று இலக்கியம் என்ற உண்மை பெறப்படும். ஏனென்றால் இந்த அடிப்படை இலக்கிய ஊற்றிலிருந்துதான் நாட்டு வரலாறுகள், குடும்ப வரலாறுகள், கலைகள், காவியங்கள், பழமொழிகள், விடுகதைகள், பண்பாடுகள் பிறக்கின்றன."[1] நாட்டு வரலாறும் நாட்டுப்புறப் பாடல்களால் தெரியவருகின்றன எனும் மெ. சுந்தரம் கூற்று கவனிக்கத் தக்கது. நாமக்கல் கவிஞர் இராமலிங்கம்பிள்ளை,

"உழவும் தொழிலும் இசைபாடும்
உண்மைச் சரித்திரம் அசைபோடும்"[2]

எனப் பாடுவார். உழவுத் தொழிலிலும் வேறுபல தொழில்களிலும் பிறக்கும் தொழிற்பாடல்களில் உண்மைச் சரித்திரம் உள்ளதாகக் கூறும் கவிஞரின் கூற்று மெய்யானது.

### நாட்டு நடப்புகளை மக்கள் நாட்டுப்புறப் பாடலில் பாடுதல்

மக்கள் நெஞ்சில் ஆழப்பதியும் செய்திகள் பாடல்களின் உள்ளடக்கமாக மாறுகின்றன. தன்னேரில்லாப் பெருமையும் செல்வ வளமும் பாட்டாகின்றன. கண்ணால் கண்ட அதியற்புதச் செயல்கள் மக்கள் உள்ளத்தை நெடுங்காலம் பற்றிக் கொள்கின்றன. போரினால் உண்டாகக்கூடிய சேதங்கள், அப்போர் உண்டாக்கும் அச்சம், சாதிக் கலவரங்களின் விளைவாக நடக்கும் படுகொலை முதலான வன்முறைச் செயல்கள். பஞ்சத்தால் உண்டாகும் பரிதாபச் சாவு, இது உண்டாக்கும் பீதி, நோய் நொடிகளால் மக்கள் செத்து மடியும்போது உருவாகும் அவலம், விபத்து, புயல், வெள்ளம், கடல்கோள் முதலியன உருவாக்கும் எதிர்பாராத மரணம் ஆகியன நாட்டுப்புற மக்களின் இரக்க உணர்வை, பரிதாபச் சிந்தனையை மிகுவித்துப் பாடல் எனும் வடிகாலில் செய்திகளாக வெளிப்படுகின்றன.

### துயர நிகழ்ச்சிகள்

துயரம் காரணமாக உருவாகும் நாட்டுப்புறப் பாடல்கள் இருவகையாகின்றன. தனி மனித வாழ்வில் நிகழும் துயரம், சமூக வாழ்வில் நிகழும் துயரம்என்பன அவை. தனிமனித வாழ்வில்

1. மெ. சுந்தரம், நாட்டுப்புறப் பாடல்கள், மணிவாசகர் நூலகம்; சிதம்பரம், மு.ப. 1981, பாயிரம், ப. (ix).
2. சோமலெ, செட்டிநாடும் தமிழும், பாரிநிலையம், சென்னை, இ.ப. 1960, ப. 216.

உருவாகும் துயரமும் உறவு முறையுடையோர் வாழ்வில் நிகழ்வது, பிறர்வாழ்வில் நிகழ்வது என இரண்டாகப் பிரியும். தாய், தந்தை' உடன் பிறந்தார், கணவன் ஆகியோர் இறப்பு ஒப்பாரிப் பாடல்களா கின்றன; மற்றவர் இறப்பு இரங்கல் பாடலாகிறது. சமூகவாழ்வில் நடக்கும் துயரங்களும் பாடல்களாகின்றன. 1857இல் நடந்த முதல் இந்திய விடுதலைப்போரால் லக்னோ (Lacknow) நகரம் அழிந்த மையும் 1877-'78 ஆண்டுகளில் தமிழ் நாட்டிலும் வங்காளம் முதலான இடங்களிலும் மழையின்மை காரணமாக ஏற்பட்ட கொடிய தாதுவருடப் பஞ்சமும், 1956ஆம் ஆண்டு அரியலூரில் ஏற்பட்ட கொடிய ரயில் விபத்தும், 1964ஆம் ஆண்டு மதுரை மணிநகரில் இடிந்த சரசுவதி பள்ளிக்கூடத்தில் அகப்பட்டு இறந்த சிறார்களின் துயரமுடிவும், 1964ஆம் ஆண்டு டிசம்பர்மாதம் வீசி யடித்த தனுஷ்கோடிப் புயலும் பெருமழையும் இவற்றில் அகப்பட்ட இரயில் பாம்பன் பாலத்திலிருந்து கடலில் விழுந்தமையும் இராமேஸ்வரம் முதலான இடங்களில் பொங்கிப் பெருகிய கடல் வெள்ளமும் சமூகத் துயரப் பாடல்களாக உருவாகியுள்ளன.[1]

அவ்வூர்களில் நிகழ்ந்த நீர், நெருப்பு ஆகியவற்றால் ஏற்பட்ட அழிவுகளை நாட்டுப்புறக் கலைஞர்கள் பாடல்களாக்குகின்றனர் என்பர்.[2] முற்கூறிய தாதுவருஷத்துப் பஞ்சம் கும்மிப்பாடலாக உருவாகியது. இதனைத் 'தாதுவருஷத்துப் பஞ்சக் கும்மி' என அழைக்கின்றனர்.[3] மதுரைக்கு மேற்கே கம்பம், தேனி ஆகிய பகுதிகளில் பலர் மடிவதற்குக் காரணமான பிளேக் (Plague) நோய் 'பிளேக் சிந்து'ப் பாடலாக உருவாகியுள்ளது. 'சிவரக்கோட்டை பாலத்தில் ரயில் முட்டிய சிந்து' எனும் நாட்டுப்புறப்பாடல் பாலத்தில் ரயில் மோதிய விபத்தைக் கூறும் பாடலாகும்.

தென்னார்க்காடு மாவட்டக் கொலைச் சிந்துப் பாடல்கள் பலராலும் அறியப்பட்டன. கொலை செய்யப்பட்டவர் வரலாறு, அவர் கொலை செய்யப்பட்ட விதம் ஆகியன கொலை நிகழ்ந்த உடனே பாட்டாகக் கட்டப்பட்டு நாட்டுப்புறக் கவிஞர்களால் சாலையோரங்களில், திருவிழாச் சமயங்களில், பேருந்து, இரயில் நிறுத்தம் ஆகிய இடங்களில் மக்கள் கூட்டம் கூடும் இடங்களில்,

1. செ. போத்திரெட்டி, தனுக்கோடி நாட்டுப்புறப் பாடல்கள், (வெளியிடப்படாத எம்.பில். பட்ட ஆய்வேடு) இந்துக்கல்லூரி, நாகர்கோயில் 1981, பக். 17–22.
2. மா. நவநீதகிருட்டிணன் மற்றும் கே. ஏ. குணசேகரன், கரகாட்டம், அகரம், சிவகங்கை, மு. ப., 1982, ப.52.
3. அ. நா. பெருமாள், நாட்டுப்புறவியல் சிந்தனைகள், தேன்மழைப் பதிப்பகம், சென்னை, மு. ப. 1987, ப.103.

பொருட்காட்சிகளில் பாடப்படுகின்றன. ஓரணா, இரண்டணா, நாலணா விலையில் அப்பாடல்கள் அச்சிடப்பட்டு விற்பனையும் செய்யப்பட்டன. இப்போதும் அவை கால்ரூபாய், அரை ரூபாய் விலையில் விற்கப்படுகின்றன. இப்பாடல்கள் துயரச்சுவை நிரம்பியன. கேட்போரை மனம் நெகிழவைப்பன. பேனா வியாபாரி ஆளவந்தார் கொலை வழக்கு[1] சித்தையன் கொலை, மதுரை டி.வி.எஸ். டிரைவர் கொலை (1953)[2] ஆகியவற்றின்மீது பாடப்பட்ட பாடல்கள் இவ்வகைப்பட்டன. நேரு, இந்திரா காந்தி முதலான தேசியத் தலைவர்களும், அண்ணாதுரை' காமராசர், எம்.ஜி.ஆர். ஆகிய மாநிலத் தலைவர்களும் முத்துராமலிங்கத் தேவர், கக்கன் ஆகிய சாதியத் தலைவர்களும் மறைந்தபோது இப்படிப்பட்ட பாடல்கள் புனையப்பட்டன.

**பிறநிகழ்ச்சிகள்**

விக்டோரியா மகாராணி ஜுபிலித் திருநாள் கும்மி, வேலூர் கும்பாபிஷேகக் கும்மி, மதுரை சித்திரைத் திருவிழாப்பாட்டு, இராயபுரம் இரயில்வே ஸ்டேஷன் கடைக்கால் கும்மி ஆகிய நாட்டுப்புறப்பாடல்கள் நல்ல நிகழ்ச்சிகளைக் கருப்பொருளாகக் கொண்டன. தனிமனித வரலாறுகள் பலவும் இப்படியே பாடல் களாக உருவெடுத்துள்ளன. காமிலொலி நயினா முகம்மது சாகிபைப் புகழ்ந்து பாடும் சாரணக்கும்மி, கந்தப்ப செட்டியாரைச் சிறப்பிக்கும் சிங்காரக்கும்மி, சுப்புத் தேவரைப் புகழும் கும்மி, முத்தணைந்த முதலியாரை உயர்வு படுத்திப் பாடும் கும்மி ஆகியன தனிமனித வரலாற்றுப் பாடல்களாகும்.[3] இவை போலச் சமூக வரலாற்றுக் கும்மிப் பாடல்கள் சில உள்ளன. எ. வைத்திய நாதய்யர் ஐந்து அரிசனரையும் ஒரு நாடாரையும் மதுரை மீனாட்சியம்மன் கோயிலுக்குள் 1939ஆம் ஆண்டு ஜுலை மாதம் 8ஆம் தேதி அழைத்துச் சென்றார். கோயில் நுழைவு மறுக்கப் பட்ட இவர்கள் (அரிசனங்கள், நாடார்கள்) கோயிலில் நுழைந்ததைக் கண்டித்து மதுரை பேச்சியம்மன் கோயில் ரஸ்தா லேட்பத்மநாபய்யரவர்கள் பாரி(மனைவி) பாகீரதி அம்மாள் 'ஆலய (பிரவேச) கும்மிபாட்டு புஸ்தகம்' (16 பக்கங்கள்'

---

1. கே. ஏ. குணசேகரன், **கிராமியக் கலையும் சமூகத் தேவையும்**, செம்மலர், மதுரை, ஜுலை 1983, பக். 45-46.
2. லேனா தமிழ்வாணன். நாட்டுப்புறப் பாடல்கள், மணிமேகலை பிரசுரம், சென்னை, மு.ப. 1984, பக். 36-37.
3. அ. நா. பெருமாள், நாட்டுப்புறவியல் சிந்தனைகள், பக். 102-103.

இரண்டு அணாவிலை) எனும் நூலையும் மதுரை கமலத் தோப்புத் தெரு எஸ். தர்மாம்பாள் 'ஆலய பிரவேச கண்டனப்பாட்டுப் புஸ்தகம்' (28 பக்கங்கள், இரண்டு அணா விலை) எனும் நூலையும் வெளியிட்டனர். கே. ஆர். வெங்கடராமய்யரும் ஆறுபாதி நடேச ஐயரும் வர்ணாஸ்சிரம ஸ்வராஜ்ய சங்க உதவியுடன் வைத்திய நாதய்யரை எதிர்த்தவர்களாவர். அப்போதைய சென்னை மாகாண பிரதம மந்திரி இராஜகோபாலாச்சாரி ஆலயப் பிரவேசத்திற்கு ஆதரவளித்தார். பாகீரதி அம்மாள் கும்மிப் பாட்டு ஆலயத்தில் நுழைந்த அரிஜனங்களையும் நாடாரையும் சண்டாளர்கள் எனக் கூறுகிறது. எ. வைத்திய நாதய்யர், கோயில் நிர்வாக அதிகாரி ஆர். எஸ். நாயுடு ஆகியோர் சண்டாளர் களைக் கோயிலில் நுழையச் செய்து அக்கிரமம் செய்ததாகத் தர்மாம்பாள் கும்மிப்பாடல் கண்டிக்கிறது.[1]

இப்படிப்பட்ட பாடல்களைப் பற்றி அ. சக்திவேல், "ஒரு குறிப்பிட்ட நபர் அல்லது ஒரு குறிப்பிட்ட நிகழ்ச்சி பற்றி இலக்கியம் எழுமாயினும், அந்நிகழ்ச்சி அல்லது நபரோடு உள்ள அக்கறை காரணமாக அன்றி, சூழ்நிலைகளை அவற்றின் இயல்பான தொடர்பு முறைகளோடும் கண்ணோட்டங்களோடும் சிந்திப்பதனாலேயே அவை சமூகவியலுக்கு ஆதாரமான மெய்யான குறிப்புகளைக் கொண்டு விளங்குகின்றன."[2] என்று கூறுவர். சமகால நிகழ்ச்சிகள் எழுத்தறிவுடையோரின் கருத்தையும் கவனத்தையும் மட்டுமே ஈர்க்கும் என்று கருதுவது தவறாகும் எனவும், எழுத்தறிவில்லாப் பாமர மக்களையும் நிகழ்ச்சிகளின் வீச்சுகள் தாக்கி, அவர்தம் உள்ளத்தே பாதிப்புகளையும் எதிர் விளைவுகளையும் தோற்றுவிக்கின்றன எனவும் ஆய்வாளர் கூறுவர்.[3]

இனி மேற்காட்டிய வரலாற்று நிகழ்ச்சிகளுக்கு நாட்டுப்புறப் பாடல்கள் வரலாற்றாவணங்களாக அமையுந்திறம் பற்றிக் காணலாம்.

## 1. வணிகப் பெருமை—முத்து ஏற்றுமதி

பழந்தமிழ் நாட்டில் ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற ஏற்றுமதி, இறக்குமதி பற்றி இலக்கியங்களும்

1. தொ. பரமசிவன், "மதுரைக் கோயில் அரிசன ஆலயப் பிரவேசம்", நாவாவின் ஆராய்ச்சி, தூத்துக்குடி, அக்டோபர் 1989, பக். 227-231.
2. மேற்கோளாட்சி, செ. போத்திரெட்டி, மு. நூ., ப. 17.
3. மேலது.

வரலாற்றுக் குறிப்புகளும் கூறுகின்றன. முத்து ஏற்றுமதி இவற்றில் முக்கியமானது. 'முத்துப்படு பரப்பின் கொற்கை முன்துறை' எனக் கணக்காயனாரும் (நற். 23) அலங்கு இதழ் நெய்தல் கொற்கை முன்துறை இலங்கு முத்து' என அம்மூவனாரும், (ஐங். 185) 'புகழ்மலி சிறப்பின் கொற்கை முன்துறை அவிர்கதிர் முத்தம்' என மாமூலனாரும் (அகம். 201) 'கொற்கையம் பெருந் துறை முத்து' என மதுரைக் கணக்காயனாரும், (அகம். 27)'முத்தின் கொற்கை' என மாங்குடி மருதனாரும், (மது. 217) பாண்டிய நாட்டின் துணைத் தலைநகரமும் துறைமுகப்பட்டினமுமாகிய கொற்கைக்கும் முத்துக்கும் உள்ள தொடர்பைப் புலப்படுத்தி யுள்ளனர்.

பொதுவாகப் 'பாண்டிய நாடு முத்துடைத்து' எனும் பெருமை பெற்றதாகும். பாண்டிய நாட்டின் கிழக்குக் கரையோரமாகக் கொற்கையை யொட்டிய கடல்படுகைகளில் மட்டுமே முத்துக் குளிக்கும் தொழில் நடந்ததாகக் குறிப்புகள் இல்லை. பாண்டிய நாட்டின் கடல் எல்லைப் பகுதிகளில் குளித்தெடுக்கப்பட்ட முத்துச் சிப்பிகள் ஆட்சிப் பயிற்சி பெறும் அரசிளங் குமரனால் நிர்வகிக்கப் பட்ட துணைத்தலைநகரமும் துறைமுகப்பட்டினமுமாகிய கொற்கைக்குக் கொண்டுவரப்பட்டன. அங்குத் தொழிலுக்குப் பாண்டிய நாட்டு அழகன் குளம் பெயர் பெற்றதுபோல முத்துத் தொழிலுக்குக் கொற்கை பெயர்பெற்றது. இது பற்றி ஆய்வாளர் விளக்கம் அறியத் தக்கது.[1]

---

1. "Among the more important references which prove the ancient importance of this industry on the Indian shore of the Gulf of Mannar, is one contained in the Maduraikkanchi a Tamil poem which incidentally describes the ancient city of korkai, once the sub-capital of the Pandian Kingdom and the great emporium familier to Greek and Egyptain sailors and traders and described by the geographers of the 1st and 2nd centuries A.D., under the name of Kolkhoi. From the purity of the Tamil employed in this poem and the similarity of the names of the towas, ports and goods mentioned incidentally with those employed by Ptolemy and the author of the "Periplus of the Erythraean sea", we may date it as approximately contemporaneous with the writings of these authors and certainly not later than the 2nd or 3rd century A.D."

— James Hornell, The Sacred Chank of India (Part II), Govt Press, Madras, 1914, p.42.

**முத்துக் குளிக்கும் இடங்கள்**

அன்றுமுதல் இன்றுவரை முத்துவளம் கொழிக்கும் முத்துப் படுகைகள் (Pearl Banks) இராமநாதபுரம் திருநெல்வேலி (இன்றைய சிதம்பரனார் மாவட்டம்) ஆகிய மாவட்டங்களுக்கும் இலங்கை வடக்கு, வடமேற்குப் பகுதிகளுக்கும் இடைப்பட்ட கடல் பகுதியில் அமைந்துள்ளன. இராமேஸ்வரம் கடற்கரைப் பகுதியில் முத்துக் குளிக்கும் பல இடங்கள் உள்ளன. கோதண்டராமன் கோயில் நேர்ப்பார், நடுப்பார், கண்ணிகிப்பார், நரிக்குழிப்பார், விலங்குப்பார். கொண்டல்பார் ஆகிய இராமேசுவரம் பகுதிகளும் தாமோதரப்பட்டினம், பாசிப்பட்டினம், தொண்டி, காரங்காடு, பெரியம்மன் முனைப்பார் ஆகிய தொண்டிப் பகுதிகளும் அப்பாதீவு விலங்குப்பார், அப்பாதீவுக் கரைப்பார், கிழிஞ்சுன்பார், உஸ்மான் சாஹிப்பார், வலைத் தீவுப்பார் ஆகிய கீழிக்கரைப் பகுதிகளும் முத்துக்குளிக்கும் இடங்களாக உள்ளன.[1] மன்னார் வளைகுடாவில் தொள்ளாயிரம் பார், சைத்தான் பத்துப்பார், கூத்தாடியார் பார், கோடமுத்துபார், ராஜாவுக்குச் சிப்பிபார், சோதிச்சபார், கருவல்பார், வடக்குத் தொள்ளாயிரம்பார், தெற்குத் தொள்ளாயிரம் பார், காரைக் கொளுத்திப்பார், சுல்தான்பார், நடுமலை பிடித்தப்பார், பெரியமலை பிடித்தப்பார், திருச்செந்தூர்ப் பூந்தோட்டம்பார், மணப்பாடு பெரியபார் ஆகிய இடங்களில் முத்துக் குளிக்கப்பட்டன என்பர்.[2]

வைப்பாறு பெரியபார், தேவிபார், பர்னாந்துபார், படுத்த மரைக்கான் துண்டுபார், சிலுவைபார், சிலுவைத்துண்டுபார், கிளத்திபார், ஆதுரை ஆறுபாகம்பார், வாந்திவருபார், பாகம்பார், புலிப்பூண்டுபார், கானாப் புலிப்பூண்டுபார், கானாத்தீவு ஆறுபாகம்பார், கானாத்தீவு துண்டுபார், தொள்ளாயிரம் வடக்குப் பார், தொள்ளாயிரம் நடுப்பார், தொள்ளாயிரம் தெற்குப்பார், மேல் ஒன்பதுபார், ஆத்தொன்பதுபார், கோடமுத்துபார், செய்யது

---

1. A.D. Isaac & Freda chandrasekaran, **'Report on the survey of Pearl Banks off Ramanathapuram coast during 1965'** Madras Journal of Fisheries, (Vol. V), Govt. of Tamil Nadu, Madras, 1969, p.100.
2. P. S. Sambamoorthy, **On a Survey of the Pearl Banks of Tuticorin, Gulf of Mannar in 1961-62,** Madras Journal of Fisheries (Vol II) Govt. of Tamil Nadu, Madras, 1966, pp. 71-75.

கோடமுத்துபார் ஆகியன முத்துக்குளிக்கும்பார்கள் எனக் கூறுவர்.[1] இத் தென்னாட்டு முத்துப் படுகைகள் கன்னியாகுமரி முதல் இராமேஸ்வரம் வரை நூறு மைல்கள் அளவுக்குக் கடல் அடியில் உள்ளன என்பர்.[2]

**முத்து ஏற்றுமதி—தூத்துக்குடி**

சங்க காலத்தில் முத்து ஏற்றுமதிக்குக் கொற்கைத் துறைமுகம் தளமாக இருந்தது. இவ்வியற்கைத் துறைமுகம் அழிந்தபின்னர் தூத்துக்குடித் துறைமுகம் முத்து ஏற்றுமதிக்குத் தளமாக அமைந்தது. தாலமி, பிளைனி ஆகியோர் இந்நாட்டுக்கு வந்த காலக் கட்டத்திலேயே தூத்துக்குடி சிறப்புடன் இயங்கியமையை அவர்தம் பயணக் குறிப்புகள் காட்டுகின்றன என்பர் கட்டுரையாளர்.[3] "செழுமதி குலத்தவர் தெண்டிரை குளித்த நித்தில வளஞ் செறிந்திலங்கும் சீர்திரு மந்திர மாநகர்' எனும் முறாயிஸ் செய்யுள் இதனை அரண் செய்யும்.[4] 'விலைமதியா முத்துக்கள் விளையும் கலை பொருந்திய நகரம்' எனச் சந்தன மாரியம்மன் முளைப்பாரிப்

---

1. P.1. Chacko & P.S. Sambamoorthy, **Conditions of Existance in Twenty Pearl Banks in the Gulf of Mannar off Tuticorin during 1962-63**, Madras Journal of Fisheries (Vol. V), Govt. of Tamil Nadu, Madras, 1969, p.94.
2. T.S, Dhandapani, **Pearl Fisheries India**, The Hindu, Madras, March 28, 1955, மறுஅச்சு, தமிழாக்கம், பனிமயமலர், தூத்துக்குடி 1955, ப.31.
3. "Tuticorin is a sea port town situated in the Gulf of Mannar, very famous for pearls and therefore known as the city of pearls. Historian Ptolemy calls it as Sosikourai and another historian Pliny refers in very high terms about the pearls of Tuticorin, obtained in those days from a place 15 miles away from Tuticorin. History also mentions that Servilla Pearl was Presented by the famous Julius Caesar to the mother of Marcus of Brutus which was valued in those days at Rs. 4,72,500/-

   — Quoted by T.J. Vaz from 'Some Thought', by C. Ramasamy Aiyar, **'The Prominant Catholic chuch at Tuticorin Our Lady of Snows Chuch 400 years Old Marin Shrine'** பனிமய மலர், தூத்துக்குடி, 1988.
4. M.A.S.A. முறாயிஸ், **திவ்யதஸ்னேவில் அன்னையே** பனிமயமலர், தூத்துக்குடி, 1988, ப.30.

பாடல் கூறுவதும் கவனிக்கத் தக்கது.[1] குமரிக்கடல் முதல் இராமநாதபுரம் வரை அமையப்பெற்ற முத்துப்படுகைகளில் இயற்கையாக விளைந்த முத்து, பாண்டிநாட்டுக்கு, தமிழ் நாட்டுக்குப் பெருமை சேர்த்தது.

## வடஇந்தியாவிற்கும் உலகின் பிறபாகங்களுக்கும் முத்து ஏற்றுமதி ஆதல்

பாண்டிய நாட்டு முத்து இந்திய நாட்டின் வடபகுதிக்கும் உலகின் பிறபாகங்களுக்கும் குறிப்பாக மேலை நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டன. உரோம் நாட்டார் ஒரு மடங்கு முத்துக்கு மூன்று மடங்குப் பொன் கொடுத்து நம் நாட்டு முத்தை வாங்கிச் சென்றனர்.[2] இதனால் உரோம் நாட்டில் பொன் தட்டுப்பாடு உண்டாயிற்று எனவும் உரோமாபுரி மக்கள் பொறுப்பின்றி இங்ஙனம் முத்து இறக்குமதி செய்வதால் அந்நாட்டு வளம் முற்றிலும் அழிந்துபோகும் நிலை உண்டாகும் எனவும் அந்நாட்டு நூலாசிரியர் எழுதியிருப்பதாகக் கூறுவர். மேற்குலக நாடுகளே முத்து இறக்குமதியில் முன்னின்றன.[3] இது பற்றி ஆய்வாளர் கூறுவது கவனிக்கத்தக்கது.

"பாண்டி நாட்டு முத்து இந்தியா முழுவதும் புகழ் பெற்றது... கி.மு. முதல் நூற்றாண்டில் உரோமக் கப்பல்கள் செங்கடல் வழியாகத் தென்னிந்திய ராஜ்யங்களான சேர, சோழ, பாண்டிய நாடுகளை வந்தடைந்தன. இந்நாடுகளின் பட்டினங்களில் உரோமர்கள் வாணிப நிலையங்களை அமைத்தனர்...சரக்குகளுக்கு விலையாக உரோமர்கள் தங்கக் காசுகளை அனுப்பினர். அவை தென்னிந்தியா முழுவதிலும் இருந்து அகழ்ந்து கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. பிளினி என்னும் உரோம வரலாற்றாசிரியர் ஆடம்பரப் பொருட்களுக்காக உரோமர்கள் இந்தியாவிற்கு

1. க. சுப்புலட்சுமி, 'திருமந்திர நகரில் தாய்த்தெய்வ வழிபாடு' (வெளியிடப்படாத எம்.பில் பட்ட ஆய்வேடு), ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி, 1989, ப.153
2. வி.எஸ்.வி. இராகவன், மெகஸ்தனீஸ், மணிவாசகர் நூலகம், சிதம்பரம், மு.ப. 1978, ப.236.
3. டி.வி. சதாசிவ பண்டாரத்தார், பாண்டியர் வரலாறு, சென்னை, 1968, பக். 184-185.

ஏராளமான தங்கத்தை அனுப்புகிறார்கள் என்று கூறித் தன் நாட்டவர்களைக் கண்டித்தார்".[1] என்பர் அவர்.

ஜூலியஸ் சீசர் கிளியோபாட்ராவுக்கு இரு முத்துகளைப் பரிசளித்தான் எனவும் இப்பிரசித்தி பெற்ற முத்துகளைக் கிளியோபாட்ரா மார்க் அந்தோணியாவுக்கு விருந்தளிக்கும்போது அணிந்திருந்தாள் எனவும் இவை 18,75,000 வெள்ளி பெறுமதியுள்ளவை (ரூ. 22,00,000) எனவும் பிளினி கூறுவார். சாலமன் அரசனைப் பேட்டி காணச் சென்ற எத்தியோப்பிய அரசி தன்னுடன் கீழ்த்திசை முத்துகள் சிலவற்றை எடுத்துக்கொண்டு சென்றாள் எனப் பரிசுத்த வேதாகமம் (பைபிள்) கூறும். ஹெலேனாஸ் அரசன் தன் மகள் ஹெர்னாகிளஸ் உபயோகத்திற்காக இந்தியக் கடல்களில் அகப்படும் விலையுயர்ந்த முத்துகளை வரவழைத்தான் எனும் செய்தி உண்டு. கிளாடியஸ் அரசன் தன் வளத்தை வெளிப்படுத்தவோ அல்லது உடல் உரத்தை மிகுதிப்படுத்தவோ 40,000 வராகன் பெறுமதியுள்ள ஒரு முத்தைச் சாம்பலாக்கித் திராட்சைச் சாற்றுடன் கலந்து குடித்தான். கி.பி. 1292ஆம் ஆண்டு இங்கு வந்த மார்கோபோலோ முத்து, முத்துச் சலாபம் குறித்து எழுதியுள்ளார். கி.பி. 1499இல் வந்து சேர்ந்த வாஸ்கோடிகாமா திருநெல்வேலி மாவட்டக் கடற்கரை முத்துகளைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார். கி.பி. 1542இல் போர்ச்சுகல் அரசருக்குப் புனித பிரான்சிஸ் சேவியர் (St. Francies Xavier) எழுதிய கடிதங்களில் பாண்டிய நாட்டு முத்துகள் பற்றிய குறிப்புகள் உள்ளன. காளிதாசரின் இரகுவம்சமும் வராகமித்திரரின் பிருகத் சம்ஹிதாவும் தாம்பிரபரணி நதித்தீர முத்துகள் பற்றியும் அவை வடநாடு சென்றமை பற்றியும் கூறுகின்றன.[2]

### இவ்வரலாறு நாட்டுப்புறப்பாடல்களில் பதிவாதல்

இந்த வரலாறுகள் எல்லாம் தமிழ்நாட்டார் நாட்டுப்புறப் பாடல்களில் பதிவாகியுள்ளன.

"வைகை பெருகிவர
வார்த்த மணம் ஊறிவர
ஊறிவந்த தண்ணரியிலே
ஓட்டிவந்த கட்டிமுத்தோ

1. ரொமீலா தாப்பர், **வரலாறும் வக்கிரகங்களும்,** (மொ. ஆ.) நா. வானமாமலை, ஆராய்ச்சி, பாளையங்கோட்டை, பிப்ரவரி 1973, ப. 307.
2. பீட்டர் தேவதாஸ், **அலைகடல் அளிக்கும் அழகு வெண்முத்து**, பனிமயமலர் (1555-1955), (ப.ஆ) விக்டர் பர்னாண்டோ, தூத்துக்குடி, 1955, பக். 72-73.

கொட்டிவச்ச முத்தோ
குமிச்சுவச்ச ரத்தினமோ
கட்டிக் கரும்போ
காணிக்கை ஆணிமுத்தோ

முத்தில் ஒருமுத்தோ
முதிர விளைஞ்ச முத்தோ
தேற விளைஞ்ச முத்தோ
தில்லைக்கு உகந்தமுத்தோ

பாண்டிப் பெருமுத்தோ
பாட்டன்மார் ஆண்டமுத்தோ
ஆணிப் பெருமுத்தோ
ஐயாக்கள் ஆண்டமுத்தோ

முத்துமுத்து ஆத்துக்குள்ளே
மூணாத்துப் பாய்ச்சலிலே
முக்குளிச்சி முத்தெடுக்கும்
முத்துமகள் நித்திரைபோ''.[1]

எனும் செட்டிநாட்டுத் தாலாட்டும் பிறபகுதிகளில் வழங்கும் தாலாட்டும்[2] முத்துக்குளித்தல் பற்றியும் பாண்டிய நாட்டுக்கும் முத்துக்கும் உள்ள உறவு பற்றியும் கூறுகின்றன.

''ரெண்டு கப்பல் கொடி பிடிக்க
ரெட்டை மச்சம் அசைஞ்சிவர
லகுவாக எடுத்த முத்தோ
எளவரசே கண்ணுறங்கு

கொற்கைத் துறைமுகத்தில்—கண்ணே நீ
கொண்டுவந்த கெட்டிமுத்தோ?
குலசேகரப் பட்டினத்தில்—கண்ணே நீ
குறிச்சி எடுத்த முத்தோ?

தூத்துக்குடித் துறைமுகத்தில்—கண்ணே நீ
துணிஞ்சி எடுத்த முத்தோ?
வங்காளக் கடலிலே—கண்ணே நீ
வாரிவந்த நல்லமுத்தோ?

1. சோமலெ. செட்டிநாடும் தமிழும், பாரிநிலையம், சென்னை, இ. ப. 1960, பக. 201, 212-213.
2. மு. வை. அரவிந்தன், தமிழக நாட்டுப்பாடல்கள், லட்சுமி பதிப்பகம், சென்னை, மு.ப. 1977, ப. 30.

தென்மதுரை வீதியிலே-கண்ணே நீ
தெரிந்தெடுத்த நல்ல முத்தோ?
வீதிப்பெருவெளியில்—கண்ணே நீ
வித்துவந்த வங்கமுத்தோ?
ரோமாபுரித் தேசத்திலே—கண்ணே நீ
ரோந்துவந்த பாண்டிமுத்தோ?''[1]

எனும் தூத்துக்குடிக் கடற்கரைப் பரதவத் தாய்மார் பாடும் தாலாட்டுப்பாடல் கண்ணிகள். மேற்குறித்த வரலாற்றுச் செய்திகளைத் தெளிவாகவும் வெளிப்படையாகவும் புலப்படுத்துதல் காணத்தக்கது.

### பாண்டியர் இலச்சினை

இருகயல் மீன்கள் பாண்டியர் இலச்சினை என்பது பாண்டியர் கல்வெட்டுகள் மூலம் தெரிந்த செய்தியாகும். 'ரெட்டை மச்சக் கொடி'யுடைய கப்பல் அசைந்து வர அதில் அரசு அதிகாரிகள் இருந்து மேற்பார்வையிட, பரதவ முத்துக்குளித் தொழிலாளர் முத்துக் குளித்த செய்தி இப்பாடல் முதல் கண்ணியால் துலக்கமாகிறது.

### கடல்கோள் குறித்த இயற்கை வரலாறு

கொற்கை, குலசேகரப்பட்டினம், தூத்துக்குடி எனும் ஊர்ப் பெயர் வரிசை சொல்லாமல் சொல்லு'ம் உண்மையும் கவனிக்கத் தக்கது. கொற்கைத் துறைமுகம் கிறிஸ்து சகாப்தத்தையொட்டி அழிந்த பின்னர்—குலசேகர பாண்டியனின் நினைவாக உருவான குலசேகர பட்டினமே தென்கோடி பாண்டிய நாட்டின் முக்கியத் துறைமுகமாக விளங்கிற்று. குலசேகரப் பட்டினம் ஒரு காலத்தில் துறைமுகமாக இருந்திருக்க வேண்டும் எனவும் காலப்போக்கில் மண் தூர்ந்து கரையிலிருந்து ஒரு மைல் விலகிக் கடல் போயிருக்க வேண்டும் எனவும் ஆய்வாளர் கூறுவது அறியத்தக்கதாகும்.[2] பிற்காலப் பாண்டியருக்குப்பின், போர்ச்சுக்கீசியர் வருகையையொட்டித் தூத்துக்குடி மிக முக்கியக் கேந்திரமாக மாறியது. கடல்

---

1. இந்நூலாசிரியர் தூத்துக்குடி கடற்கரைப் பரதவரிடம் சேகரித்த தாலாட்டுப் பாடல் கண்ணிகள்.

2. Bishop R. Caldwell, A History of Tinnevelly, Asian Educational Services, New Delhi, 1982, p. 5.

பின்வாங்கிச் செல்லுதல் குறித்த ஆய்வுகள் இவ்விடம் கருதத் தக்கன. விண்ணில் ஏவப்பட்ட கோள்களின் மூலம் நடத்தப்பட்ட ஆய்வுகள், காலப்போக்கில் கடலானது தென் பகுதியில் பின்வாங்குதலையும் வட பகுதியில் நிலப்பகுதியை அரித்து முன்னேற்றங் கொள்ளுதலையும் காட்டும். மாமல்லபுரம் முதலாகச் சென்னைப் பட்டினம் ஈறாக உள்ள நிலப்பகுதியைக் கடல் கொஞ்சம் கொஞ்சமாக விழுங்குதலும் கொற்கை முதலான பகுதி களில் பின்வாங்கிச் செல்லுதலும் இவ்வாய்வுகள் மூலம் உறுதிப் பட்டுள்ளன.[1] மேற்காட்டிய பட்டினங்களின் பெயர் வரிசைக் கிரமம் இயற்கை வரலாற்றை உறுதிப்படுத்தும் சான்றாதாரமாக உள்ளது.

## முத்துக் குளித்தல் தொடர்பான நாட்டுப்புற நம்பிக்கையும் வரலாறும்

முத்துக் குளித்தல் தொழிலுக்குத் துணிவு தேவை. துணிவு மிகுந்தவரே முத்துக் குளித்தல் இயலும். பரதவ சமுதாயத்தினர் இத்தொழிலில் ஈடுபட்டனர்; ஈடுபட்டு வருகின்றனர். அடிமைகள் முத்துக் குளித்தனர் எனவும் குற்றவாளிகளிடம் இத்தகைய வேலைகள் பெறப்பட்டதில்லை எனவும் ஆய்வாளர் கூறுவர்.[2] பொதுவாகத் துணிவும் உடல் உரமும் உடையவரான பரதவரே முத்துக்குளி தொழிலும் சங்குகுளி தொழிலும் நடத்துதல் வழக்கம். முத்தும் சங்கும் எடுக்கக் கடலில் மூழ்கும் பரதவர் அவ் விடத்தில் அச்சமயத்தில் சுறாக்கள் முதலான விலங்குகளால் தீங்கு நேராமல் தடுக்கும் மந்திரம் அறிந்திருந்ததாகக் கூறுவர்.[3]

---

1. ஞா. விக்டர் இராசமாணிக்கம் மற்றும் வி. ஜோ. லவ்சன், **தமிழகக் கடற்கரையில் தொல் துறைமுகங்களின் இன்றைய நிலை**, தமிழ்க்கலை, தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர், மார்ச்சு, சூன், 1988, ப. 193.
2. ஐம்புலிங்கம், **முத்துக்குளியலில் ஈடுபட்டவர்கள் குற்றவாளிகள் தானா?**, தேடல் (ப.ஆ) க.ப. அறவாணன், புதுவைப் பல்கலைக் கழகத் தமிழியல் துறை வெளியீடு, புதுச்சேரி, மு. ப. 1989.
3. வி. கனகசபை பிள்ளை, ஆயிரத்தெண்ணூறு ஆண்டு களுக்கு முற்பட்ட தமிழகம். (மொ. ஆ) கா. அப்பாதுரை, கழகம், சென்னை, மு. ப. 1962, ப. 86.

இதனை ஜேம்ஸ் ஆர்னெல் வழிமொழிவதும் அறியத்தக்கது.[1] அளவிற் பெரிய மீன்கள் உண்டாக்கும் கேட்டினைத் தவிர்க்கும் பொருட்டு இத்தொழிலாளர் மந்திரத்தால் வசியம் செய்யும் பலரை அழைத்துச் செல்வர் எனவும் பார்ப்பனக் குடியைச் சேர்ந்த இரு மந்திரவாதிகள் இச்சுறா மீன்கள் மீது தாங்கள் கற்ற மந்திர வித்தையை ஏவி, அதனால் அம்மீன்களைத் தம் வயப்படுத்தி இத்தொழிலாளர்க்கு யாதொரு தீங்கும் நேரிடாதவாறு தடுத்துப் பாதுகாக்கின்றனர் எனவும் வெனிஸ் நகரப் பயணி மார்கோ போலோ (Marco Polo) கூறுவர்.[2] தி. முத்து. கண்ணப்பன்,[3] ச. முருகானந்தம்[4] ஆகியோரும் இதனை உறுதிப்படுத்து கின்றனர்.

---

1, "In one passage (LL 140-144) the paravas are described as men who dived for pearl oysters and for chank shells and knew charms to keep sharks away from that part of the sea where diving was being carried on"

— James Hornell, The Sacred Chank of India (Part II), pp. 42-43.

"The members of a certain Parava family called Kadalkatti (Tiers of the sea) accredited with powers over sharks, were appealed to and propitiated with gifts that they might exercise their powers. Mantirams were said and paid for and the divers were told that the danger was averted... The kadalkattis were also credited, as the name implies with power over the winds and currents and until the male members of the family died out a few years ago, they were employed to procure a change of weather if head winds seriously interfered with fishing operations"

— James Hornell, The Sacred Chank of India (Part I), Govt. Press, Madras, 1914, p. 18.

2. வி. எஸ். வி. இராகவன், மார்கோ போலோ, லோட்டஸ் பப்ளிகேஷன், சென்னை, 1964, ப. 17.

3. தி. முத்து. கண்ணப்பன், சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம், அதிபத்தர் பதிப்பகம், சென்னை, மு. ப. 1978, ப. 208.

4. ச. முருகானந்தம், கடற்கரைப் பரதவர் கலைச் சொல்லகராதி, தேன்மழைப் பதிப்பகம், சென்னை, மு.ப. 1990, ப. 56.

ச. முருகானந்தம், ஆராய்ச்சித் தொகுதி, தேன்மழைப் பதிப்பகம், சென்னை, மு.ப. 1990, ப. 205.

சாமி வெனான்சியுஸ் இதனை விளக்கமாகக் கூறுவர். "முத்துச் சிலாபத்தின்போது பிராமணர்களுக்கு, குறிப்பாகத் திருச்செந்தூர் ஒதுவார்க்கு நல்ல வருமானம் இருந்தது. கடலுக்குள் மூழ்கி முத்துக்குளிப்பவர்களைக் கொடிய சுறாமீன்கள் நெருங்காத வண்ணம் மந்திரம் ஓதிக் கட்டுப்படுத்த முடியும் எனப் பிராமணர்கள் பறைசாற்றி வந்தனர்.... ஆனால் முத்துக்குளிப்பின்போது பிராமணர்களின் மந்திர உதவியையும் நாடினர். மந்திரம் ஓதும் பிராமணர்கள் முத்துச் சிலாபத்தில் வரும் மொத்த முத்துச் சிப்பியில் இருபதில் ஒரு பாகம் வருமானமாகப் பெற்று வந்தனர்".[1] எனும் அவர் செய்தியை ரா. பி. சேதுப்பிள்ளையும் உறுதிப் படுத்துவார். "கடலுள் மூழ்கி முத்தெடுக்கும் பரதவரைக் கொடிய மீன்கள் கடித்துவிடாமல் மந்திர வலிமையால் பாதுகாக்கும் மறையவர்க்கு இருபதில் ஒரு பங்கு கொடுக்கப்படுகிறது"[2] என்பர். இவ்விருவர் கூற்றுகளும் மார்க்கோ போலோ கூறியமையை அடியொற்றியன. இதனை ஜேம்ஸ் ஆர்னெலும் எடுத்துக் காட்டுவர்.[3] இவ்வரலாற்றை, தொழில் பழக்க வழக்கம் சார்ந்த நம்பிக்கையைப் பரதவர் பாடும்

"பாப்பானுக்கு நால பகளமுத்து ஏலவல
பத்தில் அரை நால பங்கு தாடா ஏலவல"

எனும் அம்பாப்பாடலடிகள் காட்டுகின்றன.

---

1. சுவாமி வெனான்சியுஸ், முத்துக்குளித் துறையின் விசுவாசம், தூத்துக்குடி மறைமாவட்டக் கையேடு, பொன்விழா (1923-1973) மலர், 1983, ப. 22.
2. ரா. பி. சேதுப்பிள்ளை, "காயல் மாநகர்", கல்கி, சென்னை, மார்ச்சு 20, 1955, மறுஅச்சு, பனிமய மலர் (1555-1955) தூத்துக்குடி, 1955, ப. 17.
3. "According to Marco Polo "The divers of kayal had to pay those men who charm the great fishes to prevent them from injuring the divers while engaged in seeking pearls under water, one-twentieth part of all that they take. These fish-charmers are termed Abraiaman and their charm holds good for that day only for at night they dessolve the charm so that the fishes can work mischief their will. These Abraiaman know also how to charm beasts and birds and every livingthings" (The Book of Ser Marco Polo. Yale, London, 1871).
   — James Hornell, The Sacred Chank of India (Part I), pp. 19-20.

### குதிரை இறக்குமதி

வெளி நாடுகளிலிருந்து தமிழகத்திற்கு இறக்குமதியானவற்றில் முக்கியமானவை குதிரைகள், மதுவகை, கருப்பூரம், மணநீர், குங்குமம் ஆகியன என்பர்.[1] இவற்றுள் ஒன்றான குதிரைகள் சிந்து பாரசீகம், அரபு நாடுகளிலிருந்து அக்காலத்தில் கொண்டு வரப்பட்டன. இவை கடல்வழியாகக் கப்பல்களில் கொண்டு வரப் பட்டன.[2] அரசனது படைகளில் குதிரைப்படை ஒரு பிரிவாக இருந்தது.[3] தேர்ப்படையில் தேர்களை இழுக்கவும் குதிரைகள் பயன்பட்டன.[4] குதிரை தமிழ்நாட்டு விலங்கன்று. சோனகர் நாட்டிலிருந்து இது இறக்குமதி செய்யப்பட்டது. பாண்டியப் பேரரசின் பிரதான அங்கமான குதிரைப் படைக்குத் தேவையான குதிரைகள் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கில் அரபு நாடுகளிலிருந்து பெறப்பட்டன. பாண்டிய நாட்டின் மூன்று துறைமுகங்களில் தேவி பட்டணமும் ஒன்று. இங்கு அவை வந்து இறங்கின என உலகப்பயணி வஸ்ஸாப் கூறுவர்.[5] குதிரை வாணிபத்தில் இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த தொண்டியும் முக்கியப் பங்கு வகித்தது. இவ்வூரை அரபுநாட்டுப் பயணி திண்டா (Dynda) எனக் குறித்துள்ளார். இவ்வூரில் "தொண்டி மட்டக் குதிரை போல்" என்ற வழக்கு வழங்கி வருகிறது. இது இவ்வணிகப் பழமையை நினைவு கூர்வதாக உள்ளது.[6] டி.வி. சதாசிவ பண்டாரத்தாரும் குதிரை வாணிபத்தில் தொண்டி சிறந்து விளங்கியதாகக் குறிப்பர்.[7] திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த கொற்கையில் ஆண்டுதோறும் பதினாயிரம் குதிரைகள் வந்திறங்கின என வஸ்ஸாப் குறிப்பர். பாண்டியர் குதிரைகள்

---

1. சி. பாலசுப்பிரமணியன், இலக்கிய அணிகள், பாரி நிலையம், (வி. உ), சென்னை, 1977, ப. 44.
2. மயிலை சீனி. வேங்கடசாமி, பழங்காலத் தமிழர் வாணிகம், நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மு.ப. 1974, ப. 25.
3. ந. சி. கந்தையா பிள்ளை, திராவிட இந்தியா, ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1949, ப. 55.
4. மயிலை சீனி. வேங்கடசாமி, மு. நூ., பக். 25-26.
5. எஸ். எம். கமால் மற்றும் நா. முகமது செரீபு, இராமநாதபுரம் மாவட்டம் வரலாற்றுக் குறிப்புகள், லெனின் சமூக வரலாற்று ஆராய்ச்சி நிறுவனம், பரமக்குடி, மு.ப., 1984, பக். 71-72, 119, 198.
6. மேலது, ப. 69.
7. டி.வி. சதாசிவப் பண்டாரத்தார், மு. நூ., ப. 182.

வாங்குவதில் பெரும் பொருளைச் செலவிட்டனர் என மார்கோ போலோ குறித்துள்ளமையைப் பண்டாரத்தார் எடுத்துக் காட்டுவர்.[1] இப்பயணியின் காலக் கட்டத்தில் குதிரை இறக்குமதியில் காயலே தலைசிறந்த துறைமுக மாநகரமாக இருந்தது.[2] இவ்வாணிகத்தில் ஈடுபட்டிருந்த சோனகர்கள் பாண்டிய மன்னர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர்.[3] சோனகரைத் தமிழர் இராவுத்தர், மரக்காயர் எனக் குறிப்பர். குதிரை வணிகத்தில் ஈடுபட்ட சோனகர் இராவுத்தர் எனவும் மரக்கலத் தலைவர் மரக்கலராயர் எனவும் அழைக்கப்பட்டனர். மரக்கலராயர் எனும் சொல் பின்னாளில் மரக்காயர் எனத் திரிந்தது.[4]

**குதிரை பெருமளவில் இறக்குமதியான காரணம்**

தமிழ் நாட்டார்-குறிப்பாகப் பாண்டியர் அரபு நாடுகளிலிருந்து பெருமளவில் குதிரைகளை இறக்குமதி செய்ததற்குக் காரணம் உண்டு. "பாண்டிய மன்னருக்கு அராபியர் நிறைய குதிரைகள் விற்றனர். ஆனால் குதிரைகள் அடிக்கடி குளம்பு பழுதுற்று நொண்டியாகி இறந்து போயின. காரணம் குதிரைகளுக்குக் குளம்பில் இலாடம் அடிக்க வேண்டும் என்ற செய்தி பாண்டிய மன்னர்களுக்குத் தெரியாது, இலாடம் அடித்தால் குதிரைகள் நெடுங்காலம் வாழும். அதனால் புதிய குதிரைகளை வாங்க மாட்டார்கள் என்று எண்ணிய அராபிய இசுலாமியர் இலாடம் அடிக்கும் தொழில் நுணுக்கத்தை நெடுங்காலம் வரை சொல்லிக் கொடுக்காமலே இருந்தனராம்"[5] என்பர் ஆய்வாளர்.

ஆண்டுதோறும் பதினாயிரம் குதிரைகள் இறக்குமதியானமைக்குப் பலகாரணங்கள்உண்டுஎன்பர் அ.இ. பரந்தாமனார். இலாடம் அடிக்கும் தொழிலாளர் நம்நாட்டுக்கு வராமல் கட்டுப்பாடாகப் பார்த்துக் கொண்ட வணிகத் தந்திரத்தோடு கூட வேறு காரணங்களும் உண்டு என்பர். குதிரைகளைப் பழக்கத்தெரியாமை; பழக்காமை; ஏறுபடி, சேணம் ஆகியவை இல்லாமை, பேய்கள்

1. மேலது. ப. 69
2. அ. கி. பரந்தாமனார், மதுரை நாயக்கர் வரலாறு, அல்லி நிலையம், சென்னை, இ.ப., 1966; ப. 23.
3. அ. மா. சாமி, தமிழ் இதழ்கள் தோற்றம்—வளர்ச்சி, நவமணி பதிப்பகம், சென்னை, மு.ப. 1987, ப. 172.
4. மேலது.
5. க. ப. அறவாணன், தமிழர்மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள், தமிழ்க்கோட்டம், சென்னை, மு. ப; 1987, ப. 256.

போலச் சவாரி செய்தமையால் குதிரைகள் காலிடறி விழுந்து பயனற்றுப் போனமை ஆகியனவும் காரணங்களாகும் என்பர் இவர்.[1] குதிரைகளைப் பழக்குவதிலும் நன்றாகப் பயன்படுத்து வதிலும் வல்ல அரேபியர், கிரேக்கர் முதலிய அயல்நாட்டினரும் நமது படையில் பணி புரிந்தனர் என்பர்.[2] 'தமிழ்நாட்டில் குதிரைகள் வந்து இறங்கும்போது குதிரைச் சவாரியில் வல்ல அரேபிய வீரர்களும் வந்து இறங்கினார்கள். அவர்கள் குதிரை களை விற்றபின் குதிரைகளை எப்படியெல்லாம் வைத்துப் பாது காப்பது, சவாரி செய்வது எப்படி, எந்தக் குதிரையிடம் எப்படிப் பழக வேண்டும் என்பன போன்ற விபரங்களையெல்லாம் கற்றுக் கொடுத்து விட்டுத் தங்கள் நாட்டுக்குத் திரும்புவார்கள்''[3] என்பர். மேற்கூறிய செய்திக்கு மாறான இச்செய்தியின் உண்மை தகுந்த சான்றாதாரங்களால் நிறுவப்பட வேண்டியதாகும்.

### குதிரை, குதிரை இறக்குமதி பற்றிய இலக்கியக் குறிப்புகள்

சங்க காலத்திலேயே குதிரைகள் பயன் கொள்ளப்பட்டன. காற்றுப்போல் விரைந்து செல்லும் செலவினை உடையது குதிரை என மதுரை அளக்கர் ஞாழார் மகனார் அம்மள்ளனாரும் (அகம். 314) மதுரைக்கூத்தனாரும் (அகம். 334) குறித்துள்ளனர். நான்கு குதிரைகள் பூட்டப்பெற்ற தேர் குறித்து மதுரைக் கூத்தனாரும் (அகம். 334) மதுரை மருதனிள நாகனாரும் (அகம். 104) குறிப்பர். தேரில் பூட்டப் பெற்று குதிரை பயன் கொள்ளப்பட்டமையை அரிசில் கிழார் (புறம். 146) இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் (சிறு. 256-259) மருங்கூர் கிழார் பெருங்கண்ணனார் (அகம். 80) பொதும்பிற்புல்லாளங்கண்ணியார் (அகம். 154) இடைக்காடனார் (அகம். 194) மதுரைமள்ளனார் (அகம். 244) குறுங்குடிமருதனார் (அகம். 4) ஆகியோர் புலப்படுத்தி யுள்ளனர். கடல்மல்லையில் குதிரைகள் இறக்குமதி செய்யப் பெற்றமையைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் (பெரும். 320) காட்டுவர். இவரே 'நீரின் வந்த நிமிர்பரிப்புரவி' எனக் கடல்வழி வந்த குதிரை இறக்குமதியைக் குறிப்பர் (பட் : 185). பதிற்றுப் பத்தும் புறநானூறும் காட்டும் குதிரை பற்றிய குறிப்புகள் அளவில்

1. அ. கி. பரந்தாமனார், மு. நூ., பக். 23-24.
2. ந. சி கந்தையாபிள்ளை, மு. நூ., ப. 54.
3. கு. அழகிரிசாமி, இலக்கியச் சுவை, தேன்மழைப் பதிப்பகம், சென்னை, மு. ப; 1987, ப. 97.

மிகுந்தன. அரிமர்த்தன பாண்டியனிடம் அமைச்சராய்க் கடமையாற்றிய மாணிக்கவாசகர் அரசனது படைக்காகக் குதிரை வாங்கச் சென்றமையும் இது தொடர்பான விளைவுகளும் நரி பரியாக்கிய படலம், பிட்டுக்குமண் சுமந்த படலம் முதலாகிய திருவிளையாடற் புராணத்தால் அறிய வருகிறோம். பரணி முதலான சிற்றிலக்கியங்கள் குதிரைப்படை பற்றி நிறையவே பேசுகின்றன. நச்சினார்க்கினியர் பெரும்பாணாற்றுப்படைக்கு உரையெழுதியவிடத்து இப்புரவிகள் குறித்து 'மேற்றிசையிலிருந்து நீரின் வந்தன' என எழுதி அவை எங்கிருந்து வந்தன எனக் காட்டுவார்.[1]

### நாட்டுப்புறப்பாடலில் இவ்வரலாறு

குதிரை இறக்குமதி பற்றி வெளிநாட்டார் குறிப்புகளும் மேலோர் இலக்கியங்களும் கூறுவன போன்றே நாட்டுப்புற மக்களின் பாடல்களும் குறிப்பிடுகின்றன. சான்றாக

ஆறோ பெருகிவர
அலைகடலும் பொங்கி வர
அலைகடலின் கரையினிலே
அராபிய கப்பல்வரும் - அதில்
அழகான குதுர வரும் - அது
ஆயிரம் வெலை மதிச்சி
ஆணிமுத்து வாங்கிப் போகும்.[2]

எனும் பரதவர் பாடல் மேற்காட்டிய வரலாற்றை வெளிப்படையாகக் கூறுகிறது. அராபியர் தம் நாட்டிலிருந்து குதிரைகளைக் கொண்டு வந்து பாண்டியநாட்டுத் துறைமுகங்களில் இறக்கிவிட்டு முத்துகளைப் பண்ட மாற்று முறையில் பெற்றுச் சென்றனர் எனும் அரிய குறிப்பு இப்பாடலால் பெறப்படுகிறது.

### 2. கூன்பாண்டியன், மங்கையர்க்கரசி, திருநாவுக்கரசர் வரலாறு

கூன்பாண்டியன் என அழைக்கப்பட்ட மாறவர்மன் அரிகேசரி கி. பி. ஏழாம் நூற்றாண்டில் மதுரையைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டவன். இவன் சமணசமயத்தின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்தமையும் இவன் மனைவி மங்கையர்க்கரசி, அமைச்சர்

---

1. பத்துப்பாட்டு மூலமும் உரையும்-பெரும்பாணாற்றுப் படை; கழகம், சென்னை. 1966. ப. 91.
2. இந்நூலாசிரியர் பரதவரிடமிருந்து சேகரித்த நாட்டுப்புறப் பாடலின் ஒரு பகுதி.

குலச்சிறையார் கருத்துப்படித் திருஞானசம்பந்தரை மதுரைக்கு வரவழைத்து சமணரைத் தோற்கடித்து மன்னனை அச்சமயத்தி லிருந்து மீட்டு சைவ சமயத்தினனாக மாற்றியமையும் வரலாறு கூறும் செய்திகளாகும். வரலாறும் ஏட்டிலக்கியங்களும் இவ்வரலாற்று நிகழ்ச்சிகளைக் கூறுகின்றன.

**வரலாறு**

அரசியல் வரலாறும் சமய வரலாறும் எந்நாட்டிலும் பின்னிப் பிணைந்திருப்பது போலவே தமிழ்நாட்டிலும் ஒன்றையொன்று சார்ந்திருக்கின்றன. கிறிஸ்து பிறப்பதற்கு முன்னர் வடஇந்தியா வில் தோன்றிச் செழித்த சமண, புத்த சமயங்கள் தென்னிந்தி யாவிலும் நுழைந்தன. கிறிஸ்து பிறப்பிற்குப் பின்னர் தென்னிந்தி யாவில் பலமாகக் கால்கொண்ட இவை கி. பி. ஆறாம்நூற்றாண்டு வரை உச்சத்தில் இருந்தன. இவற்றின் செல்வாக்கை அறநெறிக் கால நூல்களான பதினெண் கீழ்க்கணக்கு நூல்களால் அறியலாம். களப்பிரர் அழிவு இச்சமயங்களின் வீழ்ச்சிக்கு வித்தாயிற்று. மதுரை முதலான இடங்களில் காணலாகும் சமண முனிவர் வாழ்விடங்கள் அவர்தம் ஆதிக்கப் பகுதிகளைக் காட்டுகின்றன. பக்தி நெறிக் காலத்தில் மீண்டும் வைதீக மதங்களான சைவ, வைணவ மதங்கள் புத்துயிர் பெற்று மேலெழுந்து சமண, புத்த சமயங்களை வேரறுத்தன. மேற்காட்டிய பொதுவான வரலாற்றில் ஒரு சிறப்பு நிகழ்ச்சியாகக் கூன்பாண்டியன் வரலாறு அமைந்துள்ளது.

இவ்வரலாறு குறித்து டி. வி. சதாசிவ பண்டாரத்தார், "செழியன் சேந்தன் மகன் மாறவர்மன் அரிகேசரி கி. பி. 640 இல் பட்டம் எய்தினான். இவனைச் சுந்தரபாண்டியன் எனவும் கூன்பாண்டியன் எனவும் திருவிளையாடற்புராணம் கூறும். இவன் முதலில் சமணப்பற்றுடையவனாயிருந்து பின்னர் திருஞானசம்பந் தரால் சைவனானவன். மங்கையர்க்கரசியாரும் அமைச்சர் குலச் சிறையாரும் சம்பந்தரை அழைத்து வந்து அனல் வாதம், புனல் வாதம் நிகழ்த்துவித்து சமணரை அடக்கினர்"[1] என்பர்.

இவ்வரலாற்று நிகழ்ச்சியை பி. எஸ். சோமசுந்தரம் "திருமறைக்காட்டில் திருஞானசம்பந்தர் பதிகம் பாடிக் கோயில் கதவை மூடியதைக் கண்ட பாண்டிய அரசன் மனைவி மங்கையர்க்

1. டி. வி. சதாசிவப் பண்டாரத்தார், பாண்டியர் வரலாறு, கழகம், சென்னை, ஆ. ப. 1968, பக். 38-39

கரசி, முதலமைச்சர் குலச்சிறையார் ஆகியோரின் பிரதிநிதிகள் சம்பந்தரை மதுரைக்கு வந்து சமணச் செல்வாக்குக்கு உட்பட்ட மன்னரை மீட்கும்படியும் பாண்டிய நாட்டிலிருந்து சமண ஆதிக்கத்தை ஒழிக்கும்படியும் வேண்டினர். அவ்வாறே சம்பந்தர் வர, மன்னர்க்கு உண்டான கடுஞ்சுரத்தை நீக்கி, அனல், புனல் வாதங்கள் நிகழ்த்தி, சமண ஆதிக்கத்தை ஒழித்தார்[1]" எனக் கூறுவர்.

### இலக்கியச் சான்றுகள்

திருஞான சம்பந்தர் தேவாரப்பாசுரங்களும் பதிகங்களும் இவ்வரலாற்று நிகழ்ச்சியை உறுதிப்படுத்தும் முதன்மை ஆதாரங்களாக அமைகின்றன. 'மந்திரமாவது நீறு' எனத் தொடங்கும் திருநீற்றுப் பதிகத்தைப் பாடி பாண்டியனது வெப்பு நோயைத் தீர்த்தார். 'வாழ்க அந்தணர்' எனும் திருப்பாசுரம் பாடி அதை ஓர் ஏட்டில் எழுதி வைகையில் விட அது புனலை எதிர்த்துச் சென்றது. 'வன்னியுமத்தமும்' எனும் பாசுரம் எழுதப் பெற்ற ஏடு திருவேடகத்தில் கரையொதுங்கிற்று. 'தளரிளவளரொளி' எனும் திருப்பதிகத்தைப்பாடி அப்பதிகம் எழுதப் பெற்ற பச்சை ஏட்டைத் தீயிலிட்டபோது, அது அனலில் வேகாது பச்சையாகவே இருந்தது. சைவ சமயத்தவனாக மாறிய மாறவர்மன் அரிகேசரியின் சிவபக்தியை இறையனார் அகப்பொருள் உரை புகழும்.[2] சேக்கிழாரின் திருத்தொண்டர் புராணம் எனும் பெரிய புராணம் மாறவர்மன் அரிகேசரி, மங்கையர்க்கரசியார், குலச்சிறையார் ஆகியோரை அறுபத்து மூன்று நாயன்மாருள் அடக்குகிறது. முன்னர் காட்டியபடி இவர்தம் வரலாறு பரஞ்சோதி முனிவரின் திருவிளையாடற்புராணத்தாலும் தெரிய வருகிறது.

சிற்றிலக்கியக் காலத்தே எழுந்த திரிகூடராசப்பக் கவிராயரின் திருக்குற்றாலக் குறவஞ்சி, மேற்குறித்த வரலாற்றை ஓர் உவமையால் காட்டுகிறது. சிங்கன் "ஆயிரம் கொக்குக்குக் கண்ணியை வைத்து அப்பால்போய் மறைந்திருந்தபோது அதில் வந்து அகப்பட்டுக் கொண்ட காகங்கள், தப்பிக்கும் பொருட்டுச் செத்தாற்

1. P. S. Somasundaram, Tirujnana Sambandhar, - Philosophy and Religion, Vani Pathippakam, Madras, Ied 1986, pp 26-27.
2. இறையனார் அகப்பொருள் உரை, மேற்கோள் பாடல்கள், 256, 279.

போல நயவஞ்சகமாக நடிக்க, இதை நம்பிய சிங்கன் ஒவ்வொன்றாக எடுத்துப்போட, ஆயிரமும் விடுவிக்கப்பட்ட பின்னர் அவை ஒருசேரத் திடுமென்று பறந்துதப்பின. இவை பறந்தமைக்கு உதாரணம் காட்டும் சிங்கன் மேற்காட்டிய வரலாற்றைப் பயன் கொள்கிறான். மங்கையர்க்கரசியின் பொருட்டு 'நமசிவாய' எனும் பஞ்சாட்சர மந்திரத்தை உச்சரித்த சுந்தரபாண்டியனின் நோய் பறந்ததுபோலப் பறவைகள் பறந்தன என்பது சிங்கன் கூற்று (105). "சேயிழை தன் பொருட்டாலே பஞ்சாக்கரம் செபித்த மன்னவன் பாவம் போனாற்போலப் போயின பறவைகள்" என்று சிங்கன் கூறுவதாகக் கவிராயர் கூறுவர். கி.பி. ஏழாம் நூற்றாண்டு வரலாற்று நிகழ்ச்சியைப் பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்த முத்துவிசயரங்க சொக்கநாத நாயக்கர் காலத்துக் கவிராயர் சுட்டிக்காட்டுவார். திருஞான சம்பந்தர் செய்த அற்புதங்கள் ஆயிரம் ஆண்டுகள் கடந்தும் மக்கள் நெஞ்சில் நீங்காது நிலைத்து நின்றமையை இது காட்டும். பாண்டிய அரசனது வாழ்வில் நிகழ்ந்த அற்புதம் அதே நாட்டைச் சேர்ந்த ஊர்கள் தோறும் காலங்கடந்தும் பசுமையாய் நினைவில் நின்றமை வியப்பன்று.

### நாட்டுப்புறப் பாடல்களில் இவ்வரலாறு

மேற்குறித்த வரலாறு, வடதமிழ் நாட்டுக் கடற்கரைப் பரதவர் பாடும் நாட்டுப்புறப் பாடலாகிய அம்பாப் பாடலிலும் பதிவாகியுள்ளது.

'தேசங்களைக் கண்ட பிள்ளை ஏலேலோ
தெளிவடைந்த ஞானப்பிள்ளை ஏலேலோ
தெளிவடைந்த ஞானப்பிள்ளை ஏலேலோ
தேவாரம் பாடுறானே ஏலேலோ
தேவாரம் பாடும்போது ஏலேலோ
ஓடுறானே சமணப்பையன் ஏலேலோ
மங்கையரே மாதாவே ஏலேலோ
மங்கையர்க் கரசியாரே ஏலேலோ
மதுரை மடமகளே ஏலேலோ
மதுரையிலே மடங்களா ஏலேலோ
மணங்கமழும் தென் மதுரை ஏலேலோ
தென்மதுரை பாண்டியன்டா ஏலேலோ
தெருவோடும் பிள்ளை பாராய் ஏலேலோ

ஆறோடும் மீனோடம்மா ஏலேலோ
அந்த ஓலை ஓடுதம்மா ஏலேலோ
தீயில் எரியாமலே ஏலேலோ
திருவோலை நிக்குதம்மா ஏலேலோ''[1]

என்பது அப்பாடல். ஞானப்பால் உண்ட ஞானப்பிள்ளை திருஞான சம்பந்தர் தேவாரம் பாட சமணர் ஓடினமை, இவர்தம் செயலுக்குத் தூண்டுதலாய் மங்கையர்க்கரசியார் இருந்தமை, புனல்வாதத்தின்போது ஞானசம்பந்தர் பாசுரம் எழுதப்பட்ட ஏடு' ஆற்றை எதிர்த்து ஓடியமை, அனல் வாதத்தின்போது இச்சமயக் குரவரின் திருப்பாசுர ஏடு தீயில் எரியாமல் இருந்தமை ஆகியன இந்நாட்டுப்புறப் பாடலில் தெளிவாகவும் வெளிப்படையாகவும் காணக்கூடியதாய் உள்ளன. முற்காட்டிய இவ்வரலாற்று நிகழ்ச்சிக்கு இந்நாட்டுப்புறப் பாடல் உறுதியான சான்றாக விளங்குகிறது.

### 3. பரங்கிப்பேட்டைப் போர்

இந்திய நாட்டிற்குள் கிரேக்கர், ரோமானியர் ஆகிய ஈரோப்பியர் கிறிஸ்து பிறப்பதற்கு முன்னரே வணிகத்தின் பொருட்டு வந்து சேர்ந்தனர். சங்க இலக்கியம் இவரை 'யவனர்' என அழைக்கும்; துருக்கி முதலான அரபு நாட்டவரும் வணிகத்தின் பொருட்டு வந்தனர். இவர் சோனகர் என அழைக்கப்பட்டனர். யவனரும் சோனகரும் தனிப்பட்ட முறையில் வந்து சென்றனரே யொழிய பிற்காலத்திய வணிகக் குழுமங்களைப்போல வந்து செல்லவில்லை. கி.பி. பதினாறாம் நூற்றாண்டில் போர்ச்சுகீசியர் தகுந்த கடற்படை பலத்துடன் வணிகம் முதலாகிய தொலை நோக்குத் திட்டங்களோடு அடியெடுத்து வைத்தனர். மகமதியர் தரைவழியாகவும் கடல்வழியாகவும் புகுந்தனர்; பின்னர் டச்சுக்காரரும் ஆங்கிலேயரும், கடைசியாகப் பிரஞ்சுக்காரரும் வணிக நிலையங்கள் அமைக்கத் தலைப்பட்டனர். கி.பி. 1600இல் கிழக்கு இந்தியக் கம்பெனி (East India Company) இந்தியாவுடன் வர்த்தகம் செய்ய இங்கிலாந்து அரசின் ஒப்புதல் பெற்று வணிகத்தைத் தொடங்கிற்று.[2] பிரஞ்சுக்காரரின் 'இந்திய வாணிகக் கழகம்' கி.பி. 1664இல் அமைக்கப்பெற்றது. வணிக

1. கு. மோகனராசு, அம்பாப்பாட்டு, ஸ்டார் பிரசுரம், சென்னை, ப. 1988, பக். 136-137.
2. ச. முருகானந்தம், ஆராய்ச்சித்தொகுதி, தேன்மழைப் பதிப்பகம், சென்னை, 1990, ப. 162.

நலன்களைப் பெருக்கிக் கொள்வதற்காக உள்நாட்டு அரசியல் நடவடிக்கைகளிலும் இவற்றின் இன்றியமையாத அங்கமாகிய போர்களிலும் இவை ஈடுபடுவது தவிர்க்கவியலாததாயிற்று. இவ்விரு நாடுகளும் தமிழ் மண்ணில் போரில் ஈடுபட்டன.

### போருக்கான பின்புலம்

கி.பி. 1664இல் அமைக்கப்பெற்ற பிரஞ்சுக்காரரின் 'இந்திய வாணிகக் கழகம்' விரைவில் வளர்ச்சி பெற்றது. தென்னிந்தியாவில் சில வாணிகப்பேட்டைகள் உருவாயின. கி.பி. 1673இல் தோன்றிய புதுச்சேரிப்பேட்டை விரைவில் முன்னேறியது. பிரஞ்சுக்காரர்கள் கி.பி. 1674இல் இப்பேட்டையின் பாது காப்பிற்காக ஒரு கோட்டை கட்டினர். அது விரைவில் தென்னிந்தியப் பிரஞ்சு நிலையங்களின் தலைநகராக அமைந்தது. கி.பி. 1720 முதல் 1735 வரை பிரஞ்சுத் தலைவராய் இருந்த லெனேயிரும் கி.பி. 1735 முதல் 1742 வரை தலைவராய் இருந்த மோவும் தம் தாய் நாட்டு அரசின் உதவி இல்லாதிருந்தும் தம் பெருமுயற்சியால் பிரஞ்சு வணிகத்தை வலுப்படுத்தினர். மாஹியில் கி.பி. 1724இல் ஒரு கோட்டை கட்டப்பட்டது. கி.பி. 1739இல் காரைக்கால் கைப்பற்றப்பட்டது. கி.பி. 1742இல் டியூப்லிக்ஸ் புதுச்சேரித் தலைவராய் வந்தவுடனே இந்தியாவில் ஈரோப்பியர்களது நிலை மாறுதல் அடைந்தது. ஏனெனில் இந்திய நாட்டுப் பகுதிகளைக் கைப்பற்றிப் பிரஞ்சு ஆதிக்கத்தை நிலைநாட்ட வேண்டுமென்ற ஆசை டியூப்லிக்ஸைத் தூண்டிற்று. இந்நிலையில் முகலாயப் பேரரசின் தளர்ச்சியும் சிவாஜியின் வெற்றியும் ஆங்கிலேயருக்குப் பெருந்திகிலை உண்டுபண்ணின. ஆகவே 18ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆங்கில, பிரஞ்சு வாணிகக் குழுக்கள் போருக்கு ஆயத்தம் ஆயின. விரைவில் இவ்விருவர்க்கும் தமிழ் நாட்டில் போர் மூண்டது.[1]

### போரும் போரின் விளைவும்

கி.பி. 1744 முதல் 1763 வரையில் நிகழ்ந்த இப்போர்தான் இந்திய அரங்கத்தில் தோன்றிய ஆங்கில, பிரஞ்சுப் போட்டிக்கு முடிவு கண்டது. ஆங்கிலேயர் ஆர்மகோண், மசூலிப்பட்டினம், விசாகப்பட்டினம், கடலூர், பரங்கிப்பேட்டை ஆகிய கீழைக்கரை நகரங்களிலும் தலைச்சேரி, அஞ்சுதெங்கு ஆகிய மேலைக்கரை

---

1. கே.கே. பிள்ளை, தென்னிந்திய வரலாறு (தொகுதி 2), பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, மு.ப.1960, பக்.113-114.

நகரங்களிலும் வணிகப்பேட்டைகள் நிறுவி தழைக்கச் செய்திருந் தனர். தமிழ் நாட்டுக் கீழைக்கரை நகரங்களாகிய கடலூர், பரங்கிப்பேட்டை ஆகிய இடங்களில் நடந்த போரினால் பரங்கிப்பேட்டை அழிந்து பறைச்சேரி போலப் பொலிவிழந்து நின்றது. ஆயினும் இறுதி வெற்றியை ஈரோப்பிய நாடுகளில் நிகழ்ந்த வரலாற்று நிகழ்ச்சிகளும் அரசியல் தந்திர உறவுகளுமே தீர்மானித்தன. பிரான்ஸ் பிரிட்டிஷாருக்கு சிலவற்றை விட்டுக் கொடுக்க வேண்டிய சூழ்நிலை உருவானமையால், இந்திய மண்ணில் இறுதி வெற்றி ஆங்கிலேயருக்குக் கிட்டிற்று.

### நாட்டுப்புறப் பாடலில் இவ்வரலாறு

பரங்கிப்பேட்டையில் நிகழ்ந்த சண்டையும் இப்போரால் அது அழிந்து, பொலிவிழந்து நின்றதும் பறைச்சேரி போல அழிபாடடைந்ததும் நாட்டுப்புறப் பாடலில் பதிவாயின.

> "பாழான பரங்கிப்பேட்டை
> பறச்சேரி போல் தோணுதங்கே"[1]

எனும் பரதவர் அம்பாப் பாடலடிகள் மேற்காட்டிய வரலாற்று நிகழ்ச்சிக்கு வலுவான சான்றாதாரமாக விளங்குதல் காணலாம்.

### 4. ஆற்காட்டுப் போர்

ஆங்கில, பிரஞ்சுப் படைகள் மூன்றாவது கர்நாடகப்போரில் ஈடுபட்ட பின்னர்தான் ஒரு முடிவுக்கு வந்தன. இவை தத்தம் கூட்டணிகளோடு சேர்ந்து போரிட்டன. பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் சிவாஜி வேலூரை முற்றுகையிட்டான். பதினெட்டாம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் கிளைவ் இவ்வூரை முற்றுகையிட்டான். ஆற்காடு நவாபுகளின் போர்க்கேந்திரமாக விளங்கிற்று. கிழக்கிந்தியக் கம்பெனியார் ஆற்காட்டிலும் வேலூரிலும் போரில் பங்குகொண்டனர்.[2] ஆற்காட்டுச் சண்டை வடதமிழ்நாட்டுப் பரதவர் அம்பாப்பாடல்களிலும் சிறுவர் விளையாட்டுப் பாடல்களிலும் பதிவாகியுள்ளது.

### போரின் பின்புலம்

முதல் கர்நாடகப்போர் (கி.பி. 1746-1748) ஆங்கில, பிரஞ்சு பழைமைக்கு முடிவுகட்டவில்லை. இவ்விரு வணிகக் குழுக்களின் உறவுகள் மேலும் மோசமடைந்தன. இவை இப்போரின்

---

1. இந்நூலாசிரியர் சேகரித்த பரதவர் அம்பாப் பாடல்கள்
2. தி. நா. சுப்பிரமணியன், காட்டு மல்லிகை, அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை, இ. ப. 1987, ப. 36.

விளைவாக தக்கணப் பீடபூமியின் மகமதியப் படைகளைத் தோற்கடிக்கும் வலிவு பெற்றிருப்பதை உணர்ந்தன. அதோடு உள்நாட்டு அரசுரிமைப் போர்களில் பங்கு பற்றும்படியும் தூண்டின. கி.பி. 1749இல் ஆம்பூரில் நடைபெற்ற போரில் பிரஞ்சு வணிகக் குழுவினர் உதவியால் முசாபர் ஜங்கும் சந்தா சாகிப்பும் அன்வாருதீனைத் தோற்கடித்தனர். இப்போர் இரண்டாவது கர்நாடகப் போர் (கி.பி. 1748-1754) ஆகும். இப்போரினால் அன்வாருதீன் இறந்தார்; முகமது அலி அகதியானார்; டியூப்லிக்ஸ் அரசியல் வழியில் வலிமை பெற்றார். ஆங்கில ஆளுநர் சாண்டர்ஸ் பிரஞ்சுக்காரர்களின் வலிமையைக் குறைக்கும் நடவடிக்கைகளில் இறங்கினார். கிளைவ் தலைமையில் சென்ற படை கர்நாடகத் தலைநகரான ஆற்காட்டை வெற்றி கொண்டு கைப்பற்றியது. சந்தாசாகிப்பின் மகன் ராஜாசாகிப் தலைமையில் சென்ற பெரும் படை, மராட்டியர் ஆங்கிலேயர்க்குத் தக்க காலத்தில் செய்த உதவியால், தோல்வியைச் சந்தித்தது. முகமது அலி கர்நாடகத்தின் நவாப் ஆனார். பிரஞ்சு அரசாங்கம் ஆங்கில ஆதிக்கத்தை இந்தியாவிலிருந்து ஒழிக்கும் பொருட்டு, கௌன்ட் டி லாலி எனும் ஆளுநரை அனுப்பி வைத்தது. இரண்டாம் கர்நாடகப்போரும் இவர்தம் பழைமை உணர்வுக்கு முடிவு கட்டாததால் மூன்றாவது கர்நாடகப்போர் (கி.பி. 1758-1763) தொடங்கியது. கௌன்ட் டி லாலி பதவியேற்ற உடனேயே (கி. பி. 1758இல்) போர் ஆரம்பித்தது. வந்தவாசியில் நடந்த சண்டையில் பிரஞ்சுப்படை தோற்றது. கி.பி. 1763இல் ஏற்பட்ட போர் நிறுத்த உடன் படிக்கை பிரஞ்சு ராணுவ, அரசியல் சக்திகளுக்கு இந்தியாவில் முடிவு கட்டியது. இக்கர்நாடகப் போர்கள் நாட்டுப்புறப் பாடல் களில் பதிவாகி உள்ளன.

### நாட்டுப்புறப் பாடல்களில் இவ்வரலாறு

இரண்டாம் கர்நாடகப் போரின்போது (கி.பி. 1748-1754) கிளைவ் தலைமையில் சென்ற படை கர்நாடகத் தலைநகரமாகிய ஆற்காட்டை வெற்றி கொண்டு கைப்பற்றியது. புதுச்சேரி உள்ளிட்ட வடதமிழ்நாட்டுக் கடற்கரைப் பரதவ மக்கள் ஆங்கிலேயரின் வெற்றியை விரும்பவில்லை என்பது அவர்தம் பாடலால் தெரிய வருகிறது.

''ஆற்காட்டை வெட்டினவன் ஏலே
ஆர்தலையை வாங்குவானோ ஏலே
ஏற்காட்டை வெட்டினவன் ஏலே
எவர்தலையை வாங்குவானோ ஏலே

சண்டை போட்டு பலிவாங்குகிறான் ஏலே
சங்கங்கெட்ட இங்கிலீசு ஏலே
குண்டுபோட்டு கொலை வாங்குகிறான் ஏலே
குணங் கெட்ட இங்கிலீசு ஏலே''[1]

எனும் பரதவர் பாடல் இரண்டாவது கர்நாடகப்போரில் ஆங்கிலேயர் பெற்ற வெற்றியைக் காட்டுகிறது. ஆற்காடு வேலூர் போன்ற இடங்களில் நிகழ்ந்த சண்டையை,

''ஆற்காட்டிலே சண்டையானால் சந்தமாமா
அடுப்பங்கரையில் ஒளிந்திருப்போம் சந்தமாமா
வேலூரில் சண்டையானால் சந்தமாமா
வேலிப்புறத்தில் ஒளிந்திருப்போம் சந்தமாமா''.[2]

எனும் சிறுவர் நாட்டுப்புறப் பாடலும் காட்டும். இப்பாடலில் உள்ள 'சந்த மாமா' எனும் சொற்றொடர் சந்திரனை, நிலவைக் குறிக்கும் என்று கூறுவர். இதைக்காட்டிலும் கர்நாடகப் போர் களில் ஒரு முக்கிய சக்தியாக விளங்கிய சந்தாசாகிபைக் குறிப்ப தாகக் கொள்ளுதல் பொருத்தப்பாடுடையதாகத் தோன்றுகிறது.

### 5. கட்டபொம்மு வரலாறு

வீரபாண்டிய கட்டபொம்மனை (1760/1761-1799) ஆங்கி லேயரை எதிர்த்த, சுதந்திரப் போராட்ட முதல் வீரனாகப் பலர் கூறுவர். ம.பொ. சிவஞானம் முதலானோர் இவன் புகழ் பரப்பினர். 'வீரபாண்டிய கட்டபொம்மன்' எனும் திரைப்படமும் புகழ் பரப்பிய பணியில் பங்கு வகித்தது. சுதந்திரத் தாகமும் தன்மானவுணர்வும் அஞ்சா நெஞ்சமும் தாய்நாட்டுப் பற்றும் உடைய வீரபாண்டிய கட்டபொம்மன் தாய்நாட்டு விடுதலைக்காக எல்லாம் வல்ல ஆங்கிலேயரை எதிர்த்து வீரப்போர் புரிந்து வெற்றி வீரனாக மாண்டு மங்காப்புகழ் எய்தினான் எனக் கூறக் கேட்டிருக்கிறோம்; படித்திருக்கிறோம். ஆனால் உண்மை வரலாறு கூறுவன வேறு. கட்டபொம்மு 'பாண்டிய', 'வீர' எனும் அடைமொழிகள் சேர்க்கப்பட்டு வழங்கப்படுவது வழக்கமாகி விட்டது எனினும் அவன் பாண்டியர் குடியைச் சேர்ந்தவனில்லை; தெலுங்கு மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட கம்பளத்து நாயக்கர். வரி தரமுடியாது என ஆங்கில ஆட்சியாளரிடம் வீரமாக

1. கு. மோகனராசு, அம்பாப்பாட்டு, பக். 31-32.
2. சு. சண்முக சுந்தரம், நாட்டுப்புறவியல் சிந்தனைகள், 1981. ப. 50.

மறுத்து உரைத்தவரும் இல்லை. இப்போது தருகிறேன், பிறகு தருகிறேன்; மழையில்லை; வானம் பொய்த்துவிட்டது; தயவு செய்யுங்கள்; அடுத்த தவணையோடு சேர்த்துக் கொடுத்து விடுகிறேன்' என்று கூறியவன் கட்டபொம்மு.

வரலாற்றாசிரியர் டாக்டர் கே. ராஜையன் எழுதியுள்ள 'மதுரை வரலாறு' (History of Madurai, Madurai University, Madurai, First edition, 1974), 'தமிழ்நாட்டு வரலாறு' (History of Tamil Nadu, Madurai Publishing House, Madurai, First edition, 1978); தென்னிந்தியக் கலகக்காரன் (South Indian Rebellion, Rao & Raghavan, Mysore, First edition, 1971) ஆகிய மூன்று நூல்களில் அவர் காட்டியுள்ள எண்ணற்ற ஆதாரங்கள் மேற்கூறிய புகழ்ச்சிகளை மறுக்கின்றன. உணர்ச்சி வயமான மக்களின் புகழ்மொழிகளுக்கும் அறிவார்ந்த வரலாற்று ஆதாரங்களுக்கும் முரண்பாடு உண்டு. 'வானம் பொழியுது பூமி விளையுது, உனக்கேன் கிஸ்தி?' எனும் வீரபாண்டிய கட்டபொம்மனின் வீர வசனத்துக்கு மாறான ஒரு தகவல் யாதெனின் 1798 ஆகஸ்டு மாதம் 27ஆம் தேதி முதல் செப்டம்பர் 20ஆம் தேதி வரை குற்றாலம், சொக்கம்பட்டி சிவகிரி, சாத்தூர், ஸ்ரீவில்லிபுத்தூர், இராமநாதபுரம் ஆகிய ஊர்களில் முகாமிட்ட கலைக்டர் ஜாக்சனைச் சந்திப்பதற் காகவும் கொஞ்சம் வரி கட்டுவதற்காகவும் மீதித்தொகைக்குத் தவணை கேட்பதற்காகவும் அவர் பின்னாலேயே 23 நாட்கள் 400 மைல்கள் அலைந்து திரிந்தும் பேட்டி கிட்டாமல் அலைக் கழிக்கப்பட்டவர் என்பதுதான். கடைசியில் கிட்டிய இராமநாத புரம் பேட்டியும் கலகத்தில் முடிந்து வேறு பல தொல்லைகள் உருவாகக் காரணம் ஆகியது (History of Tamil Nadu, pp. 197-198). கட்டபொம்மு அக்கம்பக்கம் பாளையங்களைச் சேர்ந்த மக்களின் விளைபொருள்களைக் கொள்ளையிட்டும் வீடுகளுக்கும் வைக்கோல் போர்களுக்கும் தீ வைத்தும் செல்வத்தைக் கவர்ந்தும் கொடுமை செய்ததாக வரலாற்று ஆவணங்கள் கூறும்' இவ்வரலாற்று நிகழ்ச்சிகளை உறுதிப்படுத்தும் சான்றாதாரமாக ஒரு நாட்டுப்புறப்பாடல் உள்ளது.

கட்டபொம்முவை விடப் பல வகையிலும் சிறந்த வீரனும் ஆங்கிலேயரை உண்மையிலேயே எதிர்த்தவனும் யாரெனின் கட்ட பொம்முவின் தம்பி ஊமைத்துரையே. ஊமைத்துரைக்கு மக்கள்

தொடர்பு சிறப்பாக இருந்தது. மக்கள் ஊமைத்துரையைத் தலைவனாக ஏற்றுச் செயல்பட்டனர். ஆங்கிலேயர் ஊமைத் துரைக்கு அஞ்சினர். பாளையங்கோட்டைச் சிறையிலிருந்து தப்பிய நாள் (1801 பிப்ரவரி 2ஆம் தேதி) முதல் திரும்பவும் பிடிபட்டுத் தூக்கிலிடப்பட்ட நாள் (1801 நவம்பர் 16ஆம் தேதி) வரை ஊமைத்துரை ஆங்கிலேயர்க்குச் சிம்ம சொப்பனமாக விளங்கினார். இவரது அறிவுத் திறத்தையும் மக்கள் செல்வாக்கை யும் வீரத்தையும் ஜேம்ஸ் வெல்ஷ் (James Welsh) புகழ்ந்துரைக் கிறார்.[1] உண்மை இவ்வாறிருக்க, புகழ்மொழி கட்டபொம்மு வுக்குக் கிடைத்தது பிழை. மக்களின் உணர்வுகளைத் தட்டி யெழுப்பி, ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடத் திரட்டிய சுதந்திரப் போராட்டச் செயல் திட்டத்தின்போது கட்ட பொம்முவுக்கு வீரப்படிமம் தந்து பல கதைகள் புனைந்து மக்களின் வீர உணர்ச்சியை மிகுவித்துப் பயன் கொண்டனர் எனலாம்.

கல்கியின் வரலாற்றுப் புதினங்கள் நமது தொன்மைச் சிறப்பை, வரலாற்றுப் பெருமையை விளக்கி நமது மக்களின் மேன்மையைப் பறைசாற்றின. சுதந்திரப் போராட்டக் காலத்தில் இப்புதினங் களால் ஓர் துணைவிளைவும் விளைந்தது. பழம் பெருமையைத் தூண்டிவிட்ட இப்புதினங்கள் அப்போதைய காலக் கட்டத்தில் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய போராட்டத்தினை விரைவு படுத்தின. இதுபோலவே கட்டபொம்முவின் வீரம் பற்றிய புனைந்துரைகள் பயனளித்தன. ஆனால் உண்மை வரலாறு கட்டபொம்முவைக் கொள்ளைக்காரன், ஆங்கிலேயர்க்கு அஞ்சியவன் என்றே காட்டுகிறது. இந்த உண்மை வரலாற்றைக் கீழ்க்காணும் நாட்டுப்புறப் பாடலும் உறுதிப்படுத்துகிறது.

'கட்டபொம் மேந்திரன் துட்டநடத்தையைக்
காட்டி விபரமாய்ச் சொல்லுவாராம்
தரும துரைகளே கேளுமென்று வெகு
சாதுரியமாகச் சொல்லு வாராம்
அருங்குளத்திலே கம்பஞ்சாலைக் கதிர்
ஆயிரம் கட்டையும் கொள்ளை கொண்டான்
வருமாங்குளத் தட்டைப் படப்பிலே
வளர் நெருப்பைக் கொளுத்திவிட்டான்

---

1. James Welsh, Military Reminiscences, Vol. I, Pp. 130-134.

விருதாய்ப் பொல்லாங்கு செய்கிறான் எங்கள்
வீடுகளில் வந்து கொள்ளையிட்டான்
எப்போதும் போல் காட்டுநாயக்கன் பட்டியின்
எல்லைச் சதுரிலே மேய்ந்த மாட்டை
முப்பது நாற்பது பால்பசுவை யோட்டி
முந்நூறு எருமையும் கொள்ளை கொண்டான்
பார்த்திபரே! எங்கள் சீமையெல்லாம் ஆடிக்
காற்றில் தீயைப் பரப்புகிறார்
பட்டிக் காடெங்கும் வெந்து போச்சே! தட்டைப்
படப்புக் காடெங்கும் வெந்து போச்சே
கட்டபொம்மு வலுத்துட்டன் அய்யா
அவன் கன்னங் களவிலே மிச்சமய்யா!
இப்படிக் கொள்ளையடித்தக்கால் நாங்கள்
என்னமாய்க் காலங்கள் தள்ளுவது?
இப்போது அவனை வரவழைத்துத் துரை
இந்தச் சணம் ஞாயம் கேளாவிட்டால்
படியிலே ஒரு நொடியிலே சென்னைப்
பட்டணம் போறோம் பிராதுக்கென்றார்''[1]

### 6. தாது வருஷப் பஞ்சம்

இயற்கை மாறுபாட்டால் உண்டான தாது வருஷப் பஞ்சம் இந்திய வரலாற்றில்—குறிப்பாகச் சமுதாய வரலாற்றில் என்றும் மறக்கவியலாத ஒரு நிகழ்ச்சியாக அமைந்துவிட்டது. இப்பஞ்சம் பற்றி ஆ. சிவசுப்பிரமணியன் விவரிப்பது அறியத்தக்கது.

''கி. பி. 1875இல் அன்றைய சென்னை மாநிலத்தில் தென் மேற்குப் பருவகாற்று வீசாமையால் மழை பெய்யவில்லை. அடுத்து 1876ஆம் ஆண்டில் தென்கிழக்குப் பருவக்காற்றும் வீசாமல் போனதால் கடும் வறட்சி ஏற்படத் தொடங்கியது. 1877இல் வறட்சியின் கடுமை உச்சக் கட்டத்தை அடைந்தது. வறட்சியின் தொடர்ச்சியாகக் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. பஞ்சத்திற்கு முந்தைய ஆண்டுகளில் இலட்சக்கணக்கான டன் உணவுப் பொருளைச் சென்னை மாநில அரசாங்கம் ஏற்றுமதி செய்து வந்தது. இதன் காரணமாகப் பஞ்சத்தில் வாடிய மக்களுக்குத் தேவையான உணவுப் பொருளை வழங்க அரசாங்கத்தால் இயல

---

1. ச. முருகானந்தம், **ஏசலும் தர்க்கமும் ஓர் ஆய்வு**, தமிழ்க் கலை, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், மார்ச்சு-சூன் 1987, ப. 35.

வில்லை. உணவுப் பொருள்களின் விலை அதி உச்ச நிலையை அடைய, மக்களிடம் வாங்கும் சக்தி குன்றியது. ஈசல்கள் போல் மக்கள் மடியத் தொடங்கினர். இப்பஞ்சத்தில் மாநிலம் முழுவதும் 35,000,00 மக்கள் மடிந்ததாக அரசாங்கமே கணக்கிட்டது என்றால் மடிந்தவர்களின் எண்ணிக்கை உண்மையில் இதைவிட அதிகமாகத்தான் இருக்கும். இக்கொடிய பஞ்சத்தையே தாது வருடப் பஞ்சம் என்று மக்கள் அழைத்தனர்''[1]

இப்பஞ்சத்தைக் 'கஞ்சித் தொட்டிப் பஞ்சம்' எனவும் கூறுவர். பஞ்சத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவு வழங்குவதற்காக அரசாங்கம் கஞ்சித் தொட்டிகள் பலவற்றை அமைத்து மக்களுக்குக் கஞ்சி வழங்கியதால் இப்பஞ்சம் இப்பெயரால் அழைக்கப்பட்டது எனத் 'தமிழ்நாட்டு வரலாறு' எழுதிய ஆரோக்கியசாமி குறிப்பிடுவதாக ஆ. சிவசுப்பிரமணியன் தெரிவிப்பார்.[2] இந்தியாவில் ட'ஞ்சம் என்கிறபோது எப்படி வங்கப் பஞ்சம், இராயலசீமாப்பஞ்சம் என்று சொல்லுகிறோமோ அதுபோல, தாது வருஷப் பஞ்சம் என்பது நூற்றிருபது வருடங்களுக்கு முன்பு தமிழகத்தில் ஏற்பட்ட கொடிய பஞ்சமாகும் எனவும் அந்தப் பஞ்சம் சரித்திரப் பிரசித்தமான ஒரு முக்கிய சோக நிகழ்ச்சியாக இருந்தது எனவும் ஆய்வாளர் கூறுவர்.[3]

### நாட்டுப்புறப் பாடலில் இவ்வரலாறு

'பஞ்சம் பஞ்சம் என்று நெஞ்சைப் பதைக்குது, பாண்டி நாடெல்லாம் தீஞ்சில்லா போகுது' எனும் நாட்டுப்புறப் பாடல் மெ. சுந்தரம் பதிப்பில் காணப்படுகிறது.[4] ஒருதாய் தன் குழந்தைக்குத் தாய்ப்பால் கொடுக்க வியலாமைக்காக இரங்கும் நிலையை விவரிக்கிறாள். பருத்தி விதையில்லாமையால் பசும் பாலுக்கு வழியில்லை எனவும், மரம், செடி, கொடி அவ்வளவும் மொட்டையாக இருப்பதால் ஆட்டுப் பாலுக்கும் வழியில்லாமல் போயிற்று எனவும் அவள் இரங்கிப் பாடுவதாக ஒரு பாடல் காணப் படுகிறது. இப்பாடல் மா. கோதண்டராமன், மா. வரதராஜன்,

1. ஆ. சிவசுப்பிரமணியன், **தாது வருடப் பஞ்சமும் நாட்டார் பாடல்களும்**, செம்மலர், மதுரை, செப்டம்பர், 1982, ப. 47.
2. செம்மலர், மேலது. ப. 49.
3. நா. வானமாமலை, தமிழர் நாட்டுப் பாடல்கள், 1964, ப. 71.
4. மெ. சுந்தரம், நாட்டுப்புறப் பாடல்கள், ப. 614.

தமிழண்ணல், ஆறு. அழகப்பன், மெ. சுந்தரம் ஆகியோர் பதிப்பித்த நாட்டுப்புறப் பாடல் தொகுதிகளில் காணப்படுகிறது. பர்ஸி மாக்வீன் சேகரித்த பஞ்சம் பற்றிய பாடலை கி. வா. ஜகந்நாதன் பதிப்பித்த மலையருவியில் காணலாம். நா. வானமாமலை பதிப்பித்த 'தமிழர் நாட்டுப் பாடல்கள்' எனும் தொகுப்பில் மழையில்லாமையால் மக்களுக்கு ஏற்பட்ட துன்பங்களும் தாது வருடப் பஞ்சத்தால் மக்கள் அடைந்த துயரமும் எட்டுப் பாடல் களில் விளக்கப்பட்டுள்ளன. இத்தொகுப்பில் உள்ள தாது வருடப் பஞ்சம் பற்றிய நாட்டுப்புறப் பாடல் இது :

"பூரணமாகவே தாது வருஷமும் பிறந்ததுவே
பஞ்சமும் அப்போதே காரணமாகத் தொடர்ந்ததுவே

கன்னி மாதத்தில் ஓர் மழை பேயவும்
கண்டெடுத்த ஒரு புதையலைப் போலவே
தானியம் விதைத்தார்கள் தாது வருஷத்தில்
சீமையில் மழைமாரி பூச்சியமாகவே
தீய்ந்து பயிரெலாம் காய்ந்ததையா

பூமியைக் கொதவு வைத்தாலும் ஆங்கே
பூரண காசுகள் தந்திடுவாரில்லை
காப்புக் கடகமும் தோள் வெண்டயமும்
காதுக்கொப்பு சில்லரை தாலியெல்லாம் விற்றாலும்
கட்டாது அந்த ரூபாயெல்லாம் உமக்கு.

ஆடு மாடெல்லாம் விற்றெடுத்துக் கொண்டு
ஆறுபேர் ஏழுபேர் நாம் சேர்ந்து நல்ல
கும்பகோணம் தஞ்சாவூர் போவது என்றால்
புழுத்த சோளம் கம்பு புளிச்ச கீரைதின்ன
புடிச்சுமே காலரா போடும் எட்டுப் பேரில்
மூன்றுபேர் இரண்டுபேர் மூச்சுப் பிழைப்பார்கள்.

சோளச் சோறு வாயுக்கு சேராதென்று சொன்ன
சொகுசான மகராச மக்களுகள் எல்லாம்
மழுங்கலாய் துட்டுக்கு புண்ணாக்கு வாங்கியே
மறைவுக்குப் போவாராம் உண்பதற்கே
புழுங்கலரிசிச்சாதம் சேராதுன்னு சொன்ன
புண்ணிய மகராச மக்களுகள் எல்லாம்
மலைக் கத்தாழைக் குருத்தினைப் பிடுங்கியே
மண்திட்டு மறைவிலே மடுக்கின்னு கடிப்பாராம்"

இப்பாடல் தாது வருடப் பஞ்சத்தால் மக்கள் பட்ட துயரத்தை விவரமாகக் கூறுகிறது. இந்திய நாட்டில் பதினெட்டாம் நூற்றாண்டின் பின்பகுதி தொடக்கம், பத்தொன்பதாம் நூற்றாண்டின் முடிவு வரை அங்கிங்கெனாதபடி எங்கும் பஞ்ச மாகவே இருந்தது. 1770இலும் 1784இலும் தென்னிந்தியா முழுவதிலும் தோன்றிய பஞ்சங்களைத் தவிர சென்னை மாகாணத் தில் 1807இலும் மிகக் கொடிய பஞ்சம் தலைவிரித்தாடியது. ஒரிசாவை 1865இல் ஒரு பஞ்சம் தாக்கிற்று. சென்னை, பம்பாய் மாகாணங்கள் 1876இல் (தாது வருஷம்) பஞ்சத்தில் அழுந்தின. 1896இலும் 1900இலும் இந்திய நாட்டில் பல இடங்களிலும் பஞ்சம் பரவிற்று என்று கே. கே. பிள்ளை கூறுவர்.[1] தமிழ் நாட்டுக் கதைப் பாடலாகிய 'நல்லதங்காள் கதை' பஞ்சத்தின் கடுமையை விளக்கிக் கூறுவதைப் பார்க்கலாம்.

> ''மரக்கால் உருண்ட பஞ்சம் மன்னவரைத் தோத்த பஞ்சம்
> நாழியுருண்ட பஞ்சம் நாயகனைத் தோத்த பஞ்சம்
> ஆழாக்குருண்ட பஞ்சம் ஆலினைத் தோத்த பஞ்சம்
> தாலி பறிகொடுத்துத் தனிவழியே நிண்ண பஞ்சம்
> கூறை பறி கொடுத்துக் கொழுந்தனைத் தோத்த பஞ்சம்
> கணவனைப் பறிகொடுத்துக் கைக்குழந்தை வித்த பஞ்சம்''[2]

எனப் பஞ்சத்தின் கோர முகம் காட்டப்பட்டுள்ளது. இது குறிப்பாக ஏதாகிலும் ஒரு பஞ்சத்தைச் சுட்டுவதா அல்லது பல டஞ்சங்களின் ஒட்டு மொத்த அனுபவங்களின் பிழிவா எனத் தெரியவில்லை. முற்காட்டிய நா. வானமாமலை தொகுப்பில் காணலாகும் மாடகாசம்பட்டி சின்னப்பக் கவுண்டர் உதவிய நாட்டுப் பாடல் குறிப்பாகத் தாது வருடப் பஞ்சத்தின் கொடுமையை விளக்கி அச்சரித்திரச் சம்பவத்துக்குத் தக்க சான்றாதாரமாக அமைந்து உறுதிப்படுத்துகிறது.

## 7. முதல் உலகப் போரில் எம்டன்

முதல் உலகப் போரில் (1914-1918) ஜெர்மானியரின் கடற் படையைச் சேர்ந்த கப்பலாகிய எம்டன் (Emden) இங்கிலாந்தை யும் இதன் ஆதரவு நாடுகளையும் கடுமையாகத் தாக்கிற்று.

---

1. கே. கே. பிள்ளை, தென்னிந்திய வரலாறு, (தொகுதி 2) பக். 173-174.
2. அ. நா. பெருமாள், தமிழில் கதைப் பாடல்கள், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை, மு.ப. 1987, ப. 103.

சூரியன் மறையாத நாடு எனப் பெருமை பேசிய பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் ஆளுகைக்கு உட்பட்டிருந்த இந்திய நாட்டின் கடற்கரையோர நகரங்களும் எம்டனின் தாக்குதலுக்கு உள்ளாயின. சென்னைத் துறைமுகத்தை யொட்டிய பகுதிகள் இதன் தாக்குதலுக்கு இலக்காயின. இத்தாக்குதல் ஓரிரு நாட்டுப்புறப் பாடல்களின் தோற்றத்திற்கும் காரணம் ஆயிற்று.

**எம்டன் பற்றிய தகவல்கள்**

பிரிட்டனின் கடலாதிக்கத்தைத் தகர்ப்பதற்காக ஜெர்மானியரால் ஏவிவிடப்பட்ட போர்க் கப்பல் எம்டன் ஆகும். இது ஜெர்மனியில் உள்ள 'டாண்ட்ஜித்' எனும் கப்பல் கட்டுமானத் துறையில் 1908ஆம் ஆண்டு கட்டப்பட்டது. 3,600 டன்கள் எடையுள்ள இக்கப்பல் ஒரு மணி நேரத்திற்கு 30 கடல் மைல்கள் (Nautical Miles) செல்லக் கூடியதாகும். இதில் 4.1 ரக பீரங்கிகள் இருபதுக்கு மேல் பொருத்தப்பட்டிருந்தன. 'கீழ்த்திசையின் அன்னம்' எனும் பெயர் பெற்றிருந்த இந்தக் கப்பலானது சாகசச் செயல்கள் பல புரிந்தது.[1]

**எம்டனின் சாகசங்கள்**

எம்டனின் வீரதீரச் சாகசங்கள் உலகப்புகழ் பெற்றன. திடீரென்று தாக்குவதிலும் தாக்கிவிட்டு மறைந்து விடுவதிலும் எம்டனுக்கு ஈடு இணை இல்லை எனக் கூறப்பட்டது. எதிரி நாட்டுக் கடற்படைத் தளங்களில் தங்கிச் செப்பனிடும் பணிகளைச் செய்து கொண்டதுடன் எரிபொருள், உணவு, குடிதண்ணீர் ஆகிய அத்தியாவசியப் பண்டங்களையும் பெற்றது. இப்படிச் செய்து கொள்வதற்கு இது ஒரு தந்திரோபாயத்தைக் கடைபிடித்தது. ஜெர்மானியக் கொடியை இறக்கிவிட்டு எதிரி நாடுகளின் கொடிகளைப் பறக்கவிட்டுக் கொண்டு அந்தந்த நாட்டுக் கடற்படைத் தளங்களில் நங்கூரம் இட்டுத் தேவையானவற்றைப் பெற்றுக் கொண்டு புறப்பட்டுச் சென்றுவிடும். அது சென்ற பிறகுதான் அக்கப்பல் ஜெர்மானியரது கப்பலாகிய எம்டன் என்பது தெரிய வரும். கடற்பயணத்தின்போது மறைந்து செல்வதிலும் எதிரி நாட்டுக் கப்பலுக்கண்மையில் திடீரென்று தோன்றிக் குண்டுகள் பொழிந்து தாக்குவதிலும் தாக்கிய வேகத்தில் திரும்பப் பின்வாங்கி

1. ரகமி, **எம்டன் குண்டு**, தினமணி, மதுரை, செப்டம்பர் 22, 1988, ப. 2.

விரைந்து சென்று தப்பிப்பதிலும் இதனை வெல்ல முடியவில்லை. எதிரிநாட்டுக் கப்பல் படையினரும், அந்நாட்டுக் கடற்கரையோர மக்களும் 'எம்டன்' என்று கேட்ட மாத்திரத்திலேயே கதி கலங்கினர்.[1]

**எம்டன் சென்னையைத் தாக்கியது**

1914 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் வங்காள விரிகுடாக் கடலில் எம்டன் நுழைந்தது. இவ்வாண்டு செப்டம்பர் மாதம் 22 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை இரவு 9-30 மணிக்குச் சென்னைத் துறைமுகத்தின் மீதும் அக்கம்பக்கங்களிலும் இலக்கு தேடும் விளக்கு (Search Light) ஒளியைப் பாய்ச்சியது. இராயபுரம் காசி மேட்டிலிருந்த கடற்படைப் பீரங்கிகள் எம்டனை நோக்கிக் குண்டுகள் பொழிந்தன. ஆனால் எம்டன் குண்டுகளைச் சென்னைத் துறைமுகம் நோக்கி வீசியபடி விளக்குகளை அணைத்து விட்டுக் கடலில் மறைந்தது. எம்டனிலிருந்து புறப்பட்ட குண்டுகள் பிரிட்டிஷ் கப்பலான 'ஸுப்ரா'வைத் தாக்கின; துறைமுகத்திற்கு அண்மையில் இருந்த பர்மா ஷெல் எண்ணெய் டாங்கிகள் மேல் போய் விழுந்தன; ஓர் என்ஜினியர் வீட்டையும் தாக்கின. சென்னை ஹைகோர்ட் கட்டிட வெளி காம்பவுண்டுச் சுவருக்கு அருகில் வெடித்ததில் காம்பவுண்டுச் சுவர் இடிந்தது. செயின்ட் ஜார்ஜ் கோட்டைக்கு அண்மையில் விழுந்த குண்டு மணலில் புதைந்து வெடிக்காமல் போய்விட்டது. எம்டன் வீசிய குண்டுகளின் சிதறல்கள் கடற்கரை சாலை, பூந்தமல்லி சாலை, சூளை, நுங்கம்பாக்கம் ஆகிய பல பகுதிகளில் காணப்பட்டன.[2] சென்னை நகரமே அல்லோலகல்லோலப்பட்டது. பல குடும்பங்கள் சென்னையிலிருந்து குடிபெயர்ந்து வெளியூர்களுக்குச் சென்று விட்டன. எம்டன், பாண்டிச்சேரியைத் தாண்டி, மேற்குக் கடற்கரையில் லட்சத் தீவுகளுக்கு அண்மையில் காணப்படுவதாக நாளிதழ்கள் அறிவித்த பின்னரே[3] சென்னை நகர மக்கள் நிம்மதி யடைந்தனர்.

---

1. ச. முருகானந்தம், தமிழக நாட்டுப்புற மக்களின் பாடல்கள், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை, முதல் பதிப்பு, 1990, பக். 73-74.
2. சுதேசமித்திரன், The Mail, The Hindu நாளிதழ்கள்— செப்டம்பர் 23, 1914 தேதியிட்டவை.
3. The Hindu, Madras, September 30, 1914.

**பர்மா ஷெல் எரிந்தது**

பர்மா ஷெல் ஆயில் டாங்கிகள் இரண்டின் மீது விழுந்த குண்டுகள் வெடித்ததால் அவை தீப்பிடித்து எரிந்தன. காதே செவிடாகிப் போகுமளவுக்குப் பெரிய வெடிச்சத்தம் எழுந்ததும் நான்கைந்து பனைமரங்கள் உயரத்திற்குத் தீ எரிந்தது. ஆகாய மெல்லாம் ஒரே கறுப்புப் புகையாகப்படர்ந்தது. இதனால் பயந்த் இராயபுரம் பகுதி மக்கள் ஐஸ்ஹவுஸ் பக்கமாகக் குடிபெயர்ந்து சென்றனர்.[1]

**நாட்டுப்புற வழக்காறுகள் உருவாதல்**

எம்டனின் சாகசம், தந்திரம்[2] காரணமாக, ஓர் ஆள் தந்திரம், சூழ்ச்சி, சாமர்த்தியம் மிகுந்தவனாக இருந்தால் அவரைப் பிறர் 'ஆள் சரியான எம்டன்' எனக் கூறும் வழக்காறு உண்டானது. பர்மாஷெல் டாங்கிகள் மேல் விழுந்த எம்டன் குண்டினால் அவை எரிந்தன. இவை சிறுவர் நாட்டுப்புறப் பாடல்கள் சில உருவாவ தற்குக் காரணமாயின.

'எம்டன் விட்ட குண்டு
எரிந்த டாங்கி ரெண்டு
விழுந்த பொணம் மூணு
அழுத பெண்கள் நாலு.'[3]

எனும் பாடல் அப்பொழுது தோன்றிய பாடலாகும். உயர்நீதி மன்ற மதிற்சுவர்க் கல்வெட்டு,[4] இவ்வரலாற்றுச் சம்பவத்திற்கு

1. பி. காளிதாஸ் (92) ஆர். கேசவ ஐயங்கார் எம். ஏ. பி. எல். (96), 'சங்கு' கணேசன் (93) எஸ். லட்சுமி நாராயண சாஸ்திரி (88) ஆகியோர் கூறிய தகவல்கள், ஆனந்த விகடன், சென்னை, செப்டம்பர் 25, 1988, பக். 81-82.
2. ரகமி, ஜய்ஹிந்த் செண்பகராமன், தினமணிகதிர், சென்னை, ஏப்ரல் 16, 1989, பக். 22-24; ஏப்ரல் 23, 1989, பக் 22-24.
3. ச. முருகானந்தம், தமிழக நாட்டுப்புற மக்களின் பாடல்கள், மு. நூ., ப. 74.
4. "Bombardment of Madras. Fragment of a shell fired from the German Cruiser Emden during the First World War when she eluded the Australian Navy and Bombarded Madras on 22-9-1914.
—Presented by
V. K. Ratnasabapaty Esq
Bangalore"

ச. முருகானந்தம், மு. நூ. ப. 75.

நிலையான ஆதாரமாக இருப்பது போல, மேற்காட்டிய நாட்டுப் புறப்பாடலும் 1914-ஆம் ஆண்டு நிகழ்ந்த நிகழ்ச்சியை உறுதிப் படுத்தும் ஆதாரமாக நின்று நிலவி வருகிறது.

இப்போது புழக்கத்தில் உள்ள ஒரு பீடியின் பெயர் 'எம்டன் பீடி' என்பதாம். 'அருமையான, திருப்திகரமான செயல்பாடு' எனும் பொருள்தரும் பெயரடையாக இங்கு 'எம்டன்' பயன் கொள்ளப்பட்டிருத்தலைக் கவனிக்க வேண்டும். இந்த அளவுக்கு எம்டன் நாட்டுப்புற வழக்காறுகளை உருவாக்கியதுடன் பெயர டைச் சொல்லாகவும் பயன்பட்டு வருகிறது.

## 8. சுதந்திரப் போராட்டம் - வெள்ளையர் எதிர்ப்பு

ஆங்கிலேயர் இந்தியநாட்டைத் தம் ஆளுகைக்கு உட்படுத்திக் கொண்டனர். இந்தியநாட்டுக் கைத்தொழில்கள் வளர்ச்சி குன்றின; வர்த்தக நிலையங்கள் சீரழிந்தன; விலைகள் உயர்ந்தன; இந்தியாவிலிருந்து கச்சாப் பொருட்கள் மிகக்குறைந்த விலை கொடுத்தோ அல்லது ஒரு விலையும் கொடுக்காமலோ வாரிச் செல் லப்பட்டன. இங்கிலாந்தால் இந்தியச் சமூகத்தின் முழுக் கட்டமைப்பும் தகர்ந்தது.[1] பிரிட்டிஷாரின் அடக்குமுறைக் கொடுமைகளுக்கு அளவில்லை. பொதுமக்கள் தம் மனத்துயரை, வெள்ளையர்பால் கொண்டுள்ள எதிர்ப்புணர்வைத் தமது நாட்டுப் புறப்பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளனர். சான்றாக வடதமிழ் நாட்டுக்கடற்கரைப் பரதவர் கோலாமீன் பிடிக்கச் செல்லும்போது பாடும் ஓர் அம்பாப்பாடலைக் காணலாம்.

"கண்ணவிவான் வெள்ளைக்காரன் கூடிவா கூடிவா
கருத்தழிவான் வெள்ளைக்காரன் கூடிவா கூடிவா
நல்லவரைக் கொன்னுப்புட்டு கூடிவா கூடிவா
நாமிருக்கச் சம்மதமோகூடிவா கூடிவா
பொல்லாத ராட்சதன்டா கூடிவா கூடிவா
புகை பிடிப்பான் வெள்ளைக்காரன் கூடிவா கூடிவா
வெள்ளைச் சுருட்டுக்காரன் கூடிவா கூடிவா
வெண்ணெய் திம்பான் வெள்ளைக்காரன் கூடிவா கூடிவா
மாடுதிம்பான் வெள்ளைக்காரன் கூடிவா கூடிவா
மனுஷனை மதிக்கமாட்டான் கூடிவா கூடிவா
சவுக்காலே அடிக்கிறானே கூடிவா கூடிவா

---

1. ச. முருகானந்தம், ஆராய்ச்சித் தொகுதி, பக். 29-32.

சாரட்டு வண்டிக்காரன் கூடிவா கூடிவா
தொப்பி போட்ட வெள்ளைக்காரன் கூடிவா கூடிவா
தோல்வெளுத்த வெள்ளைக்காரன் கூடிவா கூடிவா
கண்ணில்லா வெள்ளைக்காரன் கூடிவா கூடிவா
கண்ணாடி வெள்ளைக்காரன் கூடிவா கூடிவா
கூலிக்குக் காசு தந்து கூடிவா கூடிவா
குடிகெடுக்கும் வெள்ளைக்காரன் கூடிவா கூடிவா
நல்லவரைக் கொன்னபாவி கூடிவா கூடிவா
நாசமாவான் வெள்ளைக்காரன் கூடிவா கூடிவா
மண்ணாப் போவான் வெள்ளைக்காரன் கூடிவா கூடிவா
மதிப்பழிவான் வெள்ளைக்காரன் கூடிவா கூடிவா
கற்பழிச்சான் பாவிப்பயல் கூடிவா கூடிவா
கண்ணழிவான் கெட்டபயல் கூடிவா கூடிவா
சின்ன மவளையவன் கூடிவா கூடிவா
சீரழிச்சான் பாவிப்பயல் கூடிவா கூடிவா." [1]

எனும் பாடல் வெள்ளையர் நம் நாட்டை ஆண்ட நேரத்தில் மீனவர்களைக் கொடுமைப்படுத்தியதைக் காட்டுகிறது. கப்பல் வந்தால் சரக்குகளை இறக்க இவர்களைத்தான் பயன்படுத்தினர் சரியாகக் கூலி கொடுப்பதுமில்லை. மிகக் கடுமையான வேலை வாங்கினர். இவற்றையெல்லாம் இப்பாடல் காட்டுகிறது. மக்கள் மனம் நொந்து வயிறெரிந்து

'கல்லை வெட்டச் சொன்னான் வெள்ளைக்காரன்
கல்லாப் போவான் வெள்ளைக்காரன்
மண்ணை வெட்டச் சொன்னான் வெள்ளைக்காரன்
மண்ணாப் போவான் வெள்ளைக்காரன்' [2]

எனப் பாடினர். இப்பாடலில் வெள்ளையர் மீது நம் மக்கள் கொண்ட எதிர்ப்புணர்ச்சி மிகவும் வெளிப்படையாகக் காட்டப் பட்டுள்ளது.

வெள்ளைக்காரன் அதிகாரம் தூள்பறந்ததைச் சில பாடல்கள் காட்டுகின்றன.

---

1. கு. மோகனராசு, அம்பாப்பாட்டு, ஸ்டார் பிரசுரம், சென்னை, முதல்பதிப்பு, 1988, பக். 285-288
2. ஜெ. பாலன், சங்கறுக்கும் எங்கள் குலம், நெய்தல் பதிப்பகம், சென்னை, முதல்பதிப்பு, 1982, ப. 25

' ஊரானூரான் தோட்டத்திலே
ஒருவன் போட்டானாம் வெள்ளரிக்கா
காசுக்கு ரெண்டா விக்கச் சொல்லி
காயிதம் போட்டானாம் வெள்ளைக்காரன்
வெள்ளைக்காரன் பணம் சின்னப்பணம்-அது
வேடிக்கை காட்டுற வெள்ளிப்பணம்
வெள்ளிப்பணத்துக்கு ஆசைப்பட்டு
வேஷம் கொலஞ்சாளம் தேசவள்ளி '[1]

இவ்வாறு பொருளாதாரச் சீரழிவு மானம் அழிவு, மதிப்பழிவு எனப் பல அழிவுகளுக்குக் காரணமாக இருந்த வெள்ளையரை எதிர்த்தபோது சவுக்கால் அடித்துக் கொடுமைப் படுத்தியும் சிறையிலிட்டு வாட்டி வதைத்துக் கொன்று புதைத்தும் அநியாயம் செய்த அவர்கள் மீது எழுந்த கோப உணர்வு பல நாட்டுப்புறப் பாடல்களின் உள்ளடக்கமாக அமைந்தது. நீல. பத்மநாபனின் 'தலைமுறைகள்' எனும் புதினத்தில், சிறுவர் நாட்டுப்புறப் பாடல் ஒன்று பயன் கொள்ளப்பட்டுள்ளது. அது வெள்ளையர் மீது நம் மக்கள் கொண்ட கோபவுணர்வைப் புலப்படுத்துகிறது.

" ஐ........பை............
அரைக்கா பக்காநெய்
வெள்ளைக்காரன் கப்பலிலே
தீயைக் கொளுத்தி வை "[2]

என்பது அப்பாடல். நம் நாட்டு மக்களின் வீரஞ்செறிந்த போராட்டத்தின் விளைபயனாக 1947, ஆகஸ்டு 15-ஆம் தேதி நாம் அரசியல் சுதந்திரம் பெற்றோம். இவ்வரலாற்றுப் புகழ் பெற்ற நிகழ்ச்சியை,

" ஆண்டு நாற்பத்தேழு ஆகஸ்டு பதினைந்து
ஆளும் சுக்கிரவாரம் வெள்ளிக்கிழமை
வேண்டும் சுதந்திரம் வாங்கிக் கொடியேற்றி
வேண்டும் சுதந்திரம் வாங்கிக் கொடியேற்றி "[3]

எனும் புதுச்சேரி மீனவர் கும்மிப் பாடல் காட்டுகிறது.

1. கே. ஏ. குணசேகரன், நாட்டுப்புற மண்ணும் மக்களும் நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை, மு. ப. 1988, ப. 155.
2. சு. சண்முகம், நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கு, ப.72
3. எஸ். சூரியகலா, புதுவைப் பகுதி மீனவர் கும்மிப்பாடல்கள், ஆய்வுக்கோவை (தொகுதி 3, இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர், 1985, ப. 634.

## 9. அரியலூர் இரயில் விபத்து

திருச்சிக்கு அருகில் உள்ள அரியலூரில் 1957-ஆம் ஆண்டு நடந்த இரயில் விபத்து மக்களின் இதயங்களில் பெருந்துயர் உண்டாக்கிற்று. இவ்வூருக்கண்மையில் உள்ள காட்டாற்றுப் பாலம் மழை வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டமை அறிய முடியாத விடியற்கால இருட்டு வேளையில் அப்பாலத்தின் மேலுள்ள இருப்புப் பாதையில் வந்த விரைவுத் தொடர் வண்டி (Express) ஆற்றில் பாய்ந்ததால் இருநூற்றுக்கு மேற்பட்டவர் மாண்டனர். இத்துயரம் உருவாக்கிய நாட்டுப்புறப் பாடலே 'அரியலூர் ரயில் விபத்து' பற்றிய பாடலாகும்.

'பெரியவரே சிறியவரே
பிரியமுள்ள சபையோர்களே
அரியலூர் ரயில் விபத்து
அதிசயத்தைச் சொல்லிவாறேன்
அளவில்லாத சேதம்-பலர்
அடைந்தாரையா பாவம்
அளவில்லாத சேதம்-பலர்
அடைந்தாரையா பாவம்

கள்ளகம் தாண்டிய
காட்டாற்று பாலத்திலே
வெள்ளிக்கிழமையிலே
விடியக்கால வேளையிலே
விபத்து நடக்கலாச்சு-ரயில்
விழுந்து நொறுங்கலாச்சு
விபத்து நடக்கலாச்சு-ரயில்
விழுந்து நொறுங்கலாச்சு

ஆத்துத்தண்ணி மோதி மோதி
அடிச்சதையா ரயில் பாதையை
இப்பவோ பொறகோன்னு
இத்துப்போயி இருக்கையிலே
இருப்புப்பாலம் நடுவே
எக்சுப்பிரசு வரவே
இரும்புப்பாலம் நடுவே
எக்சுப்பிரசு வரவே

கடகடவென்று சொல்லி
தாராளமா வந்த வண்டி
மடமடவென்று சொல்லி
பாலம் இடிஞ்சதால் பல்டி
பயங்கரமா நொறுங்கி விழுந்து
பைசலாச்சு சனங்க
பயங்கரமா நொறுங்கி விழுந்து
பைசலாச்சு சனங்க

பொண்ணு கேட்டுப் போனவுக
புதுக்கல்யாணம் செஞ்சவுக
என்னென்னமோ மனசுக்குள்ளே
எண்ணிக் கொண்டு போனவுக
இடைவழியிலே இறந்தார்—சொந்த
இனபந்துக்கள இழந்தார்
இடைவழியிலே இறந்தார்—சொந்த
இனபந்துக்கள இழந்தார்

பகவான வணங்கச் சென்ற
பக்தகோடி அறுபதுபேர்
நகநட்டுச் சாமானோடு
நதியில் விழுந்து மாண்டாரையா
ராமேசுவரம் பக்தி—அவுக
நடுவழியிலேயே பல்டி
ராமேசுவரம் பக்தி—அவுக
நடுவழியிலேயே பல்டி

காலுடஞ்சு கையொடஞ்சு
குறுக்கொடிஞ்சு குடல்பிதுங்கி
ஏழை பணக்காரர் எல்லாம்
இறந்து போனார் நதியினிலே
கொல நடுங்குது சொல்ல
கொலை இருநூறுக்கும் மேலே
கொல நடுங்குது சொல்ல
கொலை இருநூறுக்கும் மேலே

சுத்துவட்டுக் காரவுக
சுங்கம் போட வந்தவுக
செத்தவுக நகையைப் பூராம்
திருடிக் கொண்டார் ரொம்பப்பேரு

சேதி தெரிஞ்சு போச்சு—அவுகள
செயிலிலே போடலாச்சு
சேதி தெரிஞ்சு போச்சு—அவுகள
செயிலிலே போடலாச்சு'' [1]

எனும் பாடலே மேற்சொன்ன அரியலூர் இரயில் விபத்து பற்றிய நாட்டுப்புறப் பாடலாகும். இப்பாடல் விபத்து நடந்த கிழமை, நேரம், விபத்து நடந்த விதம், விபத்தில் இறந்தவர் தொகை ஆகிய வற்றைக் கூறுகிறது.

## 10. இரண்டாவது பொதுத் தேர்தல்

சுதந்திரத்திற்குப் பின்னர் நடந்த முதல் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி அமோக வெற்றி பெற்று மத்தியிலும் பல மாநிலங் களிலும் ஆட்சி அமைத்தது. வறுமை, விலைவாசி உயர்வு, வேலை யில்லாத் திண்டாட்டம் ஆகியன இனிமேல் மக்களை வாட்டாது எனும் எதிர்பார்ப்போடு மக்கள் காங்கிரஸ் கட்சியை ஆட்சிப் பீடத்தில் அமர்த்தினர். வறுமை நீங்கும், விலைவாசி இறங்கும், எல்லார்க்கும் வேலை கிடைக்கும் என்றெல்லாம் நம்பிக் கொண் டிருந்த மக்கள் நம்பிக்கையிழந்தனர்.

ஐந்தாண்டுகள் முடிந்தன; இரண்டாவது பொதுத் தேர்தல் (1957) வந்தது. 'இரட்டை மாடுகள்' சின்னத்தைத் தாங்கியபடி காங்கிரஸ் கட்சியினர் மக்களிடம் வோட்டுக் கேட்டு வந்தனர். தூத்துக்குடி நகரசபை வார்டு கவுன்சிலர் பதவிக்குப் போட்டி யிட்ட செல்வர், காங்கிரஸ் கட்சியின் ஆதரவுடனும் ஆசியுடனும், தோணிச் சின்னத்தில் வோட்டுப் போடுமாறு கேட்டு வந்தார். பனிமயமாதா கோயிலுக்குப் பின்புறமுள்ள பரதவ மக்கள், காங்கிரஸ் கட்சி மீதும் அக்கட்சியின் வேட்பாளர் மீதும் இக்கட்சி யுடன் கூட்டணி உறவு கொண்ட பிற வேட்பாளர் மீதும் அதிருப்தியும் கோபமும் கொண்டனர். அவர்தம் அதிருப்தியும் கோபமும் அவர்கள் பாடும் அம்பாப்பாடலில் பதிவாயின.

''மானங்கெட்ட மாட்டுப் பொட்டி
மறுபடியும் வோட்டு கேக்கு
வெக்கங் கெட்ட தோணிப்பொட்டி
வீடுவந்து வோட்டு கேக்கு.' [2]

1. கே. ஏ. குணசேகரன், நகர்சார் நாட்டுப்புறக் கதைப் பாடல்கள், மு. நூ. பக் 58-59.
2. இந்நூலாசிரியர் தூத்துக்குடிப் பரதவரிடம் சேகரித்த அம்பாப் பாடல் அடிகள்.

எனும் நாட்டுப்புறப் பாடலாகிய அம்பாப் பாடலின் அடிகள் உழைக்கும் சராசரி பாமர மக்களின் விமர்சனத்தைக் காட்டுகின்றன. இரண்டாவது பொதுத் தேர்தல் நடந்த காலக் கட்டத்தில் பொது மக்களின் அரசியல் அறிவு, அரசியல் விமர்சனம் குறித்த சான்றாதாரமாக இப்பாடல் விளங்குகிறது.

## 11. தனுஷ்கோடி புயல்

1964ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22, 23ஆம் தேதிகளில் இராமநாதபுரம் மாவட்டத்தின் கடற்கரைப் பகுதிகளையும் இராமேஸ்வரம் தீவினையும் தாக்கிய வங்கக்கடல் கோரப் புயல் மிகவும் பயங்கரமான புயலாகும். இது உண்டாக்கிய சேதங்களும் அழிவுகளும் மக்கள் உள்ளத்தை மிகவும் பாதித்தன. இந்தச் சமூகத் துயரம் பல புயற்பாடலாக உருமாற்றம் பெற்றது. கடலின் சீற்றம், இதனடியாகப் பிறந்த வெள்ளம், இது பிறப்பித்த புயல் இவை மூன்றும் கைகோத்து உருவாக்கிய அழிபாடு மக்கள் நெஞ்சில் ஆழப்பதிந்தது. இந்தியா முழுமையும் கடலின் சீற்றத்துக்கு உட்பட்ட தனுஷ்கோடி நோக்கித் திரும்பிற்று. மாநில அரசும் மத்திய அரசும் துயர் துடைப்புப் பணிகளில் தங்களது முழுச்சக்தியையும் ஈடுபடுத்தின. தனி நபர்களும் பொது நிறுவனங்களும் நன்கொடை நல்கி நிவாரணப் பணிகளில் பங்கு பெற்றமை குறிப்பிடத் தக்க செய்தியாயிற்று. கோரப்புயலும் அது உண்டாக்கிய அழிவும் இதைத் தீர்க்க முன்வந்த நபர்கள், நிறுவனங்களின் கொடைத்தன்மையும் அரசு இயந்திரங்களின் அயரா உழைப்பும் மக்கள் சமுதாயத்தால் பல நாட்களாக - பல மாதங்களாக - பல ஆண்டுகளாகப் பேசப்படுவதற்குரிய பொருளாகக் கருதப்பட்டன.[1]

### தனுஷ்கோடி, இராமேஸ்வரம் - விவரம்

இராமநாதபுரம் மாவட்டத்தின் கடற்கரையையொட்டி அம்மாவட்டத்தின் பகுதியாக இராமேஸ்வரம் தீவு அமைந்துள்ளது. பாம்பன் கால்வாய் இத்தீவை இந்தியப் பெருநிலப் பரப்பிலிருந்து பிரிக்கிறது. கி. பி. 1480 ஆம் ஆண்டு அடித்த பெரும் புயல் காரணமாகவே பாம்பன் இந்திய நாட்டிலிருந்து கடலால் பிரிக்கப்பட்டது.

---

1. எஸ். போத்திரெட்டி, தனுக்கோடி நாட்டுப்புறப் புயற் பாடல்கள், பிரிசுரிக்கப்படாத எம். பில். பட்ட ஆய்வேடு. தென்திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோயில் 1981, முன்னுரை.

என்பர். இந்திய நாட்டின் இறுகிய நா வடிவ நிலப்பகுதியான தோணித்துறைக்கும் ஆடம்ஸ் பாலத்துக்கும் இடைப்பட்ட, வட மேற்காகப் பதினாறு மைல் நீளமுள்ள தாழ்வான மணற்பகுதியே இராமேஸ்வரம் தீவாகும். இராமநாதபுரம் மாவட்டத்தைச் சுற்றியுள்ள பதினாறு தீவுகளில் இராமேஸ்வரம் தீவே மிகப்பெரிய தாகும். இது பாத வடிவினது. இதன் தென்கிழக்கு எல்லையில் தனுஷ்கோடி அமைந்துள்ளது. தனுஷ்கோடி ஊரின் பரப்பளவு 1666.28 ஏக்கர் ஆகும்.[1]

## தனுஷ்கோடி பற்றி இதிகாச, புராண, இலக்கியங்களும் வெளி நாட்டார் பயணக் குறிப்புகளும்

இராமாயணத்தில் தனுஷ்கோடி பற்றிக் குறிப்பு உள்ளது. இராமேஸ்வரம் தீவே வில் வடிவினது. இராமன் இலங்கை செல்வதற்காகக் கடலைக் கடக்க வழிதரும்படி வருணனை நோக்கித் தவங்கிடந்தும் வருணன் வராமையால் சினமுற்று வில் வளைத்து அம்பெய்த இடம் என்பர். இராவணனை அழித்துத் திரும்பிய பின் வீடணனின் வேண்டுகோளுக்கு இணங்க, இராம பிரான் சேதுவை (அணையை அல்லது பாலத்தை) வில் முனையால் உடைத்தான் எனவும் அதன் காரணமாக இந்த இடம் தனுஷ் (வில்) கோடி (முனை) எனப் பெயர் பெற்றது எனவும் கூறுவர். வான்மீகி இராமாயணத்தின்படி இலங்கையிலிருந்து சீதாதேவியுடன் புட்பகவிமானத்தில் திரும்பிய இராமன், சீதையை நோக்கிச் சேதுபந்தத்தின் சிறப்பபைக் கூறுவதாகக் காட்டப்பட்டுள்ளது. அத்யாந்த இராமாயணம், ஆனந்த இராமாயணம், ஸ்காந்தம் பிரமகண்டம், பத்ம புராணம், அத்திரி ஸ்மிருதி, ஜாபாலி, நாரதர், தேவலர், மனுஸ்மிருதி, மார்கண்டேய புராணங்களிலும் இதுபற்றிக் குறிப்பு உண்டு. வியாச பாரதம், தீர்த்த யாத்திரைச் சருக்கத் திலும் இதுபற்றிக் கூறும். பதின்மூன்றாம் நூற்றாண்டினதாகிய தெலுங்கு இலக்கியம் ரங்கநாத இராமாயணமும் தனுஷ்கோடியை உயர்வாகக் கூறும். கம்பராமாயணமும் இது பற்றிக் கூறுவதை நம்மனோர் அறிவர். பதினெட்டாம் நூற்றாண்டில் எழுந்த பலபட்டடைச் சொக்கநாதப் பிள்ளையின் 'தேவையுலா', பதினாறாம் நூற்றாண்டில் எழுந்த நிரம்பிய அழகிய தேசிகரின் 'சேதுபுராணம்', பத்தொன்பதாம் நூற்றாண்டில் எழுந்த வீரராகவ ஐயங்காரின் 'ஸ்ரீ திருப்புல்லாணி நொண்டி நாடகம்', ஈழம், தமிழ்

1. மேலது, பக். 29-30.

நாட்டில் பாடப்படும் நாட்டுப்புறப் பாடல்களாகிய தாலாட்டுப் பாடல்கள் ஆகியன தனுஷ்கோடியின் பெருமையைப் பலபடப் பேசுகின்றன. அரபு நாட்டுப்பயணி அல்பெருனி (கி. பி. 1030) இத்தலம் பற்றிக் குறிப்பு வரைந்துள்ளார். பழந்தமிழ் இலக்கிய மாகிய அகநானூறு, இராமன் தனுஷ்கோடியில் பறவைகளின் ஒலி அடங்கச் செய்தபோது ஒலியடங்கியது போன்று அலர் அவிந்த தாகத் தோழி தலைவிக்குக் கூறியதாகக் காட்டுகிறது.[1]

**தனுஷ்கோடி அழிவுபற்றி நாட்டுப்புறப் பாடல்கள்**

1964 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 22 ஆம் தேதி செவ்வாய்க் கிழமை இரவு அடித்த புயல் காற்றும் பொங்கிய கடல் வெள்ளமும் பெருத்த சேதத்தை உண்டாக்கின. தென்னைமர உயரத்திற்குக் கடல் அலைகள் சீறின; பாம்பன் பாலத்தின் மேல் சென்று கொண் டிருந்த இரயில் கடலுள் வீழ்ந்தது. மண்டபத்திலிருந்து புறப்பட்ட இந்த இரயில் தனுஷ்கோடியை நோக்கிச் சென்று கொண்டிருந்த போது இந்தப் பரிதாப முடிவை அடைந்து; நூற்றுக் கணக்கானோர் செத்து, கடலில் மிதந்தனர். இந்தச் சமூகத் துயரம் பல நாட்டுப் புறப் பாடல்களை உருவாக்கிற்று.

''பொங்கு கடல் பொங்கிவர — பாம்பன் பொருமி
புதுநீர் அலை மோத''[2]

எனும் அடிகள் ஒரு தாலாட்டுப் பாடலில் இடம் பெற்றுள்ளது. தூத்துக்குடி பரதவர் பாடும் ஓர் அம்பாப் பாடல்,

''தனுஸ்கோடி புயலடிச்சு
தவிச்ச சனம் ஒருகோடி''[3]

எனப் புயலால் தவித்த மக்கள் பலர் எனக் காட்டுகிறது. 'தனுஸ் கோடி அழிந்த கதைப்பாடல்' என ஒரு பாடல் கே. ஏ. குணசேகரன் நூலில் காணப்படுகிறது. இது சேதத்தை விரிவாகக் கூறுகிறது.

''பாழாப்போன அறுபத்தி நாலா வருசம் நடந்த
பயங்கரப் புயலப் பாரு — அதே வருசம்
பண்டிட் நேருவும் மறைந்தாரு — ஏப்ரலிலே
பள்ளிக் கூடம் இடிஞ்சது — டிசம்பரில் புயலடித்தது

1. எஸ். போத்திரெட்டி, தனுஸ்கோடி நாட்டுப்புறப் புயற் பாடல்கள், மேலது, பக். 30-34.
2. அறு. அழகப்பன், தாலாட்டுக்கள் ஐநூறு, ப. 220.
3. இந்நூலாசிரியர் சேகரித்த நாட்டுப்புறப் பாடலாகிய அம்பாப் பாடல்கள்.

பலபேரு மாண்டு போனாரு — கடலுக்குள்ளே
பலபேரு மாண்டு போனாரு

இருபத்திரெண்டாந் தேதி செவ்வாய்க்கிழமையன்று
இரவெல்லாம் மழைபிடிக்க — இரைச்சலோடு
ஏகமாகப் புயலடிக்க — தனுஸ்கோடி
எல்லையிலே கடல் பொங்க
தொல்லைப்பட்ட மக்கள் எல்லாம்
என்ன செய்வோம் என்று துடிக்க — ஜனங்களெல்லாம்
என்ன செய்வோம் என்று துடிக்க

தென்னை மர உயரம் மக்களை அழிப்பதற்கு
சீறிவந்த கடலலையே — தனுஸ்கோடி
தெருவுக்குள்ளே பொங்கி நுழைய — ஜனங்களெல்லாம்
சின்னஞ்சிறு பிள்ளைக்குட்டி குடும்பத்துடனே அங்கே
திக்குத் தெரியாமல் அலைய — பொது ஜனங்கள்
திக்குத் தெரியாமல் அலைய.

தனுஸ்கோடியிலுள்ள பழங்காலக் கட்டிடமெல்லாம்
தரைமட்டமாக இடிய — அய்யய்யோவென்று
சத்தமிட்டு மக்கள் மடிய — நிமிஷத்திலே
சமுத்திர தேவியவள் கணக்கற்ற ஜனங்களைத்
தாவியே விழுங்கி முடிய — கடலரசி
தாவியே விழுங்கி முடிய

.....................

பாம்பனைத் தாண்டியந்த பாசஞ்சர் தனுஸ்கோடிக்கு
பக்கத்திலே நிக்கலாச்சு — அதுசமயம்
பயங்கரமா அலையடிச்சு — வண்டியிலுள்ள
பலகைகள் சுக்கு நூறு — நொறுங்கிக் கடலுக்குள்ளே
பல்டியும் அடிக்கலாச்சு — ரயிலு வண்டி
பல்டியும் அடிக்கலாச்சு

.....................

அடுத்த நாள் காலையிலே அலைகள் நெருங்கிக் கொஞ்சம்
அமைதியுடனே இருக்க — கடலுக்குள்ளே
ஆயிரம் பிணங்கள் மிதக்க — கரையோரத்தில்

அழுகிய பிணங்களும் ஒதுங்கி அலங்கோலமா
அடையாளமில்லாமல் கிடக்க — பிணங்களெல்லாம்
அடையாளமில்லாமல் கிடக்க

கடலில்மிதந்து நின்ற பிணங்களை விமானங்கள்
கரைகொண்டு வந்து சேர்க்க — பக்தவச்சலம்
காமராசர் சென்று பார்க்க — கிருஷ்ணமாச்சாரி
கக்கனோடு ராமையாவும் பெரியார் மதியழகன்
கலங்கி கண்ணீர் வடிக்க — பிணத்தைக்கண்டு
கலங்கிக் கண்ணீர் வடிக்க

சாவித்திரி ஜெமினியும் பதினைந்தாயிரம் ரூபாய்
தாராள நிதிகள் அளிக்க — பத்தாயிரத்தை
சரோஜாதேவியும் கொடுக்க — கொடையில் பெரும்
சக்கரவர்த்தி எம். ஜி. ஆரு ஒரு லட்சம் ரூபாய் தந்து
சனங்கள் கண்ணீரைத் துடைக்க — நேரிலே சென்று
சனங்கள் கண்ணீரைத் துடைக்க

இந்தியப் பிரதமர் சாஸ்திரி இதற்காகவே
எழுபத்தையாயிரம் தந்தார் — பலபேர் இன்னும்
ஏராள நிதிகளைத் தந்தார் — எவரெவரோ
என்னதந்து என்னபயன் இரண்டாயிரம் சனங்கள்
இவ்வுலகைவிட்டு மறைந்தார் — நிமிஷத்திலே
இவ்வுலகை விட்டு மறைந்தார்''[1]

எனும் பாடலே முற்கூறிய பாடலாகும். ஜவஹர்லால் நேரு இறந்த வருடமும் மதுரையில் சரசுவதி பள்ளிக்கூடம் இடிந்து சிறார்கள் பலர் பலியான வருடமும் தனுஷ்கோடி புயல் அடித்து அழிந்த வருடமும் ஒரே வருடமாகும் (1964) எனத் தொடரும் இப்பாடல் புயல் ஏற்படுத்திய சேதாரத்தையும் மக்கள் துயர் துடைக்க நேசக்கரம் நீட்டியவர்களையும் கூறுகிறது. மதுரை டி. வி. பச்சையப்பன் பாடிய இப்பாடல் பல வரலாற்றுக் குறிப்பு களைத் தருவது போலவே, வேம்பாறு எம். ஆர். பாக்கியம் பாடும் பாடலும் அழிந்து போன மக்கள், அல்லலுற்ற மக்களைப் பற்றி நேர்முக வருணனை போலப் பல செய்திகளைத் தருகிறது.

1. கே. ஏ. குணசேகரன், நகர்சார் நாட்டுப்புறக் கதைப் பாடல்கள், பக். 71-73.

''தனுஸ்கோடி பாம்பன்முதல்
தயங்காத இராமேஸ்வரம்
அநியாயப் புயலடித்து
அழிந்த கொடுமை பாடுகிறேன்
அமைதியாகக் கேளும் — இந்தக்
கதையை எந்த நாளும்

கண்டோர் நடுநடுங்க
காற்றுமழை புயலடிக்க
மண்டலத்தில் இக்கதையை
மனத்தெளிவாய்ப் பாடுகிறேன்
மக்களைப்போல நினைத்து — சபை
மன்னிக்கணும் பிழைபொறுத்து

ஆயிரத்து தொள்ளாயிரத்து
அறுபத்து நாலாம் ஆண்டில்
வாய்மையுள்ள டிசம்பர்மாதம்
வளரும்தேதி இருபத்திரண்டில்
அடித்தது புயல்காற்று — பாம்பன்
தனுஸ்கோடியைப் பார்த்து

ஐயாயிரம் ஜனத்துக்குமேல்
ஆணும் பெண்ணும் அவதிப்பட்டார்
பேய்மழையும் காற்றினாலே
பேதலித்து உயிரைவிட்டார்
ஐயோ துயரம் ஆச்சே — சில
ஊரழிந்து போச்சே

மாலை எட்டு மணிக்குமேலே
மதிப்படங்கா சாமத்திலே
வேலை சோலி தான் முடிந்து
வீற்றிருக்கும் வேளையிலே
வருகுதையா ரயிலு — வண்டியப்
புரட்டுதையா புயலு

வடகடலும் தென்கடலும்
மண்மோதித் தான்கிளம்ப
தொடர்பாகச் சந்தித்துமே
சூறாவளிபோல் கொதித்து

வண்டியத் தூக்கி அடிக்க — மக்கள்
மருவி மருவித் துடிக்க

ஐநூறு ஜனத்துக்குமேல்
ஆணும் பெண்ணும் அவதிப்பட்டார்
கைகால்கள் தான் முறிந்து
கடலோடு போகுதையா
ஐயோ பரிதாபம் — இது
யாரு போட்ட சாபம்

தனுஸ்கோடி ஊர்களெல்லாம்
தலைக்குமேலே தண்ணீர்வர
துணியுடைகள் இல்லாமலே
தொங்குதையா வீட்டின்மேலே
மதில் இடிந்து சாய — மக்கள்
தண்ணீரில் குதித்துப் பாய

ஐயையோ மனைவிமக்கள்
அநியாயமாய்ப் போகுதென்று
மெய்சோர்ந்து மன்னவனும்
மெதுவாக இழுக்கும்போது
குடும்பத்தோடப் புரட்டி — வெள்ளம்
கொண்டு போகுதே சுருட்டி

வள்ளங்களும் லாஞ்சுகளும்
வளைக்கச் சென்ற தோணிகளும்
வெள்ளத்திலே அடியும்பட்டு
பள்ளத்திலே இழுக்குதுபார்
ஐயோ மக்கள் அங்ற — அடி
பட்டுக் குடலும் சிதற

வெள்ளரிப் பழம் போல
வெடித்துப் பிணம் மிதக்குதையா
அள்ளிக்கொண்டு புதைப்பதற்கு
ஆளுதவி கிடையாமல்
அலையடித்து ஒதுக்க — நாய்
நரிகடித்து இழுக்க

ஐந்து நாளாய் அடைமழையும்
அநியாயப் புயல்காற்றும்
கஞ்சிதண்ணீர் இல்லாமல்
காதடைந்து கீழ்விழுந்தார்
அண்ணாந்து பார்ப்பார் — மக்கள்
அழுது சோறு கேட்பார்

சித்தம்புகழ் நடிகர்அவர்
ஜெமினிகணேசன் சாவித்திரி
அந்த ராத்திரி வேளையிலே
அமைந்தாரே கோயிலுக்குள்
ஆயாசப் பட்டார் — நடிகர்
அழுது கண்ணீர் விட்டார்.

உடுப்பதற்கோ உடையுமில்லை
உண்பதற்கோ உணவுமில்லை
படுப்பதற்கோ பாயுமில்லை
பறக்குதுபார் வெள்ளத்திலே
பார்க்கப் பார்க்கத் துக்கம் - பார்த்துப்
போனாலுமே ஏக்கம்

கக்கன்ஜி நெடுஞ்செழியன்
காமராஜர் அண்ணாதுரை
முக்கியமாய் பக்தவச்சலம்
முதல் நடிகர் எம். ஜி. ஆர்
பாம்பன் செய்தி கேட்டார் - பாங்
காகவே புறப்பட்டார்

ஏரோப்பிளேன் மீதேறி
எல்லோருமாய் சோறுகட்டி
வாரார்கள் தனுஸ்கோடி
வந்து பார்த்தார் இராமேஸ்வரம்
சோர்ந்து கண்ணீர் விட்டார்-சோற்று
மூட்டை தூக்கிப் போட்டார்"[1]

மேற்காட்டிய இரு பெரும்பாடல்கள் நாட்டின் பிரதம மந்திரி, உள்துறை அமைச்சர், தமிழ்நாட்டின் முதலமைச்சர், எதிர்க்

1. எஸ். போத்திரெட்டி, முற்காட்டிய ஆய்வேடு, பின்னிணைப்பு, முதல் பாடல்

கட்சித்தலைவர், பிற அமைச்சர்கள், புகழ் பெற்ற நடிகர்கள், நடிகைகள் ஆகியோரைக் குறிப்பிடுகின்றன; எந்த ஆண்டு, எந்த மாதம், எந்தத் தேதியில் புயலடித்தது எனத் தெளிவாகக் கூறுகின்றன. இவை ஆங்கில மாதம், ஆங்கிலத் தேதியைக் கூற, இன்னுமொரு பாடல் தமிழ் மாதம், தமிழ்த் தேதியைக் கூறுகிறது.

“ அண்ணன்மாரே தம்பிமாரே
அமைதியுள்ள தாய்மார்களே
பார்க்கப் பயங்கரமாய்ப்
பாலர்களும் பெரியோர்களும்
மாண்டார் என்ற செய்தி
பாருங்க—மார்கழி
செவ்வாய் எட்டாம்தேதி
தானுங்க”[1]

எனும் இப்பாடல் மூலம் 1964 டிசம்பர் 22-ஆம் தேதிக்கு நேர் தமிழ் மாதம் மார்கழி, 8ஆம் தேதி செவ்வாய்க்கிழமை புயல் அடித்துக் கொடுமை செய்தது எனும் வலுவான வரலாற்றுக் குறிப்பைப் பெறுகிறோம். இரயிலில் வந்த வழக்கமான பயணிகளோடு உல்லாசப் பயணமாக வந்த கல்லூரிப் பெண்கள் கூட்டம் சேரவே உயிர்ச்சேதம் பெருகியது. இதை

“ தரணி எங்கும் பேறுபெற்ற
தனுஸ்கோடி தீர்த்தம் ஆட
கல்லூரிப் பெண்கள் சிலர்
களிப்புடனே ரயிலில் வந்து
கடலில் விழுந்து மடிஞ்சிப்
போச்சுதுங்க - வண்டியுடனே
கதறி உயிருதானும்
போச்சுதுங்க”[2]

எனும் புயற்பாடற்கண்ணி காட்டும். ஆக, இப்பாடல்கள் தனுஷ்கோடி அழிவு எனும் இயற்கை வரலாற்றை நிறுவுவதற்குக் கணிசமாகவே பங்களிப்புச் செய்கின்றன எனல் தெளிவு.

## 12. சரஸ்வதி பள்ளிக்கட்டடம் இடிந்தமை

மதுரை மாநகரில் உள்ள மணி நகர் சரஸ்வதி பள்ளிக்கூடம் 1964-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 4-ஆம் தேதி சனிக்கிழமை பகல் 11 மணிக்கு மேல் 12 மணிக்குள்ளாக இடிந்து விழுந்தது. ஆண்டுத்

1, மேலது பின்னிணைப்பு இரண்டாம் பாடல்.
2. மேலது

தேர்வுக்காகச் (Annual Examination) சிறப்பு வகுப்பு (Special Class) நடந்து கொண்டிருந்த வேளையில் பள்ளிக்கூடம் இடிந்தமையால், 36 பெண்கள் அதில் அகப்பட்டு இறந்தனர். இந்தப் பரிதாபச் செய்தி மதுரை மாநகரை உலுக்கிற்று; இத்துயரம் பல நாட்டுப்புறப் பாடல்களாக உருவெடுத்தது.

“ பாண்டி நகராம் மதுரையில் நடந்த
பள்ளிக்கூட விபத்து - மனமுருகும்
பயங்கரமான விபத்து - இந்த
பரிதாப வரலாற விரிவாகச் சொல்லி வாறேன்
பாடலாகத் தொகுத்து - அய்யா
பாடலாகத் தொகுத்து.

இந்த மாதிரி விபத்துக்கள் எங்கும்
இதுவரையில் நடந்ததில்லை - நினைக்கவே
இருதயம் பொறுக்கவில்லை - இந்த
இளமைப் பருவத்திலே முப்பத்தாறு பெண்கள்
இறந்தது மதுரையிலே - ஏகமா
இறந்தது மதுரையிலே - அய்யா
இறந்தது மதுரையிலே

சீவி முடிஞ்சி மல்லிகை சூடி
செந்துருகப் பொட்டு - நெத்தியிலே
சிங்காரமாக இட்டு - இந்த
சின்னஞ்சிறு பிள்ளைகள் பாலர்களெல்லாம்
சென்றார்கள் சிரிச்சிக்கிட்டு - பள்ளிக்கூடம்
சென்றார்கள் சிரிச்சிக்கிட்டு - அய்யா
சென்றார்கள் சிரிச்சிக்சிட்டு

கடகடவென்று தூத்துக்குடி மெயிலு
கரும்புகையோடு செல்லவே - பள்ளிக்கூடக்
கட்டிடங்கள் அதிர்ந்திடவே - சிறு
காரை விழுகுதென்று பாருங்க டீச்சர்னு
கண்டு மனம் பதறவே - பள்ளிப் பெண்கள்
கண்டு மனம் பதறவே - அம்மா
கண்டு மனம் பதறவே

பங்குனி மாதம் ரெண்டாந் தேதியில
பட்டப்பகல் வேளையிலே - அன்று மணி

பனிரெண்டாகையிலே - அன்று
பாதகம் நடந்த சனிக்கிழமையில்
பரீட்சைக்குப் படிக்கையிலே - ஸ்பெசல் வகுப்புப்
பரீட்சைக்குப் படிக்கையிலே

குண்டு விழுந்தது போல் குபுகுபுவென்று
பள்ளிக்கூடம் விழுக - பெண்களெல்லாம்
குய்யோ முறையென்றழுக - அன்று
கூண்டோடு மடிந்த உடம்பில் ரத்தந்தான்
குபுகுபுவென்று ஒழுக - தரையில் ரத்தம்
குபுகுபு என்று ஒழுக

மதுராபுரியில் கோயில் கொண்டிருக்கும்
மங்கை மீனாச்சி - அங்கே
மாபெரும் விபத்தாச்சி - அந்த
மதுரையில் பெண்கள் இறந்தது தானே
மண்ணுக்கு இரையாச்சு - மதுரையிலே
மண்ணுக்கு இரையாச்சு - அம்மா
மண்ணுக்கு இரையாச்சு - அய்யா
மண்ணுக்கு இரையாச்சு

பேரான சரஸ்வதி வித்தியா சாலையாம்
பெண்கள் பள்ளிக்கூடமாம் - அதிலே
பெருத்த உயிர்ச்சேதமாம் - அங்கே
பிஞ்சும் பூவுமா இறந்து மடிந்தது
பிணமாகப் பரிதாபமா - ஒரு நொடியில்
பிணமாகப் பரிதாபமா

முத்துலட்சுமி ராஜலட்சுமி
மோகனவள்ளி தானம்மா
கலாவதி இரண்டு சுசீலாவாம் - அங்கே
முனியம்மா மேரியம்மா
மணிமேகலா செல்லம்மா - இரண்டு மீனா
மணிமேகலா செல்லம்மா

பள்ளி இடிந்ததும்
பிள்ளைகள் மடிந்ததும்
பாரெங்கும் தெரிந்ததையா - பேப்பரிலே
பலரும் படித்தாகய்யா

டி. வி. பச்சையப்பன் - சிந்தி விட்ட
கண்ணீரும் இப்ப
பாடலாய் மலர்ந்ததையா - இப்ப
பாடலாய் மலர்ந்ததையா?'[1]

எனும்பாடல் கே. ஏ. குணசேகரன் பதிப்பில் வெளிவந்துள்ளது. இவரைப் போலவே நாட்டுப்புற இயலில் ஈடுபாடுடைய ஆய்வாளர் மு. இராமசாமியும் இவ்விபத்து பற்றி எழுந்த நாட்டுப் புறப் பாடற்கண்ணிகள் சிலவற்றைச் சேகரித்து வெளியிட்டுள்ளார். அவை :

" அறுபத்து நாலில் ஏப்ரல் மாதத்தில்
அன்று நாலாம் தேதி - மணிநகரம்
அலறித் துடித்த சேதி
பங்குனி இருபத்திரெண்டாந் தேதியில
பட்டப்பகல் வேளையில - அன்றுமணி
பதினொன்று ஆகையில - இந்தப்
பாதகம் நடந்தது - சனிக்கிழமையன்று
பரீட்சைக்குப் படிக்கையில - பெசல் வகுப்பு
பரீட்சைக்குப் படிக்கையில

பாருங்க டீச்சர் காரை விழுகுது
பயமாயிருக்குதென்னவே - டீச்சரிடம்
பள்ளிப் பெண்கள் முறையிடவே - அம்மா
பாடத்தைப் படியென்று வாத்தியாரம்மா
பதறாமப் பதில் சொல்லவே - டீச்சரம்மா
பதறாமப் பதில் சொல்லவே - டீச்சரம்மா
பதறாமப் பதில் சொல்லவே

செப்புக்குடம் போன்ற கன்னியர் கூட்டம்
செத்து உள்ள இருக்க - இவங்களத்
தேடி வெளிய எடுக்க - இங்க
சிந்தை நொந்து பெற்றவர்கள் மகளே மகளே என்று
தேம்பிக் கண்ணீர் வடிக்க - பெற்றவர்கள்
தேம்பிக் கண்ணீர் வடிக்க - நல்ல
இளமைப் பருவத்தில் முப்பத்தாறு பெண்கள்
இறந்தது மதுரையிலே - ஏகமாக
இறந்தது மதுரையிலே

1. கே. ஏ. குணசேகரன், நகர்சார் நாட்டுப்புறக் கதைப் பாடல்கள், பக். 74-75.

முத்துலட்சுமி ராசலட்சுமி
மோகனவல்லி தனமாம் - லீலாவதி
மூன்று சுசீலாவாம் - லலிதா
முனியம்மா பேபியம்மா விசயா சரசா
மணிமகளே செல்லம்மா - இரண்டு மீனா
மணிமகளே செல்லம்மா

கமலவசந்தா இரண்டு கலாவதி
இரண்டு சுப்புலட்சுமி - சரோசா அந்தக்
கற்பக விசயலட்சுமி - லட்சுமி
பெக்கிரி சோதிமணி அலமேலு பாலகுரு
கலாமணி பார்வதியாம் - பரணியம்மன்
கலாமணி பார்வதியாம்

பக்தவச்சலமும் காமராசரும்
பார்த்துக் கண்ணீர் வடித்தார் - எம்ஜியார்
பத்தாயிரம் கொடுத்தார் - சினிமாப் படத்தில்
நடிக்கின்ற சிவாஜி மகள் வந்து
பாலும் பணமும் கொடுத்தார் - பாலருக்குப்
பாலும் பணமும் கொடுத்தார்.

மதுராபுரியில் கோயில் கொண்டிருக்கும்
மங்கையர் மீனாட்சி - இருந்து மிங்கே
மாபெரும் விபத்தாச்சி - இந்த
மன்மதனாய் வளர்ந்திட்ட உடலு எதுக்காச்சு
மண்ணுக்கு விலையாச்சு - நிமிஷத்தில்
மண்ணுக்கு விலையாச்சு''[1]

மேற்காட்டிய இரு ஆய்வாளர் தொகுத்து வெளியிட்ட பாடல்களில் பல ஒற்றுமைகள், சில வேற்றுமைகள் காணப்படுகின்றன. மிகவும் முக்கியமான வேற்றுமை தமிழ் மாதம், தேதி கூறுமிடத்து உள்ள தகவலாகும். கே. ஏ. குணசேகரன் பதிப்பித்த பாடலில் இவ்விபத்து நடந்த நாள் பங்குனி மாதம் இரண்டாம் தேதி எனும் செய்தி காணப்படுகிறது. மு. இராமசாமி காட்டும் பாடலில் இவ்விபத்து நடந்த நாள் பங்குனி மாதம் இருபத்திரண்டாம் தேதி

1. மு. இராமசாமி, **பாண்டியன் நகரில் ஒரு பரிதாபம்,** ஆய்வுக்கோவை, (தொகுதி-1), இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர், 1976, பக் 43-48.

எனும் தகவல் உள்ளது, ஆனால் கிழமையில் ஒற்றுமை காணப்படு கிறது. இவ்விபத்து சனிக்கிழமை நடந்ததாக இருவர் பாடல்களும் கூறுகின்றன. தமிழ் மாதம் தேதியை உறுதி செய்ய, ஆங்கில மாதம் தேதியை (1964, ஏப்ரல் 4) ஒத்திட்டுப் பார்க்க வேண்டும்.

இறந்து போன பெண்களின் பட்டியலை இருவர் பாடல்களும் கூறுகின்றன. எனினும் மு. இராமசாமி காட்டும் பாடலில் உள்ள பெண்களின் பட்டியலே விரிவானது, இப்பாடல் 'மணிமேகலா' எனும் பெயரை 'மணிமகளே' எனத் தவறாகக் கூறுகிறது. தனம்/ தனம்மாள் எனும் பெண்ணின் பெயரை கே. ஏ. குணசேகரன் தந்த பாடல் மோனை ஒருமையில் நீட்டித் 'தானம்மா' எனக்காட்டு கிறது. இது பிழை.

பள்ளிக்கூடம் இடிந்ததற்குக் காரணம் அதன் அண்மையில் உள்ள இருப்புப் பாதையும் அதில் ஓடிய விரைவுத் தொடர் வண்டி களும் எனும் தகவல் அருமையானது. தொடர்ந்து உண்டான அதிர்வுகளால் பழைய காரைக் கட்டடம் இடிந்தது என்பது இப்பாடல்களால் அறியவரும் செய்தியாகும். கட்டடம் முழுவதும் இடிந்து விழுவதற்குச் சிறிது நேரம் முன்பாகக் கொஞ்சம் காரை உதிர்ந்து மாணாக்கியர் மேல் விழ, அவர்கள் இதுபற்றித் தம் ஆசிரியையிடம் கூறியிருக்கின்றனர். நிகழவிருக்கும் அபாயம் பற்றி நினைத்துப் பாராத ஆசிரியை, மெத்தனமாக இருந்ததோடு 'சும்மா பாடத்தைப் படி' என அதட்டியிருக்கிறார். சற்று நேரத்தில் முழுக் கட்டடமும் இடிந்து விழுந்து, முப்பத்தாறு மாணாக்கியரின் வாழ்வு முடிந்தது.

மதுராபுரியைக் காவல் காக்கும் தாய்த் தெய்வமாகிய மீனாட்சி யம்மன் இருந்தும் இளம் பெண்கள் முப்பத்தாறு பேர் மண்ணுக் கிரையாயினர் என ஒரு பாடல் கண்ணி கூறும். இக்கண்ணி, செய்தியை மட்டும் கூறாது பொதுமக்களின் செய்தி விமர்சனத் தையும் சேர்த்துக் கூறுவது கவனிக்கத் தக்கது.

## 13. வைகையில் பெருக்கெடுத்த வெள்ளம்

1980-இல் மதுரையில் வைகை நதி வெள்ளப் பெருக்கெடுத் தோடியது. இராமநாதபுரம் கண்மாய் பெருகியதாலும் வைகை நதி பெருகியதாலும் மக்கள் பெருந்துயர் அடைந்தனர். வெள் ளத்தில் அகப்பட்டுக் கொண்ட மக்கள் சுற்றிலும் சூழ்ந்துவிட்ட வெள்ளத்திற்கிடையே சோறு இன்றித் தவித்தனர். வெள்ளம் அடித்துச் சென்ற மக்களின் உடல்கள் திருப்புவனக் காடுகளில்

ஒதுங்கின. அரசாங்கம் ஹெலிக்காப்டர் மூலம் வெள்ளத்தால் சுற்றி வளைக்கப்பட்ட மக்களுக்குச் சோற்றுப் பொட்டலங்கள் போட்டு உதவி செய்தது. வீடுகளையும் கால்நடைகளையும் இழந்த மக்கள் மாவட்ட ஆட்சித்தலைவரிடமும் அமைச்சரிடமும் மனுக் கொடுத்தனர். இவ்வெள்ளமும் இவ்வெள்ளத்தால் விளைந்த சேதமும் இதில் அகப்பட்டுக் கொண்ட மக்களின்துயரமும் கீழ்வரும் நாட்டுப்புறப் பாடலில் பதிவானமை காணலாம்.

''கூட்டம் ரொம்பக் கூடிடுச்சி — நம்ம
கொறவன் கொறத்தி ஆட்டம் பார்க்க
நாடே தெரண்டிடுச்சி தன்னானே — நம்ம
நல்லதொரு சேதி கேக்க தன்னானே
தேக்கு உருண்டுவர
தேங்காமரம் கூடவர
சோழவந்தான் தேங்காமரம் ராசக்கா —
தூரோட கிளம்பிவர அய்யாக்கா

கொள்ளிடம் ஒடஞ்சி வர
கொண்டமாரி இடிஞ்சி வர
வாழைத்தோப்பு அழிஞ்சிவர — ராசாக்கா பிணங்கள்
வைகையிலே போனதென்ன அய்யாக்கா
அணைகட்டும் ஒடஞ்சிவர
அண்ணாநகர் அழிஞ்சிவர
அண்ணாநகர் குடிசைகள்ளாம் — ராசக்கா இப்ப
அடியோட போனதென்ன அய்யாக்கா

பொங்கிய தண்ணி வர
பெரியபாலம் இடிஞ்சிவர
அணைக்கட்டுப் பெருகிவர — ராசாக்கா — நம்ம
வண்டியூரை அமுக்கிடுச்சே தண்ணிக்குள்ளே அய்யாக்கா
இத்தனடி தண்ணியத்தான்
இதுவரையும் பார்த்ததில்லே
அநியாயம் நடக்கப் போயி — ராசாக்கா மக்கள்எல்லாம்
அவதிப்பட்டோம் தண்ணிக்குள்ளே அய்யாக்கா

அங்கங்கே பிணங்கள்எல்லாம்
செத்து நல்லா மெதந்துவர — நம்ம
அணைக்கட்டுத் தேக்கத்திலே — ராசாக்கா
பிணத்தை அடையாளம் பார்க்கலையே — அய்யாக்கா

சட்டரத் தூக்கி விட்டார்
தங்கின பொணத்தைத் தள்ளிவிட்டார்
இழுத்துப்போன பொணத்தையெல்லாம் — ராசாக்கா மக்கள்
எப்படித்தான் பாக்குறதோ — அய்யாக்கா

இழுத்துப்போன பொணங்களெல்லாம்
எங்க கொண்டு அடஞ்சி போச்சு
திருப்புவனக்காடுகள்ள — ராசாக்கா மக்கள்
தேடியல்லோ பிணத்தைப் பார்த்தோம் — அய்யாக்கா
நாலுகம்மா ஓடைய
ராம நாடு வெள்ளமாக
ராக்கெட்ல சோறுவர — ராசாக்கா எம் ஜி ஆர்
நல்லுதவி செஞ்சுவந்தார் அய்யாக்கா

சோறுகளும் போட்டு வந்தார்
துணிமணியும் கொடுத்துவந்தார்
அரிசன மக்களுக்கு — ராசாக்கா
அரிசிகளும் போட்டுத் தந்தார் — அய்யாக்கா

வைகைநதி பெருகிவர
வண்டியூர் மந்தையெல்லாம் பெருகிவர
மாடு கன்றை அவுத்துக்கிட்டு — ராசாக்கா மக்கள்
மாதாகோயில் போனோமில்ல — அய்யாக்கா
கத்தோலிக்கத் திருச்சபையில்
சபையோட பங்குச்சாமி
கட்டுச்சோறு கொடுத்து நல்லா — ராசாக்கா
கட்டடத்தில் தங்கச் சொன்னார் — அய்யாக்கா

சுடுகாடு இல்லையய்யா
சொந்தக்காணி இல்லையய்யா — இப்ப
இடுகாடு இல்லையய்யா — ராசாக்கா — பொணத்த
எங்கே கொண்டு பொதைக்கிறது — அய்யாக்கா
முயற்சி எடுக்க வேணும்
முடிவு பண்ணிப் பார்க்க வேணும்
வண்டியூரு ஒண்ணு சேந்து — ராசாக்கா எம் ஜி ஆருக்கு
மனுக்கொடுத்துப் பேச வேணும் அய்யாக்கா"[1]

---

1. கே. ஏ. குணசேகரன், நகர்சார் நாட்டுப்புறக் கதைப் பாடல்கள், பக். 79–80

தனுஷ்கோடிப் புயலில் அகப்பட்டுத் துயருற்ற மக்களது துன்பம் தீர்க்க எம். ஜி. ஆர் நன்கொடை அளித்த செய்தி அப்புயற் பாடல்களில் பதிவானமை முற்காட்டப்பட்டது. இப்பாடலில் எம். ஜி. ஆரிடம் மனுக்கொடுத்துப் பேசவேண்டும் எனக் கூறப்பட்டுள்ளதற்குக் காரணம், வைகை நதி பெருக்கெடுத்த காலக் கட்டத்தில் அவர் தமிழ்நாட்டு முதலமைச்சராக இருந்தமையாகும். நாட்டுப்புறப் பாடல்கள் வரலாற்றைச் சரியானபடி பதிவு செய்வன என்பதற்கு இது ஓர் சான்றாகும்.

## 14. ஸ்கைலேப் அச்சம்

அமெரிக்க ஐக்கிய நாடு (United States of America) விண்வெளி ஆய்வுக்காக அனுப்பிய 'விண்ணாய்வுக் கூடம்' (ஸ்கைலேப் — Skylab) ஆயுள் முடிந்து பூமியின் காற்று மண்டலத்தில் புகுந்து பூமியில் வந்து விழும் என விஞ்ஞானிகள் கணித்தனர். பூமியில் எங்கே வந்து விழும், எப்போது விழும் என்பன பற்றி வேறுபட்ட கருத்துகள் நிலவியபோதிலும் ஒவ்வொரு நாடும் அஞ்சின; மக்கள் பீதியுற்றனர். மதுரையில் வந்து விழலாம் என ஒரு செய்தி நிலவியதைத் தொடர்ந்து மதுரை மக்கள் அச்சமுற்றனர். இவ்வச்சத்தால் எழுந்த நாட்டுப்புறப் பாடல் இது.

"(அய்யா)
சேதி அறிந்ததும் தேசமுழுவதும் — அந்தப்புரத்திலே
பீதி அடைந்ததய்யா
மக்கள் எல்லாம் ஓடி ஒளிந்தமையா — அந்தப்
புதன்கிழமை காலையிலே சென்று
புத்தியும் செல்லலையா
மக்களும் வெளியே வல்லையய்யா

(அய்யா)
நாளு நெருங்கவும்
நாடு முழுவதும் — அந்தப்புரத்திலே
கண்ணுக்கு உறக்கமில்லே
மக்களுக்கு நாதம் புரியவில்லை
அந்தக்காலம் விதிச்சது
ஸ்கைலேப் பறந்தது
கண்ணீர் வடிச்சதையா
மக்களெல்லாம் கவலை அடைஞ்சதையா

(அய்யா)
மாலைமுரசு சேதிகளைக் கேட்டு
மருத நடுங்குச்சையா
மக்களெல்லாம் ஓடி ஒளிஞ்சதையா
இந்தப் பூமியில் விழுகக் கூடாது
என்றுமே சொல்லியே
பூசை நடந்ததைய்யா
கோவிலெங்கும் பூசைநடந்ததைய்யா

(அய்யா)
என்னென்ன இஞ்சினு
ராக்கெட்டு செய்துமே — அந்தப்புரத்திலே
எங்கும் பறந்ததைய்யா
மக்களெல்லாம் ஏங்கித் துடிச்சதைய்யா
நம்ம மீனாட்சி பட்டணம் விழுகுமுன்னமே
பேப்பரில் வந்ததைய்யா

உலகநாடு பேப்பரில் வந்ததையா
மணிக்கணக்காகப் பேப்பரைப் பார்த்து
மருதை நடுங்குச்சையா
மக்களெல்லாம் பள்ளிக்குச் செல்லலையே
அந்த மூன்று நாளைக்கு
லீவு கேட்டுமே
வீட்டுக்குச் சென்றதைய்யா
பள்ளிப் புள்ளைகள்
வீட்டுக்குச் சென்றதைய்யா

(அய்யா)
ஆயிரக் கணக்கான
ராக்கெட்டு செஞ்சுமே
அனுப்பியே விட்டாகைய்யா
மக்களெல்லாம்
ஆனந்தம் கொண்டாரைய்யா
அந்த அரபிக் கடலிலே
தானாக விழுகவே
தந்திரம் செஞ்சாங்கைய்யா

மக்களெல்லாம்
ஆனந்தம் கொண்டாங்கையா''[1]

கடைசியில் 'ஸ்கைலேப்' ஆஸ்திரேலியாவில் போய் விழுந்தது. அங்கு மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதியில் விழுந்தமையால் பெருஞ்சேதம் இல்லாமல் போனது. மற்ற சமூகத்துயரப் பாடல்களுக்கும் இதற்கும் உள்ள வேறுபாடு ஒன்று உண்டு. பஞ்சம், கலகம், போர், புயல், விபத்து, வெள்ளம் ஆகியனவற்றால் பாதிக்கப்பட்ட பின்னர் எழுந்தவை பிற பாடல்கள். ஆனால் இப்பாடலோ பாதிக்கப்படுவதற்கு முன்னாலேயே, பாதிக்கப் படுவோம் எனும் அச்சத்தின் பேரிலேயே எழுந்ததாகும். ஸ்கைலேப் பூமியில் வந்து விழுந்த ஆண்டு 1981. மதுரையில் வந்து விழும் எனும் செய்தி பரவியவுடன் மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் மக்கள் வழிபட்டு இத்துன்பம் தவிர்க்குமாறு அம்மனை வேண்டி நின்றனர். பள்ளிகள், கல்லூரிகள் விடுப்பு விட்டன. மக்கள் பரபரப்புடன் இதுபற்றியே பேசுவாராயினர். பத்திரிகைகள் இந்த ஸ்கைலேப் வந்து விழும் வேகத்தையும் இதனால் ஏற்படப் போகும் அழிவையும் சித்தரித்தன. இதனால் மக்களிடையே பயம் உண்டாகிவிட்டது. இந்தப் பய உணர்வும் எங்கேயோ தொலை தூரத்தில் போய் விழுந்தது எனும் செய்தி கேட்டபின்னர் உண்டான நிம்மதி உணர்வும் ஆனந்தமும் இந்நாட்டுப்புறப் பாடலின் கருவாயின.

## ஆய்வு முடிபு

நாட்டுப்புறப் பாடல்கள் வரலாற்றை நிறுவுவதற்கான ஆதாரங்களில் ஒன்றாகப் பயன் கொள்ளப்படவேண்டும் என்பதும் ஆதாரமாகப் பயன் தருவன என்பதும் விளக்கப்பட்டன. கிறிஸ்து பிறப்பிற்கு முன்பின்னான சங்க காலத்தில் நடந்த ஏற்றுமதி, இறக்குமதி வாணிகப் பொருளாதார வரலாறு, கி. பி. ஏழாம் நூற்றாண்டைச் சேர்ந்த மாறவர்மன் அரிகேசரி காலக் கட்டத்தில் நிகழ்ந்த சமண-சைவ சமயங்களின் போராட்ட வரலாறு. கி. பி. பதின்மூன்றாம் நூற்றாண்டு முதலாக நிகழ்ந்த மகமதியர் படையெடுப்பு, அதன் விளைவுகள் பற்றிய வரலாறு, பதினெட்டாம் நூற்றாண்டில் ஆங்கிலேயர்க்கும் பிரெஞ்சுக்காரர்களுக்கும் பரங்கிப் பேட்டையில் நடந்த போர், இதே நூற்றாண்டில் ஆற்காட்டில் நிகழ்ந்த இரண்டாவது கர்நாடகப்போர், பத்தொன்பதாம்

1. கே. ஏ. குணசேகரன் நகர்சார் நாட்டுப்புறக் கதைப் பாடல்கள் பக். 81-82.

நூற்றாண்டில் ஏற்பட்ட தாது வருஷப் பஞ்சம், சிவகாசிக் கலகம் பற்றிய வரலாறு, இருபதாம் நூற்றாண்டில் நடந்த முதல் உலகப் போரில் ஜெர்மனி அதன் எதிரணி நாடுகளைத் தாக்கிய போர் வரலாறு, இந்நூற்றாண்டின் முற்பாதியில் நம் நாட்டு மக்கள் ஆங்கிலேயர்க்கு எதிராகத் திரண்டு போராடிய வரலாறு, இந்திய அரசியல் சுதந்திரத்திற்குப் பின்னர் நடந்த இரண்டாவது பொதுத் தேர்தல் (1957) அரியலூர் இரயில் விபத்து (1957), தனுஷ்கோடிப் புயல் (1964), மதுரை மணி நகர் சரசுவதி வித்யாசாலை இடிந்த விபத்து (1964), வைகை நதி வெள்ளம் (1980), விண்ணாய்வுக் கூடம் பூமியில் வந்து விழுந்தமை (1981) ஆகியன பற்றிய வரலாறுகள் நாட்டுப்புறப் பாடல்களில் பதிவாகி உள்ளன எனக் காட்டப்பட்டன.

பின்னிணைப்பு

## தாது வருடப் பஞ்சம்

பூரணமாகவே தாது வருஷமும் பிறந்ததுவே
பஞ்சமும் அப்போதே காரணமாகத் தொடர்ந்ததுவே
கும்மியடிக்கிறேன் கந்தன் கணபதி காப்பாரே சத்திய
வாக்கருள்வாய்

பால் நிகர் சந்திரன் எத்திசை சேரும் நடராஜன்
அம்மன் சொல்படி பந்தியாய் நின்று
பாடுவோமே கும்மி தாது வருஷத்தை
தலைவிதிப் படியேதான் மழையெங்கும் இல்லாமல்
கன்னியை மாதத்தில் ஓர் மழை பேயவும்
கண்டெடுத்த ஒரு புதயலைப் போலவே
தானியம் விதைத்தார்கள் தாது வருஷத்தில்
சீமையில் மழைமாரி பூச்சிய மாகவே
தீய்ந்து பயிரெலாம் காய்ந்ததையா
அரைக்கீரை சோளம் சிறுநெல்லு கம்புக்கு
காரண மானதோர் புதன் சந்தையில்லை
எட்டு வள்ளம் விற்று இரண்டு வள்ள மாகி
துட்டமான பேர்களை மட்டடக்கி
தட்டுப்படாது தைத்து வள்ளத்தில் வைத்து
கொட்டுப் பட்டாற் போல நிறுத்திற்றுமே
மாதமாம் தீபாவளிப் பண்டிகை வந்தது
ஆனபேர் களிப்புடன் கொண்டாட முடியாமல்
நோம்புகள் போச்சுதே, ஐயையோ கம்பு
கார்த்திகை மாதத்தில் முக்கால் வள்ளம் கூட
காணமுடியாமல் நாங்களும் தெம்பற்றோம்
காட்டை யுழுது பயிர்டும் காராளக்
கவுண்டரெல்லாம் கவலேத்த மாட்டினை
தேடியே கட்டை வண்டியில் கட்டி
ஓடரோம் தூர தேசமும் என்றாரே
போயங்கு தவசம் பிடித்திடக் கையில்
ஈயக் காசுக்கும் ஏதும் வழியில்லை
பூமியைக் கொதவு வைத்தாலும் ஆங்கே
பூரண காசுகள் தந்திடுவாரில்லை

காப்புக் கடகமும் தோள் வெண்டயமும்
காதுக்கொப்பு சில்லரை தாலியெல்லாம் விற்றாலும்
கட்டாது அந்த ரூபாயெல்லாம் உமக்கு
கவலை ஏத்த மாட்டு தீனிக்கே மட்டும்
பத்தாததிற்கு பணம் வேண்டும் என்றுமே
ஆடு மாடெல்லாம் விற்றெடுத்துக் கொண்டு
ஆறுபேர் ஏழுபேர் நாம் சேர்ந்து நல்ல
கும்பகோணம் தஞ்சாவூர் போவது என்றால்
புழுத்த சோளம் கம்பு புளிச்சக் கீரை தின்ன
புடிச்சுமே காலரா போகும் எட்டுப் பேரில்
மூன்றுபேர் இரண்டுபேர் மூச்சுப் பிழைப்பார்கள்
எல்லாம் சிவன் செயல் என்றிடுவாரெல்லாம்
தினுசு வேலைகள் எட்டுமே செய்குவார்
சீமைகள் எங்கும் சுற்றித் திரிகுவார்
சோளச்சோறு வாயுக்கு சேராதென்று சொன்ன
சொகுசான மகராச மக்களுகளெல்லாம்
மழுங்கலாய் துட்டுக்குப் புண்ணாக்கு வாங்கியே
மறைவுக்குப் போவாராம் உண்பதற்கே
புழுங்கலரிசிச் சாதம் சேராதுன்னு சொன்ன
புண்ணிய மகராச மக்களுகளெல்லாம்
மலைக் கத்தாழைக் குருத்தினைப் பிடுங்கியே
மண்திட்டு மறைவிலே மடுக்கின்னு கடிப்பாராம்
எப்பத்தான் நமக்கு காலம் செழிக்குமோ
உப்போ பணத்துக்கு இரண்டு படிவிலை
ஊருக் கிணத்திலே தண்ணி யில்லை
நமக்கு எப்பவே காலம் செழிக்குமென்றால் — துரைக்கு
அப்பவே விண்ணப்பம் போடலாமென்றார்

## பஞ்சமும் மழையும்

ஆடுவித்து மாடுவித்து ஐயோ வருணதேவா
அத்தனையும் கூடவித்து ஐயோ வருணதேவா
காதுகடுக்கு வித்து ஐயோ வருணதேவா
கைவளையல் கூட வித்து ஐயோ வருணதேவா
இச்சிக்காய் தின்ன பஞ்சம் ஐயோ வருணதேவா
இன்னும் தெளியலையே ஐயோ வருணதேவா
காரைக்காய் தின்ன மக்கள் ஐயோ வருணதேவா
காதடைச்சு செத்த மக்கள் ஐயோ வருணதேவா

மக்க வெதச்ச கம்பு மச்சு வந்து சேரணுமே
ஓடி வெதச்ச கம்பு ஊடுவந்து சேரணுமே
கலப்பை பிடிக்குந் தம்பி கை சோந்து நிக்கிறாங்க
அதுக்கே மனமிரங்கு ஐயோ வருணதேவா
ஏர்பிடிக்குந் தம்பியெல்லாம் எண்ணப்பட்டு நிக்கிறாங்க
அதுக்கே இறங்கவேணும் ஐயோ வருணதேவா
பேயுதய்யா பேயுது பேய்மழையும் பேயுது
ஊசி போல காலிறங்கி உலகமெங்கும் பேயுது
உலகமெங்கும் பேஞ்சமழை ஊரிலெங்கும் பேயலே
பாசிபோல காலிறங்கி பட்டணமே பேயுது
பட்டணமே பேஞ்சமழை பட்டியிலே பேயலே
துட்டுபோல மின்னி சீமையெங்கும் பேயுது
சீமையெங்கும் பேஞ்சமழை செல்லமழை பேயலே

## மானம் விடிவதெப்போ?

பூமியைநம்பி புத்திரரைத் தேடி வந்தோம்
பூமி பலியெடுக்க புத்திரர் பரதேசம்,
மானத்தை நம்பி மக்களைத் தேடி வந்தோம்
மானம் பலியெடுக்க மக்களெல்லாம் பரதேசம்
ஏர்பிடிக்கும் தம்பியெல்லாம் பின்னப்பட்டு நிக்கிறாங்க
அந்தக் குறை கேட்டு வந்திறங்கு வர்ணதேவா
மேழி பிடிக்கும் தம்பியெல்லாம் முகம் சோந்து நிக்கிறாங்க
அந்தக் குறைகேட்டு வந்திறங்கு வர்ணதேவா
காட்டுத் தழை பறித்து கையெல்லாம் கொப்புளங்கள்
கடிமழை பெய்யவில்லை கொப்புளங்கள் ஆறவில்லை
வேலித் தழை பறித்து விரலெல்லாம் கொப்புளங்கள்
விரைந்து மழை பெய்யவில்லை வருத்தங்கள் தீரவில்லை
மானம் விடிவதெப்போ, எங்க மாட்டுப்பஞ்சம் தீர்வதெப்போ
பூமி செழிப்பதெப்போ, எங்க புள்ளைப்பஞ்சம் தீர்வதெப்போ

ஓடி வெதச்ச கம்பு ஐயோ வருணதேவா
ஊடு வந்து சேரலையே
பாடி வெதச்ச கம்பு ஐயோ வருணதேவா
பானை வந்து சேரலையே

## பஞ்சம் (i)

பரட்ட புளியமரம்
பந்தாடும் வில்லமரம்
பந்தாடும் நேரமெல்லாம்
பகவானைப் பார்த்தழுதோம்

பாம்புக்கோ ரெண்டு கண்ணு
பகவான் கொடுத்த கண்ணு
பாவிப்பய சீமையிலே
பாம்பா சுருண்டழுதோம்

தேளுக்கோ ரெண்டு கண்ணு
தெய்வம் கொடுத்த கண்ணு
பாவிப்பய தேசத்திலே
தேளா சுருண்டழுதோம்.

## பஞ்சம் (ii)

வானத்தை நம்பியல்லோ மக்களைத் தேடி வந்தோம்
மானம் பலியெடுக்க மக்கள் பரதேசம்
மன்னரெல்லாம் தன் நாசம்
பூமியைத் தேடியல்லோ புத்திரரைத் தேடிவந்தோம்
பூமி பலியெடுக்க புத்திரர் பரதேசம்
புண்ணியரும் தன் நாசம்
சோறு சோறு என்று சொல்லி
துள்ளும் பாலரெல்லாம்
அன்னம் அன்னம் என்று சொல்லி
அழுகுது பாலரெல்லாம்
கோடை அழிய வேணும்
கொள்ளை மழை பெய்யவேணும்
மாவு கொதிக்க வேணும்
குழந்தை பசியாற வேணும்
பூமி விளைய வேணும்
புள்ளை பசியாற வேணும்

## மழையே வா

ஊசிபோல் மின்னல் மின்ன
ஊரிக் கிணறு தண்ணிவர

பாசி போல மின்னல் மின்ன
பாங்கிணறு தண்ணிவர
சட்டியிலே மாக்கரைத்து
சந்தையெல்லாம் கோலமிட்டு
கோலம் அழியவில்லை
கொள்ளை மழை பெய்யவில்லை
கிண்ணியிலே மாகரைத்து
கங்கையெல்லாம் கோலமிட்டு
கோலம் அழியவில்லை
கொள்ளை மழைபெய்யவில்லை
மோழி பிடிக்கும் தம்பி
முகம் சோர்ந்து போகுதம்மா
கலப்பை பிடிக்கும் தம்பி
கை சோர்ந்து நிக்குதம்மா

## பஞ்ச காலம்

மானம் கவுந்து வரும்
மணிப்புறா மேஞ்சு வரும்
மணிப்புறா குஞ்சென்று
மதிப்பாரே பஞ்சமையா
நீலம் கவுந்து வரும்
நீலப்புறா மேஞ்சுவரும்
நீலப்புறா குஞ்சென்று
நெனைப்பாரே பஞ்சமையா

மேற்காணும் ஏழு பாடல்களும் நா. வானமாமலை தொகுத்துப் பதிப்பித்த 'தமிழர் நாட்டுப் பாடல்கள்' (பக். 63-75) எனும் நூலிலிருந்து எடுத்துத் தரப்பட்டுள்ளன. பர்சி மாக்குவின் எனும் பெயரிய ஆங்கிலேய ஐ. சி. எஸ். அதிகாரியால் சேகரிக்கப்பட்டு கி. வா. ஜகந்நாதன் பதிப்பில் வெளிவந்த 'மலையருவி' (பக். 335-336) எனும் நூலிலும் இது பற்றிய பாடல் ஒன்று உண்டு.

## தாது வருஷப் பஞ்சம்

தாது வருஷப் பஞ்சத்திலே —ஓ சாமியே
தாய்வேறே பிள்ளைவேறே ,,
அறுபது வருசம் போயி ,,
அடுத்தாப் போலே தாதுதானே ,,

தைப்பொங்கல் காலத்திலே ஓ சாமியே
தயிருக்கும் பஞ்சம் வந்ததே ,,
மாசி மாதத் துவக்கத்திலே ,,
மாடுகளும் பட்டினியே ,,
பங்குனிக் கடைசியிலே ,,
பால் மாடெல்லாம் செத்துப் போச்சே ,,
சித்திரை மாதத் துவக்கத்திலே ,,
சீரெல்லாம் குலைந்து போச்சே ,,
வைகாசி மாதத்திலேதான் ,,
வயிறு எல்லாம் ஒட்டிப் போச்சே ,,
ஆனி மாதத் துவக்கத்திலே ,,
ஆணும் பெண்ணும் அலறலாச்சே ,,
ஆடி மாதத் துவக்கத்திலே ,,
ஆளுக்கெல்லாம் ஆட்டமாச்சே ,,
ஆவணி மாதத் துவக்கத்திலே ,,
ஆட்டம் நின்று ஓட்டமாச்சே ,,
புரட்டாசிக் கடைசியிலே ,,
புரண்டுதே உலகம் பூரா ,,
ஐப்பசித் துவக்கத்திலே ,,
அழுகையுங் கண்ணீரும் தானே ,,
கார்த்திகைக் கடைசியிலே ,,
கண்ட இடம் எல்லாம் பிணம் ,,
மகாராணி புண்ணியத்திலே ,,
மார்கழிப் பஞ்சம் நின்றதே ,,
காட்டுப் பக்கம் நூறு பிணம் ,,
வீட்டுப் பக்கம் நூறு பிணம் ,,
ரோட்டுப் பக்கம் நூறு பிணம் ,,
மேட்டுப் பக்கம் நூறு பிணம் ,,
ஆற்றிலேயும் தண்ணியில்லை ,,
குளத்திலேயும் தண்ணியில்லை ,,
கிணற்றில் பார்த்தால் உப்புத்தண்ணி ,,
கிழடு கட்டை குடிக்கும் தண்ணி ,,
தண்ணிக்காகத் தான் வறண்டு ,,
தவறினது கோடி சனம் ,,
கஞ்சியில்லாமே தவித்து ,,
காட்டிலே மாண்டது கோடி ,,

கஞ்சித் தொட்டி போட்டார்களே ஓ சாமியே
அன்புடனே அழைத்தோர் தானே ,,
காலம்பர கோடி சனம் ,,
கஞ்சி குடித்துக் களையாத்துச்சே ,,
பொழுது சாயக் கோடி சனம் ,,
பொழைச்சுதே உசிர் தப்பித்து ,,
கஞ்சிக்கு கடிச்சிக்கிற ,,
காணத் துவையல் கொடுத்தாங்களே ,,

## தாலாட்டுப்பாடலில் பஞ்சம் பற்றிய செய்தி

முத்துச் சிரிப்பழகா முல்லைப்பூ பல்லழகா
வெத்துக் குடிசையிலே விளையாட வந்தாயோ
ஏழைக் குடிசையிலே ஈரத்தரைமேலே
தாழம்பாய் போட்டுத் தவழ்ந்திட வந்தாயோ
தரையெல்லாம் மேடுபள்ளம் தவழ்ந்தால் உறுத்தாதோ

பளிங்கால் அரண்மனையும் பவளத்தால் மாளிகையும்
பணக்காரன் வீடிருக்கப் பஞ்சனிடம் வந்தது ஏன்
பச்சரிசிச் சோளம் பாதிநாள் பட்டினிதான்
பசும்பால் கொடுத்துதான் பசிதீர்க்கப் பார்த்தாலும்
பருத்திவிதை இல்லையடா பசு பாலும் தரலையடா

ஆட்டுப் பாலூட்டி உன்னை ஆதரிக்கப் பார்த்தாலும்
ஆடுகடிக்கும் மரம் அத்தனையும் மொட்டையடா
பிள்ளைப் பாலூட்டி அன்ன போசனங்கள் செய்திடவே
கொள்ளை யுத்தம் பஞ்சம் குரங்காகிப் போனேன்டி
நெல்லைப் பதுக்கி வைத்து நிட்டூரம் பண்ணிடுவார்

கொல்லை வழிப் போகாது குடிசைவழி வந்தாயோ
ஏழைக் குடிசையிலே ஏன் பிறந்தாய் செல்வமுத்தே
எத்தனையோ சீமாட்டி ஏங்கித் தவங்கிடக்க
என் வயிறுதான் தேடி ஏன் பிறந்தாய் செல்வமுத்தே

எனப் பஞ்சம் பற்றிய சித்திரம் தாய்மார் பாடும் தாலாட்டுக் கண்ணிகளில் இடம் பெற்றுள்ளது. மா. — கோதண்டராமன் சேகரித்துத் தொகுத்த 'வடார்க்காடு மாவட்ட நாட்டுப்புறப் பாடல்கள்' எனும் தொகுப்பில் (பக். 321-322) இக் கண்ணிகளைக்

காணலாம். இதே பொருளமைதியுள்ள பாடற் கண்ணிகள் **மா. வரதராஜனின்** 'தமிழக நாட்டுப் பாடல்கள்' எனும் தொகுப்பிலும் (ப. 69). **தமிழண்ணலின்** 'தாலாட்டு' எனும் தொகுப்பிலும் (ப. 99). **ஆறு. அழகப்பனின்** 'தாலாட்டுக்கள் ஐநூறு' எனும் தொகுப்பிலும் (பக். 38-39). **மெ. சுந்தரம்** தொகுத்த 'நாட்டுப்புறப் பாடல்கள்' எனும் தொகுப்பிலும் (பக். 227, 289) காணப் படுகின்றன.

## தனுஷ்கோடிப் புயல் பாடல்கள்

கீழ்க்காணும் பாடல்கள் ஆய்வாளர் செ. போத்தி ரெட்டி தமது எம். பில். பட்ட ஆய்வுக்காகத் திரட்டிய பாடல்களாகும். அவ்வாய்வேட்டின் பின்னிணைப்பில் இப்பாடல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. இவை இதுவரை பிரசுரிக்கப்படாத பாடல்களாகும்.

### 1. வருகுதையா ரயிலு - வண்டியைப் புரட்டுதய்யா புயலு

1. தனுஸ்கோடி பாம்பன்முதல்
தயங்காத இராமேஸ்வரம்
அநியாயப் புயலடித்து
அழிந்த கொடுமை பாடுகிறேன்
அமைதியாகக் கேளும்
இந்தக் கதையை எந்த நாளும்

2. கண்டோர் நடுநடுங்க
காற்றுமழை புயலடிக்க
மண்டலத்தில் இக்கதையை
மனத் தெளிவாய்ப் பாடுகிறேன்
மக்களைப் போல நினைத்து
சபை மன்னிக்கணும் பிழை பொறுத்து (தனுஸ்கோடி)

3, ஆயிரத்து தொள்ளாயிரத்து
அறுபத்து நாலாம் ஆண்டில்
வாய்மையுள்ள டிசம்பர் மாதம்
வளரும் தேதி இருபத்திரெண்டில்
அடித்தது புயற்காற்று
பாம்பன் தனுஸ்கோடியைப் பாத்து (தனுஸ்கோடி)

4. ஐயாயிரம் ஜனத்துக்கு மேல்
ஆணும் பெண்ணும் அவதிப்பட்டார்
பேய்மழையும் காற்றினாலே
பேதலித்து உயிரைவிட்டார்
ஐயோ துயரம் ஆச்சே
சில ஊரழிந்து போச்சே (தனுஸ்கோடி)

5. மாலைஎட்டு மணிக்கு மேலே
மதிப்படங்கா சாமத்திலே
வேலை சோலி தான் முடிந்து
வீற்றிருக்கும் வேளையிலே
வருகுதையா ரயிலு
வண்டியைப் புரட்டுதய்யா புயலு (தனுஸ்கோடி)

6. வடகடலும் தென்கடலும்
மண்மோதித் தான் கிளம்ப
தொடர்பாகச் சந்தித்துமே
சூறாவளி போல் கொதித்து
வண்டியைத் தூக்கி அடிக்க
மக்கள் மருவி மருவித் துடிக்க (தனுஸ்கோடி)

7. ஐநூறு ஜனத்துக்குமேல்
ஆணும் பெண்ணும் ரயிலில் வர
கை கால்கள்தான் முறிந்து
கடலோடு போகுதய்யா
ஐயோ பரிதாபம்
இது யாரு போட்ட சாபம் (தனுஸ்கோடி)

8. தனுஸ்கோடி ஊர்களெல்லாம்
தலைக்கு மேலே தண்ணீர்வர
துணியுடைகள் இல்லாமலே
தொங்குதய்யா வீட்டின் மேலே
மதில் இடிந்து சாய
மக்கள் தண்ணீரில் குதித்துப்பாய (தனுஸ்கோடி)

9. ஐயையோ மனைவி மக்கள்
அநியாயமாய்ப் போகுதென்று
மெய் சோர்ந்து மன்னவனும்

மெதுவாக இழுக்கும்போது
குடும்பத்தோடப் புரட்டி
வெள்ளம் கொண்டு போகுதே சுருட்டி (தனுஸ்கோடி)

10. வள்ளங்களும் லாஞ்சிகளும்
வளைக்கச் சென்ற தோணிகளும்
வெள்ளத்திலே அடியும்பட்டு
பள்ளத்திலே இழுக்குதுபார்
ஐயோ மக்கள் அலற
அடிபட்டுக் குடலும் சிதற (தனுஸ்கோடி)

11. வெள்ளரிப்பழம் போல
வெடித்துப் பிணம் மிதக்குதய்யா
அள்ளிக் கொண்டு புதைப்பதற்கு
ஆளுதவி கிடையாமல்
அலையடித்து ஒதுக்க
நாய் நரி கடித்து இழுக்க (தனுஸ்கோடி)

12. ஐந்து நாளாய் அடைமழையும்
அநியாயப் புயல் காற்றும்
கஞ்சித் தண்ணீர் இல்லாமல்
காதடைந்து கீழ் விழுந்தார்
அண்ணாந்து பார்ப்பார்
மக்கள் அழுது சோறு கேட்பார் (தனுஸ்கோடி)

13. இராமேஸ்வரம் ஊர்களிலே
தெருக்கள் எல்லாம் தண்ணீர் ஓட
பூமான்கள் கோவிலெல்லாம்
புரட்டித்தூக் கிஅடிக்குதுபார்
ஐயோ மக்கள் ஓட
அடுத்த திட்டில் ஏறி ஓட (தனுஸ்கோடி)

14. சித்தம் புகழ் நடிகரவர்
ஜெமினி கணேசன் சாவித்திரி
அந்த ராத்திரி வேளையிலே
அமைந்தாரே கோவிலுக்குள்
ஆயாசப் பட்டார்
நடிகர் அழுது கண்ணீர்விட்டார் (தனுஸ்கோடி)

15. உடுப்பதற்கோ உடையுமில்லை
உண்பதற்ாகா உணவுமில்லை
படுப்பதற்கோ பாயுமில்லை
பறக்குதுபார் வெள்ளத்திலே
பார்க்க பார்க்கத் துக்கம்
பார்த்துப் போனாலும் ஏக்கம் (தனுஸ்கோடி)

16. கக்கன்ஜி நெடுஞ்செழியன்
காமராஜர் அண்ணாதுரை
முக்கியமாய் பக்தவச்சலம்*
முதல் நடிகர் எம். ஜி. ஆர்.
பாம்பன் செய்தி கேட்டார்
பாங்காகவே புறப்பட்டார் (தனுஸ்கோடி)

17. ஏரோப்பிளேன் மீதேறி
எல்லோருமாய் சோறுகட்டி
வாரார்கள் தனுஸ்கோடி
வந்துபார்த்தார் இராமேஸ்வரம்
சோர்ந்து கண்ணீர் விட்டார்
சோற்று மூட்டை தூக்கிப் போட்டார் (தனுஸ்கோடி)

18, சோறுசோறு சோறு என்று
சுழலுதய்யா மக்கள் எல்லாம்
ஆரு சோறு போட்டாலும்
அரை வயிறு நிறையுதில்லே
நைந்தோடுது சோறு
மக்கள் புரட்டித் தின்பதைப் பாரு (தனுஸ்கோடி

19. சண்டாளப் புயலடித்து
தன உயிரும் வீடும் போச்சே
கண்டு கவர்மென்டாரும்
கன கோடி நிதி கொடுத்தார்
காமராஜரைத் தேடு
வேம்பார் பாக்கிய கவிபாடு

---

* இக்குறியிடப்பட்ட வரிகளுக்குப் பாடபேதம் உண்டு :
'முக்கியமாய் எம், ஜி. ஆர்.
முதலமைச்சர் பக்தவச்சலம்.

## 2. சேதுக்கரையும் அழிஞ்சுப் போச்சுதுங்க

புயலடிச்ச கதையைக் கேளுங்க — உங்களுக்குப்
புரியும்படியாச் சொல்லி வாரனுங்க

1. அண்ணன்மாரே தம்பிமாரே
அமைதியுள்ள தாய்மார்களே
பார்க்கப் பயங்கரமாப்
பாலர்களும் பெரியோர்களும்
மாண்டார் என்ற செய்தி
பாருங்க — மார்கழி
செவ்வாய் எட்டாம் தேதி
தானுங்க (புயலடிச்ச)

2. ஆயிரத்துத் தொள்ளாயிரத்து
அறுபத்து நாலாம் வருடம்
டிசம்பர் இருபத்திரெண்டில்
தேசம் எங்கும் பேறுபெற்ற
சேதுக்கரையும் அழிஞ்சிப்
போச்சுதுங்க — அதில்மக்கள்
சேதம் அதிகம் ஆயிப்
போச்சுதுங்க (புயலடிச்ச)

3. தரணியெங்கும் பேறுபெற்ற
தனுஸ்கோடி தீர்த்தம் ஆட
கல்லூரிப் பெண்கள் சிலர்
களிப்புடனே ரயிலில் வந்து
கடலில் விழுந்து மடிஞ்சிப்
போச்சுதுங்க — வண்டியுடனே
கதறி உயிருதானும்
போச்சுதுங்க (புயலடிச்ச)

4. குழந்தைகள் இல்லையெனறு
கோடித்தவம் கிடந்து
அருமையுடன் பெற்றெடுத்த
ஆண்குழந்தை பெண்குழந்தை
அந்த வண்டியில்தானே
போச்சுதுங்க — பெற்றோரெல்லாம்
அலறி அழுது
புலம்பலாச்சுதுங்க (புயலடிச்ச)

5. சேத்திரத்தில் பேறுபெற்ற
சேது ராமேஸ்வரத்திலே
ரெண்டு மணிக்கு மேலே
எங்கோ புயலடித்து
எல்லோரையும் தாக்கலாச்சுதுங்க
மக்கள் எல்லாம்
இறைவனடியை
நோக்கலாச்சுதுங்க (புயலடிச்ச)

6. ஓட வழியுமில்ல
உதவி செய்ய எவருமில்லே
தப்பிப் பிழைப்போமென்றால்
தண்ணீர் அங்கே விடவுமில்லை
உயிரிழந்தார் பாதி என்றுங்க
மறுதினம்
உலகமெங்கும்
சேதிதானுங்க (புயலடிச்ச)

7. புயலடிச்ச அந்த ஒரு
சேதி கேட்டு
அகிம்சையுள்ள நேரு சர்க்கார்
விமானம் ஏறிப்
பறந்து வந்தாருங்க
மக்களைக் காக்க
வேகமுடன் வந்து
சேர்ந்தாருங்க (புயலடிச்ச)

8. ஆடிழந்து மாடிழந்து
அமர்ந்திருந்த வீடிழந்து
கோயில் பிரகாரத்தில்
குடியிருந்தார் மக்களெல்லாம்
கக்கன் அவர்கள் நேரில்
பார்த்தாருங்க — மக்களெல்லாம்
கண்ணீர் விட்டுத்தான்
அழுதாருங்க (புயலடிச்ச)

9. அஞ்சாதே மக்கள்என்று
கஞ்சித் தொட்டிதான் அமைத்து
மிஞ்சி இருந்தவர்க்குப்
பஞ்சம் இல்லாமல் செய்த

தலைவர் எல்லாம் வாழ்க
என்றுங்க—நாம் எல்லோரும்
பிரார்த்தனைகள் செய்வோம்
இன்றுங்க (புயலடிச்ச)

10. மீன்பிடித்து உயிர்வளர்க்கும்
மீனவர்கள் குடிசை எல்லாம்
கரையருகில் இருந்ததினால்
கரையூருக் கிராமமது
கடலுக்குப் பகை ஆகிப்
போச்சுதுங்க—பக்கத்திலிருந்த
மேட்டுத்தெருவும் அழிஞ்சிப்
போச்சுதுங்க (புயலடிச்ச)

11. மார்க்கட்டுத் தெருவினிலே
மாரளவுத் தண்ணியிலே
மக்கள் எல்லாம் அவதிப்பட்டு
மனம் வருந்தும் வேளையிலே
தொண்டர் படைகள் உதவி
செய்தாருங்க—மக்களுக்காகத்
தொடர்ந்து அவர்கள்
பணி புரிந்தாருங்க (புயலடிச்ச)

12. இடி மழைக்கு அசையாமல்
இருந்து வந்த பாலமதை
சண்டாளப் புயலடித்து
சதி செய்து விட்டதாலே
பாம்பன் பாலமும் அழிஞ்சிப்
போச்சுதுங்க—மக்களெல்லாம்
பரிதவித்துப்
புலம்பலாச்சுதுங்க (புயலடிச்ச)

13. இப்படி விபத்துகளும்
இனி நடக்காதிருக்கவென்று
எல்லோரும் ஒற்றுமையாய்
இறைவனடியைப் போற்றிடுவோம்
இயற்றினார் வாணிதாசனுங்க
இந்தியாவில்
எல்லோருக்கும் நேசன்
தானுங்க. (புயலடிச்ச)

## 3. பாழாப்போன அறுபத்து நாலாம் வருஷம்

1. வாரும் பெரியோர்களே!
வாலிபரே! தோழர்களே!
வணக்கங்கள் பலகோடி
ஜனங்களுக்கு வரங்கொடுத்த தனுஷ்கோடி நகரத்திலே
வஞ்சகப் புயலடித்த சஞ்சலத்தைச்—சொல்லி வாரேன்
வண்ணத்தமிழ் கவிபாடி—சொல்லி வாரேன்
வண்ணத்தமிழ் கவிபாடி

2. ஒருவர் இருவரல்ல எத்தனை பிணங்களென்று
உறுதி தெரியவில்லையே—இறந்தவர்கள்
உடலும் கிடைக்கவில்லையே—கடற்கரையில்
ஊதிப்போன பிணங்களைக் காக்கை கொத்தித் தின்ன சேதி
உள்ளமே பொறுக்கவில்லையே—அதை நினைக்க
உள்ளமே பொறுக்கவில்லையே

3. பாழாப்போன அறுபத்தி நாலாம் வருஷம் அடிச்ச
பயங்கரப் புயலைப் பாரு—அதே வருஷம்
பண்டித நேருவுமே இறந்தாரு—ஏப்ரலில்
பள்ளிக்கூடமும் இடிந்து டிசம்பரில் புயலடித்து
பலபேரும் மாண்டு போனாரு—கடலுக்குள்ளே
பலபேரும் மாண்டு போனாரு

4. இருபத்திரெண்டாம் தேதி செவ்வாய்க்கிழமையன்று
இரவெல்லாம் மழைபொழிய—இரைச்சலோடு
ஏகமாய்ப் புயலடிக்க—தனுஷ்கோடி
எல்கையிலே கடல்பொங்கி தொல்லைப்பட்ட மக்களெல்லாம்
என்ன செய்வோம் என்று துடிக்க—பொதுஜனங்கள்
என்ன செய்வோம் என்று துடிக்க

5. தென்னமர உயரம் மக்களை அழிப்பதற்கு
சீறிவந்த கடலலையே—தனுஷ்கோடித்
தெருவுக்குள்ளே பொங்கி நுழைய—காயம்பட்ட
சின்னஞ்சிறு புள்ளக்குட்டி குடும்பத்தார்களுடன்
திக்குத் தெரியாமல் அலைய—பொதுஜனங்கள்
திக்குத் தெரியாமல் அலைய

6. தனுஷ்கோடியிலுள்ள பங்களாக் கட்டிடமெல்லாம்
தரைமட்டமாக இடிய—ஐயோ என்று
சத்தமாக மக்கள் மடிய—நிமிடத்திலே
சமுத்திரத் தேவியவள் கணக்கற்ற பிணங்களைத்

தாவியே விழுங்கி முடிய—புயல் அலைகள்
தாவியே விழுங்கி முடிய

7. மண்டபத்திலே இருந்து தனுஷ்கோடி செல்லக்கடல்
மத்தியிலே பாம்பன் பாலம்—கணக்கு
ஒரு மைலிருக்கும் அதன் நீளம்—கடல்அலைகள்
மாறிமாறி மோதி இரும்புப் பாலத்தை
மடக்கி எறிந்த கோலம்—பாலத்தைக் கடல்
மடக்கி எறிந்த கோலம்

8. திருவனந்தபுரம் புறப்பட்டு நேரடியாகச் சென்று
சென்னை செல்லுகின்ற ரயிலாம்—மதுரைவிட்டு
சீக்கிரமாய் வந்த மெயிலாம்—பள்ளப்பட்டியில்
திண்டுமுண்டா பேந்து ரயில் விழுந்து
தேசமெல்லாம் பெருந்திகிலாம்—ரயில் விழுந்து
தேசமெல்லாம் பெருந்திகிலாம்

9. பள்ளப்பட்டி ரயில் விபத்தில் ஆறுபேர் மரணமென்று
பத்திரிகைச் செய்தி வந்தது—ஜனங்களெல்லாம்
பதறி மனசு நொந்து காயப்பட்டது—பதின்மூன்றுபேர்
மதுரை ஆஸ்பத்திரியில் போய்ப் பார்க்கப்
பரிதாபமாக இருந்தது—பார்க்கப்
பரிதாபமாக இருந்தது

10. சின்ன பின்னமாக ரயிலில் விழுந்து இருநூறுபேர்
செத்துப் போனார் கடலுக்குள்ளே—அதுசமயம்
செய்தி சொல்ல நாதியுமில்லே—அப்போ
டெலிபோன் கம்பிகளெல்லாம் அறுபட்டு போனதாலே
செய்தி சொல்ல நாதியுமில்லே—அங்கிருந்து
செய்தி சொல்ல நாதியுமில்லே

11. அன்றிரவு சாவித்திரி ஜெமினி கணேசனோடு
ஆண்குழந்தை வரம் வாங்க—இராமேஸ்வரத்துக்கு
ஆவலோடு சென்றிருந்தாங்க—அதுசமயம் புயலடித்த
அறிகுறி கண்டவுடன் இராமேஸ்வரம் கோயில் சென்று
அங்கேயே இருந்து கொண்டாங்க—கோயில் சென்று
அங்கேயே இருந்து கொண்டாங்க

12. அடுத்தநாள் காலையிலே அலைகளொடுங்கிக் கொஞ்சம்
அமைதியுடன் இருக்க—கடலுக்குள்ளே
ஆயிரம் பிணங்கள் மிதக்க—கரையோரத்தில்
அழுகிய பிணங்களும் ஒதுங்கி—அலங்கோலமாய்

அடையாளமில்லாமல் கிடக்க—கரையோரத்தில்
அடையாளமில்லாமல் கிடக்க

13. கடலிலே மிதந்து வந்த பிணங்களை விமானங்கள்
கரையோரம் கொண்டு சேர்க்க—பக்தவச்சலம்
காமராஜர் சென்று பார்க்க—கிருஷ்ணமாச்சாரி
கக்கரோடு ராமையாவும் பெரியார் மதியழகன்
கலங்கிக் கண்ணீர் வடிக்க—பிணங்களைக் கண்டு
கலங்கிக் கண்ணீர் வடிக்க

14. சாவித்திரி ஜெமினியும் பதினைந்தாயிரம் ரூபாய்
தாராளமாய் நிதியளிக்க—பத்தாயிரத்தை
சரோஜாதேவியும் கொடுக்க—கொடையில் பெரும்
சக்கரவர்த்தி எம்.ஜி. ஆரும் ஒரு லட்ச ரூபாய் தந்து
ஜனங்கள் கண்ணீரைத் துடைக்க—ஒரு லட்ச ரூபாய் தந்து
ஜனங்கள் கண்ணீரைத் துடைக்க

15. இந்தியப் பிரதமர் சாஸ்திரி இதற்காக எழுபதாயிரம்
கொடுத்தார் நாட்டில் பலர்—இன்னும்
ஏதேதோ நிதிகளும் தந்தார்—இன்னும்
எவரெவர் என்ன தந்து என்ன பயன் நிமிடத்திலே
இவ்வுலகைவிட்டு மறைந்தார்—நிமிடத்திலே
இவ்வுலகை விட்டு மறைந்தார்

16. சமுத்திரக் கரையிலே உயிரை இழந்தவர்க்கு
சஞ்சலக் கண்ணீர் வடித்து—பித்துப் பிடித்து
தவிச்சுப் புலம்பலாச்சு—கடவுளது
சக்தி உள்ள ஸ்தலமென்று தரணியெல்லாம் புகழும்
தனுஸ்கோடி அழிஞ்சு போச்சு—தரணிபுகழ்
தனுஸ்கோடி அழிஞ்சு போச்சு

17. நிலையற்ற வாழ்வையெண்ணி நிகரில்லே
என்று சொல்லி நெஞ்சத்தொட்டு—கவுரவம்
கொண்டு திரிபவர்கள்—ரொம்பப்பேரு
நாட்டிலே உண்டு ஆனாலும் அப்ப
மொத்த மொத்தமாக ஜனம் சமுத்திரத்தில்
நீரில் அன்று செத்து மடிந்தார்களே

18. பாழும் கடலுக்குள் மூழ்கியே உயிரிழந்தோர்
பைந்தமிழ்க் குடிசை நினைத்து—அவர்களுக்குப்
பரிதாபமாய்க் கவிதொடுத்து—மனமுருகப்
பாடுவது சொல்லழகு பாவலராம் தென்மதுரை
பச்சையப்பன் சொன்ன கருத்து—மதுரை டி. வி.
பச்சையப்பன் சொன்ன கருத்து.

## 4. அக்கினிக் கடலோரம் ஆகாயப் புயலும் வர...

ஆண்டாண்டு தோறுமிந்த
அதிசயத்தைப் பாராது
அண்ட சராசரங்கள் நடுநடுங்க—ஆகாய
புயலாய் வந்து ஆட்டி வைத்ததய்யோ

**தெம்மாங்கு மெட்டு**

ஐயோ பரிதாபத்தைக் கேளும்—அரன்
ஆண்டவனின் கோபமய்யா (ஐயோ)

ஆயிரத்தி தொள்ளாயிரத்தி
அறுபத்தினாலா மாண்டினிலே
மாதக் கடேசியிலே
மாயப் புயலினாலே (ஐயோ)

இருபத்திரண்டு தேதி
இரவுமணி ஒண்ணரைக்கு
ஆகாயமாய்க் கிளம்பி—புயல்
அறுபதடி உயரத்திலே (ஐயோ)

பாம்பன் பாலம் சரியலாச்சு
பட்கில்போன மக்கள்போச்சு
இன்னும் பல பேர்கள் போச்சு
இருந்ததெல்லாம் பிரியலாச்சு (ஐயோ)

பார்க்கப் பரிதாபமாச்சு
பண்ட பாத்திரங்கள் போச்சு
ஆடு மாடு வீடு போச்சு
அத்தனையும் சேர்ந்து போச்சு (ஐயோ)

பத்துமணி நேரத்திலே
பாம்பன் விட்டுப்போன வண்டி
புதுரோடு போகையிலே
புயலும் வந்து சேர்ந்ததய்யோ (ஐயோ)

உல்லாசமாக வந்த
ஒய்யாரப் பெண்கள் எல்லாம்
அடுத்தடுத்த வண்டியிலே
ஆணும் பெண்ணும் போனாரையா (ஐயோ)

நம்புநாச்சி கோயிலுக்கு
நலம்தேடி வந்த பெண்கள்
எமனோலை வந்ததினால்
ஏறினாரே வண்டியிலே (ஐயோ)

தனுஷ்கோடி போனவண்டி
தலைகவிழ்ந்து கீழ்விழுக
எல்லோரும் சேர்ந்து டிரைவர்
எமலோகம் சேர்ந்தாரையா (ஐயோ)

தாங்க முடியாமலே
தனுஷ்கோடி வாழ்ந்த மக்கள்
பொல்லாப் புயலினாலே
பிள்ளைகளும் போனதய்யா (ஐயோ)

தப்பிப் பிழைப்போமென்று
தனித்தனியாய் போனமக்கள்
தங்கமணிக் கோர்வையுடன்
தண்ணீர் கொண்டு போனதையோ (ஐயோ)

ஆலாப் பறந்து மக்கள்
அலைமோதி நிற்கையிலே
பேய்ப்புயல் வேகத்திலே
பிணக்கோலமானாரையா (ஐயோ)

தனுஷ்கோடி எல்லையிலே
தங்கிக் கிடந்த வண்டி
மிச்சமுள்ள பேர்களையும்
நிர்கதியாய்க் காத்ததய்யா (ஐயோ)

இந்திய மக்களேற்றி
இலங்கைத்தீவு போன கப்பல்
காற்றுப்புயல் வேகத்திலே
கரைபுரண்டு போனதையோ (ஐயோ)

இன்னும் பரிதாபமதை
எடுத்துச் சொன்னேன் கேளுமய்யா
பொல்லாப் புயலினாலே
தொல்லை வந்து சேர்ந்ததய்யா (ஐயோ)

வட கடலோரத்திலே
வாரி அடித்த புயல்
வாழை கமுகு தென்னை
வேரோடு சாய்ந்ததய்யா (ஐயோ)

அக்கினிக் கடலோரம்
ஆகாயப் புயலும் வர
அம்பெடுத்து வில்லெடுத்து
அரிராமர் எய்துவிட்டார் (ஐயோ)

பாராளும் ராமபிரான்
பக்கத்திலே வந்தபுயல்
பாப்பார வீதிவிட்டு
பறந்தோடிப் போனதய்யா (ஐயோ)

புயலாலே வந்ததெல்லாம்
போட்டேன் முத்துச்சாமி கீதம்
பிழையேதும் இருந்தாலே
பொறுத்தருள வேண்டுமையா (ஐயோ)

## 5. ஆங்கார வேகமுடன் புயலும் ஆட்டி வதைத்ததையோ

இனிமேலாகிலும் அத்துயரம் வராது கண்டேன்
இவ்வுலகில் நாமும் இன்பமாய் வாழ்ந்துமே இறைவனைப்
பணிவோமே

### ஆனந்தக்களிப்பு
### 'தந்தனத்தானே' என்ற மெட்டு

ஆண்டவன் சோதனையோ
இப்படிக் கினைக்காளானோம்
எப்படியாகிலுமே—எங்கள்
ஈசனே தீர்த்தருள்வாய் (ஆண்டவன்)

ஆங்கார வேகமுடன் புயலும்
ஆட்டி வதைத்ததையோ—அன்று
ஆடவர் பெண்களுமே பதறி
அலறித் துடித்ததையோ (ஆண்டவன்)

பாட்டாளி மக்களுமே கூடிப்
படகேறிப் போனாரையா—அந்த
பாவிப்புய லாலே உள்ளம்
பறந்தோடிப் போனதையா (ஆண்டவன்)

காலக் கொடுமையாலே இப்போ
காணாததைக் கண்டோமையா—அந்தக்
கடலோட தூண்டியும்
காணாமப் போனதையா (ஆண்டவன்)

ஏரி குளங்களுமே இருந்த
இடம் தெரியலய்யா—இன்னும்
எத்தனையோ இடமும்
இல்லாமல் போனதையா (ஆண்டவன்)

## 6. ஆகாயப் புயலும் வந்து ஆட்டி வைத்த கொடுமை

### விருத்தம்

அளவில்லாப் பெருமை கொண்டு
ஆதரித்திடவுமானார் பரபரப்புடனே
வந்து பசிதனைத் தீர்த்திட்டாரே

### எடுப்பு

### 'ஆண்டிப் பண்டாரம்' என்ற மெட்டு

ஆதரித்தாரே—பசி
தீர வைத்தாரே (ஆதரி)

1. ஆகாயப்புயலும் வந்து
ஆட்டி வைத்த கொடுமையிலே
பட்டினியால் வாடி மக்கள்
பரிதவிக்கும் வேளையிலே (ஆதரி)

2. அரசாளும் மன்னர்களும்
அவசரமாய் ஓடிவந்து
திட்டமிட்டு வேலை செய்து
கொட்டினாரே ரொட்டி மாவை (ஆதரி)

3. அரிசி கிடைக்காமலே
அலைமோதி நிற்கையிலே
உடனாகக் கொண்டு வந்து
சாக்கு மூட்டை தள்ளினாரே (ஆதரி)

4. இன்னும் பசியார்வதற்கு
ஏசுவின் குலத்தினராம்
கோதுமை மூட்டைகளைக்
கொண்டு வந்தே யளித்தார் (ஆதரி)

5. இந்திய சர்க்காருமே
எத்தனையோ மக்களுக்கு
கட்டுக்கட்டாக நோட்டைக்
கையாலே தந்துவிட்டார் (ஆதரி)

6. சென்னை வளம்புகழும்
சினிமா நடிகரான
எம்.ஜி.ஆர். அவர்களுமே
ஏழைக்கு உதவிசெய்தார் (ஆதரி)

7. பாம்பன்தீவு மக்களுக்குப்
பசிக்கொடுமை தீர்ப்பதற்குப்
பத்து நூறாயிரத்தைப்
பரிசாகத்தான் கொடுத்தார் (ஆதரி)

8. இராமகிருஷ்ணாசாமி செய்த
நன்றி மறப்பதில்லை
வீடிழந்த மக்களுக்கு
விளக்கேற்றி வைத்துவிட்டார் (ஆதரி)

9. அடியேன் முத்துசாமி
அமைத்தேன் இக்கவியை
படிப்போர் மனமகிழ்ந்து
பார்புகழ வேணுமய்யா (ஆதரி)

## 7. மீனைப் போலச் செத்துப் பிணங்கள் மிதக்கக் கூடாது

### விருத்தம்

அலைகடலும் புயலுமாய் வந்ததின்
பயனைக் கேளும் இனி எல்லாத்
துயரம் நீக்கி இன்பமாய்
வாழ்குவோமே

### எடுப்பு

### 'தந்தானமடி தந்தானம்' என்ற மெட்டு

மிருகம் போலச் சீறிவந்து
பாயக்கூடாது—புயலில்
மரங்கள் விழுந்து மக்கள் மேலே
சாயக் கூடாது (மிருகம்)

இடியும் மின்னல் காற்று மழையும்
சேரக்கூடாது--நம்ம
ஏழை மக்களைக் கெடுக்க புயலும்
சாரக் கூடாது (மிருகம்)

மீனைப்போல செத்து பிணங்கள்
மிதக்கக்கூடாது—அந்த
மிதந்த பிணங்க பொருளை கொள்ளை
அடிக்கக் கூடாது

நாயைப் போலே பிணத்தைத் தேடி
திரியக் கூடாது—நல்ல
நகையைப் பார்த்து எடுக்க மனது
கருதக் கூடாது

பிணத்தின் பொருளை எடுத்த முட்டாள்
இருக்கக் கூடாது—அவன்
போன வழியைப் பார்த்து நாமும்
நடக்கக் கூடாது.

## 8. பாயே ஒரு படகில்; பாய்மரமும் ஒரு படகில்

நாலே கலியாணமாம் நடக்குதய்யா சுந்தரிக்கு
சுந்தரியைத் துயிலுரித்தால் துரோபதையும் மாரணைப்பாள்
மாரப் பிடியாதியோ மாதம் சென்ற சூலியிவள்
சூலான மாத்தையிலே சுந்தரனைப் பெற்றெடுத்தாள்
பெற்ற அருமையென்ன பேருபெற்ற பெருமையென்ன
பேரு துலங்க வேணும் பெரியகுடி வாழவேணும்
வாழை ஒரு மரந்தான் வைகாசி மாம்பழம் போல்
மயில் கண்டேன் கானலிலே
காலத்தினால் வந்ததே புயல்
படகினிலே கரைதான் திரும்பவில்லையே
படகும் ஒரு படகும் பாய்மரமும் ஒரு படகில்
பாயே ஒரு படகில் படைத்ததே எங்களைத்தான்
இத்தகைய எல்லாமே சென்றதே இறைவனிடம்
இயற்கையா செயற்கையா இறைவன்தான் பதிலா
பதிலைச் சொல்ல வந்தால் பாய்மரமும் இல்லை
எனது பாயும் இல்லை
இதைக் கேட்க பாவிகளும் யாருமில்லை,

# துணை நூற்பட்டியல்

## தமிழ்

### அ. நூல்கள் :


அரவிந்தன், மு. வை., மு. ப. 1977. தமிழக நாட்டுப்பாடல்கள், லட்சுமி பதிப்பகம், சென்னை.

அழகப்பன், ஆறு. மு. ப. 1972. தாலாட்டுக்கள் ஐநூறு, பாரிநிலையம் சென்னை.

இ. ப. 1980. நாட்டுப்புறப்பாடல்கள் திறனாய்வு, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.

அழகிரிசாமி, கு. மு. 1987. இலக்கியச்சுவை, தேன்மழைப் பதிப்பகம், சென்னை.

அறவாணன், க. ப., மு. ப. 1987. தமிழர்மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள், தமிழ்க் கோட்டம், சென்னை.

இராகவன், வி. எஸ். வி., 1964. மார்கோபோலோ, லோட்டஸ் பப்ளிகேஷன்ஸ், சென்னை.

மு. ப. 1978. மெகஸ்தனீஸ், மணிவாசகர் நூலகம், சிதம்பரம்.

இராசநாயகம், முதலியார் செ. மு. ப. 1933. யாழ்ப்பாணச் சரித்திரம், சண்முகநாதா பிரஸ், யாழ்ப்பாணம்.

இராமநாதன், ஆறு., மு.ப. 1986. நாட்டுப்புறவியல் ஆய்வுகள், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.

கண்ணப்பன், தி. முத்து., மு. ப. 1978. சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம், அதிபத்தர் பதிப்பகம், சென்னை.

கந்தையாபிள்ளை, ந. சி. மு. ப. 1949. திராவிட இந்தியா, ஆசிரியர் நூற்பதிப்புக்கழகம், சென்னை.

கமால், எஸ்.எம்., முகமது செரீபு, நா. மு. ப. 1984. இராமநாதபுரம் மாவட்டம் வரலாற்றுக் குறிப்புகள், லெனின் சமூக வரலாற்று ஆராய்ச்சி நிறுவனம், பரமக்குடி.

| | |
|---|---|
| கனகசபைபிள்ளை, வி. மு. ப. 1962. | ஆயிரத்தெண்ணூறு ஆண்டு களுக்கு முற்பட்ட தமிழகம், கா. அப்பாதுரை (மொ. ஆ.), சென்னை. |
| குணசேகரன், கே.ஏ., மு.ப. 1988. | நாட்டுப்புற மண்ணும் மக்களும், நியூ செஞ்சுரி புக்ஹவுஸ், சென்னை. |
| மு. ப. 1988. | நகர்சார் நாட்டுப்புறக் கதைப் பாடல்கள், அகரம், சிவகங்கை. |
| கோதண்டராமன், மா., மு. ப. 1988. | வடார்க்காடு மாவட்ட நாட்டுப் புறப் பாடல்கள், ஆசிரியர், சென்னை. |
| சக்திவேல். சு., மு. ப. 1983. | நாட்டுப்புறவியல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம். |
| சண்முகசுந்தரம், சு. இ.ப. 1980. | நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கு, மணிவாசகர் நூலகம், சிதம்பரம். |
| இ. ப. 1981. | நாட்டுப்புறஇயல் சிந்தனைகள், மணிவாசகர் நூலகம், சிதம்பரம். |
| சுதாசிவ பண்டாரத்தார், டி.வி. ஆ. ப. 1968. | பாண்டியர் வரலாறு, கழகம் சென்னை. |
| சாமி. அ. மா., மு.ப. 1987. | தமிழ் இதழ்களின் தோற்றம்— வளர்ச்சி, நவமணி பதிப்பகம், சென்னை. |
| சிவசுப்பிரமணியன், ஆ. மு. ப. 1989. | பூச்சியம்மன் வில்லுப்பாட்டு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. |
| சிவத்தம்பி, கா. மு.ப. 1988. | தமிழில் இலக்கிய வரலாறு, நியூசெஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை. |
| சுந்தரம், மெ., மு. ப. 1981. | நாட்டுப்புறப் பாடல்கள், மணிவாசகர் நூலகம், சிதம்பரம். |
| சுப்பிரமணியன், தி. நா. இ. ப. 1987. | காட்டுமல்லிகை, அல்லயன்ஸ் கம்பெனி, சென்னை. |
| சுப்பிரமணியன், பா. ரா. மு. ப. 1975. | தமிழக நாட்டுப்பாடல்கள், தமிழ்ப்புத்தகாலயம், சென்னை. |

செல்லையா மெற்றாஸ் மயில் மு. ப. 1980. — வன்னிவளநாட்டுப் பாடல்கள், முல்லை இலக்கியவட்டம், மிதிலை, ஒட்டுசுட்டான்.

சோமலெ (எஸ். எம். லட்சுமணன் செட்டியார்) இ. ப. 1960. — செட்டிநாடும் தமிழும், பாரிநிலையம், சென்னை.

தமிழண்ணல் (பெரிய கருப்பன், இராம.), மு. ப. 1963. — தாலாட்டு, செல்வி பதிப்பகம், காரைக்குடி.

திருநாவுக்கரசு, மறை. மு.ப. 1974. — பெரியபுராண ஆய்வுரை (இரண்டாம் தொகுதி), மறைமலையடிகள் பதிப்பகம், சென்னை.

நவநீத கிருட்டிணன், மா., குணசேகரன், கே. ஏ. மு. ப. 1982. — கரகாட்டம், அகரம், சிவகங்கை.

பரந்தாமனார், அ.கி. இ. ப. 1966. — மதுரை நாயக்கர் வரலாறு, அல்லி நிலையம், சென்னை.

பாலசுப்பிரமணியன், சி. இ. ப. 1977. — இலக்கிய அணிகள், பாரிநிலையம் சென்னை.

பாலன், ஜெ., மு. ப. 1982. — சங்கறுக்கும் எங்கள் குலம், நெய்தல் பதிப்பகம், சென்னை.

பிள்ளை, கே. கே., மு.ப. 1960. — தென்இந்திய வரலாறு (தொகுதி 2), பழனியப்பா பிரதர்ஸ், சென்னை.

பெருமாள், அ.நா., மு.ப. 1987. — தமிழில் கதைப்பாடல், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

மு. ப. 1987. — நாட்டுப்புறவியல் சிந்தனைகள், தேன்மழைப் பதிப்பகம், சென்னை.

முருகானந்தம், ச., மு.ப. 1990. — கடற்கரைப் பரதவர் கலைச் சொல்லகராதி, தேன்மழைப் பதிப்பகம், சென்னை.

மு. ப. 1990. — ஆராய்ச்சித் தொகுதி, தேன் மழைப் பதிப்பகம், சென்னை.

மு. ப. 1990. — தமிழக நாட்டுப்புற மக்களின் பாடல்கள், தமிழ்ப் புத்தகாலயம், சென்னை.

மு. ப. 1990. — தமிழக நாட்டுப்புறச் சிறுவர் பாடல்கள், தாகம், சென்னை.

மோகனராசு, கு. மு.ப. 1988. அம்பாப்பாட்டு, ஸ்டார்பிரகரம், சென்னை.

ராஜம்கிருஷ்ணன், 1990. அலைவாய்க்கரையில், தாகம், சென்னை,

ரெனிவெல்லாக், ஆஸ்டின்வாரன், மு.ப. 1966. இலக்கியக் கொள்கை, எல். குளோரியா சுந்தரமதி(மொ.ஆ.), பாரிநிலையம், சென்னை.

லூர்து, தே., மு. ப. 1976. நாட்டார் வழக்காற்றியல் ஓர் அறிமுகம், தே. லூர்து, பெருமாள்புரம்,திருநெல்வேலி.

லேனா தமிழ்வாணன் (லட்சுமணன்). மு.ப. 1984. நாட்டுப்புறப் பாடல்கள், மணிமேகலை பிரசுரம், சென்னை.

வரதராஜன், மா. மு.ப. 1978. தமிழக நாட்டுப்பாடல்கள், வானதி பதிப்பகம், சென்னை.

வானமாமலை, நா., மு.ப. 1960. தமிழ் நாட்டுப் பாமரர் பாடல்கள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

மு. ப. 1964. தமிழர் நாட்டுப்பாடல்கள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

வேங்கடசாமி, மயிலை சீனி. மு. ப. 1974. பழங்காலத் தமிழர் வாணிகம், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ். சென்னை.

வேலுப்பிள்ளை, ஸி.வி. மு. ப. 1986. மலைநாட்டு மக்கள் பாடல்கள், அமைதி அகம் வெளியீடு, மதுரை.

ஜகந்நாதன், கி. வா., இ.ப. 1975. மலையருவி, சரசுவதி மகால், தஞ்சாவூர்.

ஜேம்ஸ் மரிய ஆரோக்கியம், த. இ. ப. 1990. பரதவர் வாழ்வியல், தேன்மழை பதிப்பகம், சென்னை.

**ஆ. கட்டுரைகள்**

அகத்தியலிங்கம், ச. சன-சூன், 1984. **நாட்டுப்புற வழக்குகள்**, நாட்டுப்புறவியல், இந்தியத் தமிழ் நாட்டுப்புறவியல் கழகக் காலாண்டிதழ், அண்ணாமலை நகர்.

இராமசாமி, மு., 1976. **பாண்டியன் நகரில் ஒரு பரிதாபம்**, ஆய்வுக்கோவை (தொகுதி 1), இந்தியப் பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.

கிருஷ்ணசாமி, வெ. 1984. **இலக்கிய ஆய்வில் வரலாற்று ஆய்வு முறையின் பங்கு,** ஆய்வுக்கோவை (தொகுதி 1), இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.

கிருஷ்ணமூர்த்தி, கோ. சூன்-சூலை, 1984. **முற்காலத் தமிழக வரலாற்றில் பெண்ணடிமைத்தனம்,** செம்மலர், மதுரை, மாதஇதழ்.

குணசேகரன், கே. ஏ. சூலை, 1983. **கிராமியக் கலையும் சமூகத் தேவையும்,** செம்மலர், மதுரை.

நவம். 1985. **ஆட்டக் கலைகளும் அனுபவச் செய்திகளும்,** செம்மலர், மதுரை.

கோதண்டம், கோ. மா. சூலை, 1989. **தமிழ் நாட்டில் வழங்கும் தெலுங்கு நாடோடிப் பாடல்கள்,** தாமரை, சென்னை, மாத இதழ்.

சிவசுப்பிரமணியன். ஆ., 1977. **பரதவரும் போர்ச்சுகீசியரும்,** வரலாற்றுப் பொற்றேர் மலர், மலர் வெளியீட்டுச் சங்கம், தூத்துக்குடி.

செப். 1982. **தாதுவருடப் பஞ்சமும் நாட்டார் பாடல்களும்,** செம்மலர், மதுரை.

டிச. 1986. **நாட்டார் பாடல்களும் வரலாறும்,** தாமரை, சென்னை.

சுப்பிரமணியன், ப. ரா. 11-7-1990. **நாட்டார் வழக்காறு—ஓர் உரையாடல்,** தினமணி, மதுரை.

சூர்யகலா, எஸ். 1985. **புதுவைப்பகுதி மீனவர் கும்மிப் பாடல்கள்,** ஆய்வுக்கோவை (தொகுதி 3), இந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றம், அண்ணாமலை நகர்.

திரு. நாகலிங்கம், 12-4-1989. **தமிழக நாட்டுப்புறப் பாடல்கள்,** தினமணி, சென்னை.

பீட்டர் தேவதாஸ், 1955. **அலைகடல் அளிக்கும் அழகு வெண்முத்து.** பனிமய மலர், தூத்துக்குடி.

| | |
|---|---|
| மாணிக்கம், 1987. | **நாட்டுப்புற விளையாட்டு — ஒரு சமூகவியல் பார்வை**, நாட்டுப் புறவியல் ஆய்வுக்கோவை (தொகுதி 1), இந்தியத் தமிழ் நாட்டுப்புறவியல் கழகம், அண்ணாமலைநகர். |
| ரகமி, 1988. | **எம்டன் குண்டு**, தினமணி, மதுரை, செப்டம்பர் 22ஆம் தேதி இதழ். |
| 1989. | **ஜய்ஹிந்த் செண்பகராமன்**, தினமணி கதிர், சென்னை, ஏப்ரல், 16, 23ஆம் தேதி இதழ். |
| விக்டர் இராசமாணிக்கம், ஞா., லவ்சன், வி. ஜோ. மார்ச்சு, சூன். 1988. | தமிழகக் கடற்கரையில் தொல் துறைமுகங்களின் இன்றைய நிலை, தமிழ்க்கலை, தமிழ்ப் பல்கலைக் கழகம், தஞ்சாவூர், |
| வெனான்சியுஸ், சுவாமி, 1983. | **முத்துக்குளித்துறையின் விசுவாசம்**, தூத்துக்குடி மறை மாவட்டக் கையேடு பொன் விழா மலர், தூத்துக்குடி. |
| ஜம்புலிங்கம், 1989. | **முத்துக்குளியலில் ஈடுபட்டவர்கள் குற்றவாளிகள்தானா?** தேடல், க. ப. அறவாணன் (ப. ஆ.), புதுவைப் பல்கலைக் கழகத் தமிழியல் துறை வெளியீடு, புதுச்சேரி. |
| ஜெரார்டுராயன், கே., 1987. | **பங்கு வரலாறு**, பங்கு வரலாறு நினைவு மலர், கீழவைப்பாறு. |


**இ. ஆய்வேடுகள்**


| | |
|---|---|
| குணசேகரன், மு., 1981. | தூத்துக்குடிப் பரதவர் சமூகப் பழக்க வழக்கங்கள், பிரசுரிக்கப் படாத எம். பில். பட்ட ஆய் வேடு, மதுரைப் பல்கலைக் கழகம், மதுரை. |
| சுப்புலட்சுமி, க. 1989. | திருமந்திர நகரில் தாய்த் தெய்வ வழிபாடு, பிரசுரிக்கப்படாத எம்.பில். பட்ட ஆய்வேடு, ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி. |
| போத்தி ரெட்டி, செ. 1981. | தனுக்கோடி நாட்டுப்புறப் புயற் பாடல்கள், பிரசுரிக்கப்படாத எம்.பில். பட்ட ஆய்வேடு, தென்திருவிதாங்கூர் இந்துக் கல்லூரி, நாகர்கோவில். |

## II English

### A. Books :


James Hornell, 1914. — The Sacred Chank of India, Government Press, Madras.

John C.B. Webster, 1977. — An Introduction to History, The Macmillan Company of India Ltd., New Delhi.

Robert Caldwell, Bishop, 1981. — A History of Tinnevely, Asian Educational Services, New Delhi.

Sheik Ali, B., 1984. — History : Its Theory and Method, Macmillan India Ltd., New Delhi,

Smith, Vincent A., 1967. — The Early History of India, Oxford,

Somasundaram, P.S., 1986. — Tirujnanasambandhar Philosophy and Religion, Vani Pathippakam, Madras,

Subramanian, P.R., 1972. — An Introduction to the Study of Indian Folklore, PRS Publications, Tuticorin,

Subramanian, N. 1978. — Historiography, Koodal Publishers, Madurai,


### B. Articles :


Chacko, P.I., Sambamoorthy, P.S. 1969. — Conditions of Existence in Twenty Pearl Banks in the Gulf of Mannar off Tuticorin Madras Journal of Fisheries (Vol. V), Government of Tamil Nadu, Madras.

Dhandapani, T.S., 1955. — Pearl Fisheries in India, The Hindu, Madras, March 28.

Isaac, A.D., Freda Chandrasekaran, 1969. — Report on the Survey of Pearl Banks off Ramanathapuram Coast during 1965, Madras Journal of Fisheries (Vol V). Govt. of Tamil Nadu, Madras.

Sambamoorthy, P.S., 1966. — On a Survy of the Pearl Banks of Tuticorin, Gulf of mannar in 1961-'62, Madras Journal of Fisheries (Vol.II), Govt. of Tamil Nadu, Madras.

Vaz, T.J. 1988. — The Prominant Catholic Church at Tuticorin : Our lady of Snows church 400 years, Old Marin Shrine, பனிமயமலர், தூத்துக்குடி.

# சிறப்புச் சொல்லகராதி


அரிஸ்டாடில் 13
அலெக்சாந்தர்
கொந்தரட்டனாவ் 19
அலெக்சாந்தர் துபியான்ஸ்கி 19
அழகப்பன், ஆறு 53
ஆக்டன் பிரபு 13
ஆரோக்கியசாமி 52
ஆலன் டண்டிஸ் 6
ஆற்றுப்படை 8
இராமசாமி 75, 76
ஊரகம் 7
ஊரக இலக்கியம் 8
எட்வின் கிரீன்லா 21
கஞ்சித் தொட்டிப் பஞ்சம் 52
கல்கி 50
காண்டொரெக்ட் 13
கார்லைல் 13
குணசேகரன், கே. ஏ. 75, 76, 77
கைலாசபதி, க. 20
கொலைச் சிந்துப் பாடல்கள் 24
கோதண்டராமன், மா. 52
சக்திவேல், அ 26
சங்க இலக்கியம் 44
சதாசிவபண்டாரத்தார்
டி. வி. 37, 38, 41
சமூக வரலாற்றுக் கும்மி
பாடல்கள் 25
சிலப்பதிகாரம் 9
சிவசுப்பிரமணியன், ஆ. 51
சிவஞானம், ம. பொ. 48
சிவரக் கோட்டை பாலத்தில்
ரயில் முட்டிய சிந்து 24
சீலே 13
சுந்தரம், மெ 23, 52, 53
சேதுப்பிள்ளை, ரா. பி. 36
சேது புராணம் 65
சோமசுந்தரம், பி. எஸ். 41
டையோனிசஸ் 13
தமிழண்ணல் 53
தலைமுறைகள் 60
தாலமி 29
திருக்குற்றாலக் குறவஞ்சி 42
துர்காட் 13
தூசிடைடஸ் 13
தேவையுலா 65
நச்சினார்க்கினியர் 40
நல்ல தங்காள் கதை 54
நாட்டுப்புறச் சிற்றிலக்கியம் 6
நாட்டுப்புறப் பேரிலக்கியம் 6
நாமக்கல் கவிஞர் 23
பத்மநாபன், நீல 60
பதிற்றுப் பத்து 39
பதினெண்கீழ்க் கணக்கு 41
பர்ஸி மாக்வின் 53
பரஞ்சோதி முனிவர் 42
பரந்தாமனார், அ. கி. 38
பாலிபியஸ் 13
பிரான்சிஸ் பேகன் 13
பிள்ளை, கே. கே. 54
பிளேக் சிந்து 24
பிளைனி 29, 30, 31
பின்ட்லே 13
புறநானூறு 39
புனித பிரான்சிஸ் சேவியர் 31
பூலித்தேவன் 17
பெரியாழ்வார் பாசுரம் 4
பொதுவியல் 3
மரக்கலராயர் 38
மாணிக்கம், வ. சுப. 7

**உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்**

**INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES**

டி.டி டி.ஐ. (அஞ்சல்), தரமணி,
சென்னை-6000 113


## அறக்கட்டளைச் சொற்பொழிவு வெளியீடுகள்

| | |
|---|---|
| இஸ்லாம் வளர்த்த தமிழ் | 15 00 |
| தமிழரின் தாயகம் | 10 00 |
| உ. வே. சா. சங்க இலக்கியப் பதிப்புகள் | 10 00 |
| இனிக்கும் இராசநாயகம் | 50 00 |
| பாவாணரும் தனித்தமிழும் | 12 00 |
| தேவநேயப் பாவாணரின் சோல்லாய்வுகள் | 10 00 |
| உ. வே. சா. காப்பியப் பதிப்புகள் | 10 00 |
| விவிலியம் திருக்குறள் சைவசித்தாந்தம் | 20 00 |
| அகலமும் ஆழமும் | 12 00 |
| செக்கிழுத்த செம்மல் சிதம்பரனார் | 15 00 |
| உ. வே. சா. இலக்கணப் பதிப்புகள் | 15 00 |
| மகாமதிப்பாவலர் | 11 00 |
| உலக முதன் மொழி தமிழ் | 12 00 |
| மறைமலையடிகளார் தனித்தமிழ்க் கொள்கை | 15 00 |
| தமிழ் தந்த வ. உ. சி. | 15 00 |
| உ. வே. சா. ஒரு தமிழ் வாழ்வு | 15 00 |
| வண்ணக் களஞ்சியப் புலவரின் குத்பு நாயகம் | 15 00 |
| மு வ. புதினங்களில் தமிழ்—தமிழினம் | 20 00 |
| பாவாணர் ஆய்வு நெறி | 25 00 |
| கிறித்துவமும் தமிழகமும் | 15 00 |
| நாமக்கல் கவிஞர் கவிதைகள்-தேசியம், காந்தியம் | 16 00 |
| தமிழில் அறிவியல்—அன்றும் இன்றும் | 25 00 |
| இதழாளர் ஆதித்தனார் | 26 00 |
| காந்தியப் பெருந்தலைவர் காமராசர் | 20 00 |